# முன்னேற்றஅறிக்கை
# 2022



**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

## உள்ளடக்கங்கள்


| தொ. இல | விவரம் | பக்க இல. |
|---|---|---|
| 01 | **சமூக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சியினை உறுதி செய்தல்** .............. கௌரவ மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க் அவர்களின் செய்தி | v |
| 02 | **இராஜாங்க அமைச்சர் அவர்களின் செய்தி** | |
| 2.1 | **புதிய முகமும் பார்வையும் கொண்ட ஒரு தலைமுறை பெண்கள் மற்றும் குழந்தைகள்**....... கௌரவ மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திருமதி. கீத்தா சமன்மலி குமாரசிங்க அவர்களின் செய்தி | vii |
| 2.2 | **வறுமையற்ற இலங்கையினை நோக்கிப் பயணிப்போம்** ......... கௌரவ சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவேல் அவர்களின் செய்தி | ix |
| 03 | **மகளிர், சிறுவர் மற்றும் சமூக வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினைப் புதுப்பிப்பதற்கு** ............ மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் திரு. நீல் பண்டார கப்புகின்ன அவர்களின் செய்தி | xi |
| 04 | **அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்** | **1-2** |
| 05 | **அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு** | **3** |
| 06 | **சமூக வலுவூட்டல் பிரிவு** | |
| 6.1 | **தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயலாக்கும் முறைமை** | **7** |
| 6.2 | **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு** | **8** |
| 6.3 | **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மற்றும் அதன் செயற்பாடு** | **9** |
| 6.3.1 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD) | 10 - 17 |
| 6.3.2 | சமூக சேவைகள் திணைக்களம் (DSS) | 18 - 27 |
| 6.3.3 | சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB) | 28 - 31 |
| 6.3.4. | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD) | 32 - 37 |
| 6.3.5 | முதியோர்களுக்கான தேசிய செயலகம் (NSE) | 38 - 41 |
| 6.3.6 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB) | 42 - 45 |
| 6.3.7 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) | 46 - 50 |
| 6.3.8 | கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI) | 51 - 53 |
| 6.3.9 | உளவளத்துணைப் பிரிவு | 54 - 57 |
| 6.3.10 | வெளிநாட்டு நிதியத்தினூடாக அமுலாக்கப்படும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள். | 58 |
| 6.4 | **அமைச்சின் நிர்வாகம் மற்றும் தொழிற்பாட்டுப் பிரிவு** | **59 - 61** |
| 07 | **பெண்கள் மற்றும் சிறுவர் செயற்பாடுகள் பிரிவு** | |
| 7.1 | **அறிமுகம்** | **64** |
| **7.2** | நிறுவனங்களின் அடிப்படையில் அபிவிருத்தி நிகழ்ச்சி த்திட்டங்களும், முன்னேற்றமும். | |
| 7.2.1 | அபிவிருத்திப் பிரிவு | 65 - 72 |
| 7.2.2 | திட்டமிடல் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு | 73 - 76 |
| 7.2.3 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகம் | 77 - 84 |
| 7.2.4 | முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திக் கருத்திட்டம் | 85 - 91 |
| 7.2.5 | நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | 92 - 105 |
| 7.2.6 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | 106 - 116 |
| 7.2.7 | இலங்கை மகளிர் பணியகம் | 117 - 127 |
| 7.2.8 | தேசிய மகளிர் குழு | 128 - 136 |



# சமூக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சியினை உறுதிசெய்தல் ........................

சமூக, பொருளாதார மறுமலர்ச்சியினை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தின் பொறுப்பினை நிறைவேற்றுதல், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் பொறுப்பு என்பதுடன், அது தொடர்பில் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் பணிகளினை நோக்கமாகக் கொண்டு திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பல பிரிவுகள் இவ் அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுகின்றன.

சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் அதாவது அங்கவீனமுற்ற நபர்கள், முதியோர்கள், குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்கள், பெண்கள், பிள்ளைகள் மற்றும் உளநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவது அமைச்சின் கடமைப் பொறுப்புக்களில் ஒன்றாகும்.

நவீன உலகின் தேவைகளுக்கும் மற்றும் எதிர்வரும் காலத்தில் முன்னெடுக்கவுள்ள பயணத்திற்கும் ஏற்றவாறு 33% வரையிலான 18 வயதிற்கும் குறைவான பிள்ளைகளிலிருந்து விளைத்திறனான குழந்தைகள் பரம்பரையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களினை விரிவுபடுத்துதல் மேலும் ஒரு பொறுப்பாகும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 52% வரையான பெண்களின் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பினை உறுதி செய்து அவர்களின் தற்போதைய சமூகப் பொருளாதார நிலையினை வலுவூட்டுதல் அதேபோல பெண்களுக்கு எதிரான வன்முறைகளினைத் தடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தியினை உறுதி செய்யும் கடமைப் பொறுப்பு இவ் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் அமைச்சின் இலக்கிடப்பட்ட சமுதாயத்திற்காக சேவைகளினை வழங்குவதில் எனக்கு தீவிரமாக உறுதுணையாகவிருந்த மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சருக்கும் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட ஒட்டுமொத்த பதவியணிக்கும் எனது இதயபூர்வமான நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**ரணில் விக்ரமசிங்க**

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்



# புதிய முகமும் பார்வையும் கொண்ட ஒரு தலைமுறை பெண்கள் மற்றும் குழந்தைகள்.......

இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் சுமார் 52மூஆன பெண்கள் சமுதாயத்தினருக்கு மற்றும் 33% ஆன 18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக பாதுகாப்பு, உரிமைகள், அபிவிருத்தி மற்றும் நலன்புரியை உறுதி செய்வதை மையமாகக் கொண்டு சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு பாரியதொரு செயற்பணியை நிறைவேற்று கின்றது.

தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் பரந்தளவில் நிகழ்ச்சி த்திட்டங்களை அமுல் படுத்துவதன் மூலம் சிறுவர்கள் மற்றும் பெண்களின் குறுங்கால மற்றும் நீண்டகாலத் தேவைகள் மற்றும் தீர்க்கப்படாதுள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது எமது முக்கிய முயற்சியொன்றாகும். சிறுவர் பாதுகாப்புக்காக 1929 தொலை பேசிச் சேவையை அமுல்படுத்தல், இல்லமயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்தல், முன்பிள்ளைப் பருவ சிறுவர்களுக்கான போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள், உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டங்கள், அலுவலர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் முன்பிள்ளைப் பருவ பௌதீகவளங்கள் அபிவிருத்தி உள்ளிட்ட நிகழ்ச்சி த்திட்டங்கள் பல இதில் உள்ளடங்கும்.

குறிப்பாக புதுப் பொழிவுடன் மற்றும் அனுபவத்தைக் கொண்டஅத்வெலபோன்றஅனுசரணையாளர் பெற்றோர் பாதுகாவலர் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல் உட்பட கிராமிய மட்டத்தில் சிறுவர்களின் சிக்கல்களுக்கு நேரடியாக நிவாரணம் வழங்குவது எமது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டியபணிகளாகும். அதன் மூலம் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு பலம்மிக் கநிலையான அடித்தளம் அரசமற்றும் தனியார்துறையின் தலையீட்டுடன் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

பெண்களின் பாதுகாப்புமற்றும் அரவணைப்பு உறுதி செய்து அவர்களின் இன்றைய சமூக பொருளாதார நிலைமையை வலுவூட்டி அவர்களை உயர் சமூக மட்டத்திற்கு உயர்த்துவது அமைச்சின் பெண்களை வலுவூட்டும் செயன்முறைஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, சட்டங்கள், விதிகள் மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கு மேலதிகமாக பயிற்சி, விழிப்புணர்வூட்டல், திறன்விருத்தி, கடன் மற்றும் தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும்,பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தியை உறுதி செய்வதற்கும், பெண்களின் சுகாதாரம், போசாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், நிறுவன சட்டகத்தை வலுவூட்டுவதற்கும் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கேளரவ சனாதிபதி மற்றும் அரசின் அனுசரணையின் கீழ் பெண்களை வலுவூட்டும் தேசிய கொள்கையைத் தயார் செய்தல், பெண்களுக்கான விசேட சட்டமொன்றை ஆக்குதல், பெண்கள் ஆணைக்குழுவை தாபித்தல் உள்ளிட்டநிறுவனப் பொறிமுறைகளை வலுவூட்டும் செயற்பாடுகள் பல நிறைவேற்றப் பட்டுவருகின்றன.

பொதுவாக தமது உரிமைகள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புக்களுக்காக பலம்மிக்க வாறுகுரல் எழுப்ப முடியாது தவிக்கும் அன்புமிக்க சிறுவர் சமுதாயத்தினருக்காக மற்றும் பல் வேறு அநீதிகளுக்கு ஆளாகி, பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற பெண்கள் பரம்பரையினர் எதிர் கொள்ளும் எந்தவொரு சவாலின் போதும் அதற்காக செயற்படுவது எனஒரே திடசங்கற்பமாகும்.

**கீதா சமன்மலீ குமாரசிங்க**
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.

# வறுமையற்ற இலங்கையினை நோக்கி அடியெடுத்து வைப்போம் ..........



மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தின் மூலம் வளமான நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கு சமூகத்தினை வலுவூட்டுவதுடன், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இவ் அமைச்சினூடாக பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை 2022 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கு முடிந்தமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

குறைந்த வருமானப் பயனாளிகள், அங்கவீனமுற்ற நபர்கள், விசேட நிவாரணங்கள் தேவையான சமுதாயத்தினை, பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டுவதற்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவுக்கு 2022 ஆம் ஆண்டு தெடர்பில் ரூபா. 108,713.70 ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதிலிருந்து சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு ரூபா. 55,500 மில்லியனும், அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு ரூபா. 4,860 மில்லியனும், அடையாளம் காணப்படாத சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 2,646.62 மில்லியனும், 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு ரூபா. 13,550 மில்லியனும், 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு ரூபா. 33.59 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீட்டுப் பொருளாதார உற்பத்திகளினை ஊக்குவித்து கிராமியப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்வதனூடாக தேசியப் பொருளாதாரத்தினை வலுவூட்டுவற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அங்கவீனமுற்ற நபர்களினதும் மற்றும் முதியோர்களினதும் உரிமைகளினைப் பாதுகாத்தல், அவர்களின் நலன்புரி, தனிநபர் ஆளுமை விருத்தியினூடாக பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்கு சமுதாயத்தினை உள ரீதியாக வலுவூட்டுவது எமது பிரதான நோக்கங்களாகும்.

தற்போது ஓய்வூதியம் கிடைக்கப் பெறாத மக்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களினை ஊக்குவித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், சமூகப் பணி, சமூக அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்குத் தேவையான கல்வியினை வழங்குதல், கிராம அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயம் தொடர்பில் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வினை முன்னெடுத்தலுக்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதும் எமது அமைச்சினூடாக இடம்பெறுகிறது.

இவ்வாறாக, பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வை மீட்டெடுத்தல், தேசியப் பொருளாதாரத்தினை மேன்மைப்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு சரியான வழிகாட்டலினை வழங்கும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் அது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அமைச்சின் செயலாளர் உட்பட பதவியணிக்கும் எனது மனமார்ந்த நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அனுப பெஸ்குவெல்,**
சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்.

## மகளிர், சிறுவர் மற்றும் சமூக வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினைப் புதுப்பிப்பதற்கு ............



அங்கவீனர், முதியோர் வறியோர், சிறுவர் மற்றும் பெண்கள் என முக்கிய இலக்குக் குழுக்களினை மையமாகக் கொண்டு இவ்வமைச்சு மிகப் பரந்த சமூகப் பணியொன்றினை நிறைவேற்றிவருதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் கலந்துரையாடப்படும் இவ்வேளையில் எனது அமைச்சினூடாக 2022 செப்ரெம்பர் 30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தினை முன்வைப்பதற்கு வாய்ப்புக் கிட்டியமை தொடர்பில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பொருளாதார ஸ்திரத் தன்மையினை நோக்கமாகக் கொண்டு, சமூக வலுவூட்டல் தொடர்பில் தேசியக் கொள்கை உருவாக்கம் தொடங்கியுள்ள இத் தருணத்தில், வறுமையினை ஒழித்து தேசத்திற்கு செழிப்பினைக் கொண்டுவருதல், அத்திட்டங்களின் மூலம் சாதிக்க வேண்டிய உன்னதமான சவாலொன்றாகும். அதேபோல நவீன உலகின் தேவை மற்றும் எதிர்காலப் பயணத்திற்குப் பொருந்துமாறு விளைத்திறனான சிறுவர் சந்ததியொன்றினைக் கட்டியெழுப்புதல், பெண்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் நலன்புரியினை முன்னெடுப்பதும் அவ்வாறான முக்கியமான பணியொன்றாகும். இது போன்ற சூழலில் தேசியக் கொள்கைகள், திட்டங்களுக்கிணங்கிய முறைமையில், அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள பிற அரச நிறுவனங்களின் குறுகிய கால, நடுத்தரக் கால மற்றும் நீண்ட கால மூலோபாயங்களினைத் திட்டமிட்டு 2030 ஆம் ஆண்டளவில் தேசிய ரீதியில் எதிர்பார்த்த பலன்களினை எட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று எனது செயலூக்கமான பங்களிப்புடன் கௌரவ மகளிர், சிறுவர் அலுவலகள் மற்றும் சமூக வலூட்டல் அமைச்சரின் தலைமையின் கீழ் ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் குறிப்பிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அத்தகைய சாலை வரைபடத்தில் சகல நிறுவனம்சார் செயற்பாடுகளினை முன்னோக்கிக் கொண்டு சென்று இதுவரை அறிக்கையிடப்படும் 14.3 ஆன மக்கள் தொகை வறுமைக் குறியீட்டினைக் குறைப்பதற்கும், குறைந்த வருமானப் பயனளாகளினை உயர் வருமானம் பெறும் நிலைக்கு உருவாக்குவதும், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் போன்ற பிற ஓரங்கட்டப்பட்ட சமுதாயத்திற்கு அதிகளவிலான நலன்புரி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதும், ஓய்வூதியம் கிடைக்கப் பெறாத சமுதாயத்திற்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களினை ஊக்குவித்தல், சிறுவர் மற்றும் பெண்கள் உரிமைகளினைப் பாதுகாத்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் நலன்புரியினை முன்னெடுத்தல் எமது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளின் எல்லைக்குள் அடையப்படவேண்டிய உன்னதமான எதிர்பார்த்த பெறுபேறாகும். இது தொடர்பில் வாழ்வாதாரச் செயற்திட்டங்கள், நுண்ணிய சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிதிக் கடன் செயற்திட்டங்கள் மற்றும் இலக்கிடப்பட்ட சமூகத்தினை உள்ளடக்கிய பல செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு இது வரை அமுலாக்கப்பட்டு வருகிறது.

மேலும் 2023 ஆம் ஆண்டில் இவ்வாறான முறையில் இலக்கிடப்பட்ட குழுக்களில் காணப்படும் பொருளாதார சமூகப் பிரச்சினைகளினைக் குறைப்பதன் மூலம், இச் சேவைகளினை சமுதாயத்திற்கு மிகவும் விளைத்திறன் மற்றும் வினைத்திறனாக வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். இது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனது அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களின் நிறுவனங்கள், பிரிவுகளின் சகல பதவியணிக்கும், சரியான முறையில் வழிநடாத்தப்படும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரமதர் அவர்களுக்கும், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சரிற்கும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளர் திரு. கே..எம். மகிந்த சிறிவர்தன அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நீல் பண்டார கப்புகின்ன,**
செயலாளர்,
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

# 04. அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2288/43 என்ற இலக்க மற்றும் 2022.07.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. இவ்வமைச்சு, சமூக வலுவூட்டல் பிரிவு மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் பிரிவு என்ற இரு பிரிவுகளின் கீழ் செயலாக்கப்படுகிறது. இவ்வமைச்சின் கீழ் செயலாக்கப்படும் திணைக்களங்கள், நிறுவனங்கள், பிரிவுகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் தொடர்பிலும், 2022.09.30 ஆந் திகதி வரை பெற்றுக் கொண்ட நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பிலான தகவல்களும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் பிரதான செயற்பாடு மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

- அரசினூடாக அமுலாக்கப்பட்டுவரும் தேசியக் கொள்கைகளின் கீழ் அமைக்கப்பட்ட மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் விடயங்கள் மற்றும் அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை வடிவமைத்தல், அமுலாக்குதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை வினைத்திறனாகவும் மற்றும் சிநேகபூர்வமான வகையிலும் வழங்குதல்.
- விரயம் மற்றும் ஊழலினைத் துரத்துவதனூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கு புதிய முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளினை மறுசீரமைத்தல்.
- பெண்கள் பட்டயத்தினை அமுலாக்குதல்.
- அரச செயற்பாடுகளில் தீர்மானமெடுத்தல் மற்றும் அரசியல் களத்துறையில் பெண்களின் பங்களிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கு மூலோபாயங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.
- மோதல்கள் மற்றும் வறுமையினால் பீடிக்கப்பட்ட பெண்களினைன வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளினைத் தடுப்பதற்கான சட்டங்கள், கொள்கைகளினை வலுப்படுத்துதல் மற்றும் அமுலாக்குதல்.
- பாலினம் மற்றும் ஆண் பெண் பாகுபாடு அடிப்படையில், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளினைத் தடுப்பதற்கு தற்போதுள்ள சட்டங்களினைத் திருத்தி புதிய சட்டங்கள், கொள்கைகளினை உருவாக்குதல் மற்றும் அமுலாக்குதல்.
- பெண்களினை அடிப்படையாகக் கொண்ட குடும்ப அலகுகளினை வலுவூட்டுவதற்கு கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களினை வடிவமைத்தல் மற்றும் அமுலாக்குதல்.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் தொடர்பான பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றுதல்.
- முன்பள்ளிகள் தொடர்பிலான தேசியக் கொள்கையினைத் தயாரித்து அமுலாக்குதல்.
- உடல் ரீதியாகவும் மற்றும் உள ரீதியாகவும் ஆரோக்கியமான குழந்தைகளினை உருவாக்கும் நோக்குடன் முன்பிள்ளைப் பருவப் பராமரிப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வடிவமைத்தல்.
- பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக சர்வதேச தரத்திற்கு ஏற்ப நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.
- குழந்தைகள் பட்டயத்தினை அமுலாக்குதல்.

- குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களினை ஒழுங்குபடுத்துதல்.
- செவன சரண வளர்ப்பு பெற்றோர் பிரேரணை திட்டத்தினை அமுலாக்குதல்.
- அதிஉன்னதமான திறன்களினைக் கொண்ட பிள்ளைகளின் அத்திறன்களினை மேம்படுத்துவதற்கு நிதிசார் உதவிகளினை வழங்குதல்.
- சமுரத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் தேவைகளினை அடையாளம் காணுதல் மற்றும் அத்தேவைகளினைப் பூர்த்தி செய்தல்.
- பொதுசன உதவி பிரேரணைகள் திட்டத்தினை மீளாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் சிறந்த புதிய சீர்திருத்தங்களினை அறிமுகப்படுத்துதல்.
- காச நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள், தொழுநோயாளர்கள், புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளர்களுக்கும் மற்றும் அவர்களில் சார்ந்திருப்பவர்களுக்கும் உதவிகளினை வழங்குதல்.
- குடும்ப உளவளத்துணை சேவைகளினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மரபுகள் தொடர்பான நடவடிக்கைகள்
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதற்கும் உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பொதுப் போக்குவரத்தில் இணைந்து செயற்படுவதற்கு இயலுமானவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.
- முதியோர்களினைப் பராமரித்தல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதியோர்களின் பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

## 05. அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு

இவ் அமைச்சுக்கான செலவுத் தலைப்பு 171 இன் கீழும், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கான செலவுத் தலைப்பு 331 இன் கீழும், சமூக சேவைகள் திணைக்களத்திற்கான செலவுத் தலைப்பு 216 இன் கீழும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்திற்கான செலவுத் தலைப்பு 217 இன் கீழும் என்றவாறு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| செலவுகளின் வகை | 2022 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2022.01.01 - 2022.09.30 வரையான நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி) |
|---|---|---|---|
| **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - செலவுத் தலைப்பு 171** | | | |
| மூலதனம் | 3,664.78 | 2,639.95 | 1,024.83 |
| மீண்டுவரும் | 28,058.83 | 16,155.92 | 11,902.91 |
| **உபமொத்தம்** | **31,723.61** | **18,795.92** | **12,927.69** |
| **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - செலவுத் தலைப்பு 331** | | | |
| மூலதனம் | 164.70 | 48.62 | 116.08 |
| மீண்டுவரும் | 83,203.50 | 49,472.59 | 33,730.91 |
| **உபமொத்தம்** | **83,368.20** | **49,521.21** | **33,846.99** |
| **சமூக சேவைகள் திணைக்களம் - செலவுத் தலைப்பு 216** | | | |
| மூலதனம் | 39.00 | 11.60 | 27.40 |
| மீண்டுவரும் | 786.50 | 520.64 | 265.86 |
| **உபமொத்தம்** | **825.50** | **532.24** | **293.26** |
| **நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் - செலவுத் தலைப்பு 217** | | | |
| மூலதனம் | 61.15 | 42.11 | 19.04 |
| மீண்டுவரும் | 370.74 | 272.62 | 98.12 |
| **உபமொத்தம்** | **431.89** | **314.73** | **117.16** |
| **முழு மொத்தம்** | **11,6349.20** | **69,164.10** | **47,185.10** |

# 06. சமூக வலுவூட்டல் பிரிவு



## 6.1 தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயலாக்கும் முறைமை

### தொலைநோக்கு (சமூக வலுவூட்டல் பிரிவு)

**2030 ஆம் ஆண்டளவில் வறுமை மற்றும் பட்டினியற்ற இலங்கை**

### பணிக்கூற்று (சமூக வலுவூட்டல் பிரிவு)

**மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வாழ்வாதார உதவிகள், நுண்நிதிய வசதிகள், தொழில் வாய்ப்புக்கள், தொழில் சார்ந்த அறிவு மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதனூடாக பாதிக்கப்படக்கூடிய சமுதாயத்தினை வலுவூட்டுதல்.**

## செயலாக்கும் முறைமை

சமூகத்தில் வாழும் பின்தள்ளப்பட்ட நிலையிலுள்ள நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழல் மற்றும் வாய்ப்புக்களினை வழங்கி அவர்களினை அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதன் மீது அதிக கவனத்தினைச் செலுத்தி, குறைந்த வருமானப் பயனாளிகளின் வறுமையினைக் குறைப்பதற்குத் தேவையான அபிவிருத்திச் செயற்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகிறது. சமூக வலுவூட்டல் பிரிவுக்கு உரிய பின்வரும் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் செயலாக்கப்படுகிறது.

I. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)
II. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
III. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)
IV. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
V. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தினை அமைத்தல் (NSE)
VI. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
VII. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)
VIII. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)
IX. உளவளத்துணைப் பிரிவு

மேலும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் தொடர்பில் தேவையான நிர்வாகம் மற்றும் தொழிற்பாட்டு உதவியினை வழங்குவதற்கு நிர்வாகப் பிரிவு, கணக்குகள் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு அமுலாக்கப்படுகிறது.

## 6.2 ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு

**அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவின் ஒவ்வொரு நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம்.**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம்/செயற்திட்டம் | மூலதனம் | | மீண்டுவரும் | |
|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 150.00 | 45.14 | - | - |
| | சமுர்த்தி நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டம | - | - | 55,500.00 | 36,889.08 |
| சமூக சேவைகள் திணைக்களம் | சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் | 10.50 | 4.01 | - | - |
| | பல்வேறு இயலுமைகளி னைக் கொண்ட நபர்களுக்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்கள் | - | - | 30.00 | 13.17 |
| | போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | - | - | 1.50 | - |
| | விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியம் | - | - | 9.00 | 4.15 |
| | பல்வேறு அங்கவீனத்தினைக் கொண்ட பிள்ளைகளின் பொழுதுபோக்குசார் செயற்பாடுகளுக்கு வசதிகளினைச் செய்து கொடுத்தல். | - | - | 10.00 | 3.11 |
| | கிராமங்களினை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் | - | - | 25.00 | 13.22 |
| சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் | பல்வேறு அங்கவீனத்தினைக் கொண்ட மாணவர்களுக்கு அன்றாடக் கொடுப்பனவு | 1,350.00 | 1,185.08 | - | - |
| அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | 32.00 | 24.10 | - | - |
| | அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 5,000 வாழ்வாதார உதவிகளினை வழங்குதல். | - | - | 4,860.00 | 2,610.52 |
| | விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளினை வழங்குதல். | - | - | 8.00 | 6.00 |
| | சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 5,000 வாழ்வாதார உதவிகளினை வழங்குதல். | - | - | 2,642.62 | 1,443.78 |
| | அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல். | - | - | 10.00 | 2.58 |
| முதியோர்களுக்கான தேசிய செயலகம் | 70 வயதினைப் பூர்த்தி செய்துள்ள முதியோர்களுக்கு ரூபா 2,000/- மாதாந்த வாழ்வாதார உதவிகளினை வழங்குதல். | - | - | 13,550.01 | 7,000.20 |
| | 100 வயதினைப் பூர்த்தி செய்துள்ள முதியோர்களுக்கு ரூபா. 5,000/- மாதாந்த வாழ்வாதார உதவிகளினை வழங்குதல். | - | - | 33.59 | 16.37 |
| | முதியோர்களுக்குப் பயன்களினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம். | - | - | 50.00 | 13.89 |
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தொடர்பில் சீதுவப் பகுதியில் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல். | 60.00 | 48.30 | - | - |
| | புதிய கட்டிடத் தொகுதிக்கு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல். | 20.00 | - | - | - |
| கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு | 40.10 | 29.49 | - | - |
| உளவளத்துணை | உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம் | 10.00 | 4.06 | - | - |
| | **மொத்தம்** | **1,672.60** | **1,340.18** | **76,729.72** | **48,016.07** |

## 6.3 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை செயலாக்கும் நிறுவனங்கள் மற்றும் அதன் செயற்பாடு

2030 ஆம் ஆண்டளவில் வறுமையினை ஒழிக்கும் அடிப்படை நோக்கத்தினை எட்டச் செய்வதற்கு அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் பின்வருமாறு, பிற அரச நிறுவனங்கள், பிரத்தியேகப் பிரிவு மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து அமுலாக்கப்பட்டு வருகிறது.



## 6.3.1 சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)

### அறிமுகம்

2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சமுர்த்திச் சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தினூடாக அமைக்கப்பட்ட இந்நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பிரதான பணிகளாவன, 18 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்க சமுர்த்தி நலன்புரியினை வழங்குதல், சமூகப் பாதுகாப்பு நிதியத்தினூடாக அக்குடும்பங்களின் அன்றாட முக்கியமான தருணங்களில் பாதுகாப்பினை வழங்குவதற்கு உரிய கொடுப்பனவுகளினை வழங்குதல், இலங்கையில் வறுமையினை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு அக்குடும்பங்களினை வலுவூட்டுவதற்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 1074 சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக நாடுபூராவுமுள்ள அவ்வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களுக்குத் தேவையான பல்வேறான நுண்நிதியக் கடனினைத் திட்டமிடுதல், அதற்குமேலாக, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகளான மக்களினை ஒன்றாக இணைத்து சமுதாய அடிப்படை அமைப்புக்களின் வலையமைப்பொன்றினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல், சமூக அபிவிருத்திக்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் என்பவனவாகும்

### நோக்கங்கள்

- 1.76 மில்லியன் வறிய குடும்பங்களின் அன்றாட நுகர்வுத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கு சமுர்த்தி நிவாரண உதவிகளினை வழங்குதல்.
- பிறப்பிலிருந்து மரணம் வரையான விசேட வேளைகளில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதிசார் பயன்களினை வழங்கி, 1.76 மில்லியன் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
- சமுர்த்தி நிவாரண உதவிகளினைப் பெறும் குடும்பங்களின் உயர் கல்வியினைத் தொடரும் பிள்ளைகளின் கல்வியினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சமுர்த்தி நிவாரண உதவிபெறும் குடும்பங்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதனூடாக அக்குடும்பங்களினை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சமுதாய அடிப்படை அமைப்புக்களினூடாக வறிய குடும்பங்களினை ஒருங்கிணைப்புச் செய்து அவர்களினை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- குறைந்த வருமானப் பயனாளிகள் குடும்பங்களின் வாழ்வாதார வழிகளினை மேலோங்கச் செய்தல் மற்றும் சமுர்த்தி தொழில்முனைவோர்களினை மேம்படுத்துவதற்கு நுண் நிதிக் கடன் வசதிகளினை வழங்குதல்.
- வறிய குடும்பங்களில் சமூக விருத்தியினை உருவாக்குவதற்கு உளப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சமுதாய நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

### மூலோபாயங்கள்

- 1.7 மில்லியன் வறிய குடும்பங்களின் அன்றாட நுகர்வுத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கு மாதாந்தம் பிரதானமாக 4 தொகுதிகளின் கீழ் (ரூபா. 4,500.00, ரூபா. 3,200.00, ரூபா. 1,900.00 மற்றும் 420.00 என்றவாறு) சமுர்த்தி நிவாரண உதவிகளினை வழங்குதல்.

- மேற்குறிப்பிட்ட வறிய குடும்பங்களின், குழந்தை பிறப்பு, திருமணம், மரணம் மற்றும் பிள்ளைகளின் கல்வி போன்ற தருணங்களில் சமூகப் பாதுகாப்புப் பயன்களினை வழங்குதல்.
- சமுர்த்தி நிவாரண உதவிகளினைப் பெறும் குடும்பங்களின் உயர் கல்வியினைத் தொடரும் பிள்ளைகளின் கல்வியினை மேம்படுத்துவதற்கு ஒரு மாணவருக்கு மாதாந்தம் ரூபா. 1,500 என்றவாறு 24 மாதங்களுக்கு புலமைப்பரிசில் உதவி நிதியினை வழங்குதல்.
- சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் வருமான மட்டத்தினை மேம்படுத்துவதற்கு தேவைகளினை அடையாளம் கண்டு அதற்குப் பொருந்தும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- 30,211 சமுதாய அடிப்படை அமைப்புக்கள், 331 பிரதேச அமைப்புக்கள் மற்றும் 25 மாவட்ட அமைப்புக்களினை அமைப்பதனூடாக வறிய மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களினை இலக்கிட்டு பொருளாதார மற்றும் சமுதாய நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- வறிய மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களின் நுண்நிதியக் கடன் தேவைகளினை இனங்கண்டு அவர்களுக்கு, 1073 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் 331 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களினூடாக குறைந்த வட்டியுடனான நுண்நிதியக் கடன் சேவைகளினை அமுலாக்குதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இலக்குகளினை வழங்குதல்.
- வீடொன்றினைக் கொண்டிராத வறிய குடும்பங்களின் வீட்டுத்தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா. 200,000/- தொடக்கம் 600,000/- வரையான நிதி உதயிவினை வழங்குதல்.
- வறிய குடும்பங்களினைப் போதையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு போதைப்பொருள் மீட்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், சமுர்த்தி குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வியறிவினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், வறிய சமுதாயத்தின் உள நெருக்கீட்டினைத் தடுப்பதற்கு உளப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வறிய குடும்பங்களின் சமூக விருத்தியினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| செலவுகளின் வகை | 2022 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு |
|---|---|---|---|
| மூலதனம் | 164.70 | 48.62 | 116.08 |
| மீண்டுவரும் | 83,203.50 | 49,472.59 | 33,730.91 |
| **மொத்தம்** | **83,368.20** | **49,521.21** | **33,846.99** |

**பிற நிதியம்**

| நிதியங்களின் வகை | 2022 ஆம் ஆண்டு தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு |
|---|---|---|---|
| சமூகப் பாதுகாப்பு நிதியம் | 3,086.26 | 1,246.40 | 1,839.86 |
| வீடமைப்பு லொத்தர் நிதியம் | 1,633.00 | 676.63 | 956.37 |
| நுண்நிதிய வங்கி நிதியம் | 40,000.00 | 20,776.77 | 19,223.23 |

## 2022.09.30 வரை அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்.

மூலதன ஒதுக்கீடுகள் - சமுர்த்திப் பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

| **செயற்திட்ட இலக்கம் 01** | **வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 44.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 3.06 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. வீட்டுத் தோட்டப் பயிர் வளர்ப்பு, நாற்று மேடைகள் மற்றும் பசளை உர உற்பத்தியுடன் தொடர்புட்ட பயனாளிகளுக்கு விழிப்புணர்வூட்டும் மற்றும் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் பிற ஒருங்கிணைப்புச் சேவைகளினை முன்னெடுப்பதற்கு 1,074 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
2. 140,021 சமுர்த்தி பயிர் வளர்ப்பாளர்களுக்கு மரக்கறி விதைகளினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
3. மேலதிக பருவங்களுக்கான பயிர் வளர்புக்களினை வலுவூட்டும் நோக்குடன் 800 சமுர்த்தி பயிர் வளர்ப்பாளர்களுக்கு உள்ளீடுகளினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 02** | **முயற்சியாண்மை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 30.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 9.03 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. தற்போதுள்ள தின்பண்டங்கள் மற்றும் 4 விற்பனை நிலையங்களினை மேம்படுத்துதல்.
2. கரிம உணவு உற்பத்தி தொடர்பில் 7 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
3. 275 தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
4. 3 விசேட சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்
5. 230 சௌபாக்யா வர்த்தகக் கண்காட்சியினை நடாத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

| **செயற்திட்ட இலக்கம் 03** | **சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 13.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 1.7 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. 6 திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
2. தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் 19 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல்.

| **செயற்திட்ட இலக்கம் 04** | **சமுதாய அடிப்படை அமைப்புக்கள் நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 5.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 2.50 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. சமுதாய அடிப்படைத் தலைவர்களினைப் பயிற்சியளித்தல் மற்றும் சமுதாய அடிப்படைத் தலைவர்களினூடாக சமுதாய அடிப்படை அங்கத்தவர்களினைப் பயிற்சியளிப்பதற்கு 04 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
2. 25 மாவட்டக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல்.

| செயற்திட்ட இலக்கம் 05 | தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 13.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 8.23 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. பயனாளிகள் முகாமைத்துவ மாதிரி (CRM) ஊடாக பயன் கொடுப்பனவுகளினை முன்னெடுத்தல்.
2. மனிதவள முகாமைத்துவ (HRM) திட்டத்தினைப் பேணுதல் மற்றும் நாளதுவரைப்படுத்துதல்.
3. 80 தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
4. சேவைகளினை வினைத்திறனாக்குவதற்கு 335 மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்களில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்.
5. சகல சமுர்த்தி அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் கணனிமயப்படுத்துதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

| செயற்திட்ட இலக்கம் 06 | சட்ட நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 0.40 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா. 0.36 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பில் 4 சட்டம்சார் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
2. சமுதாய அடிப்படை வங்கிச் சங்க அங்கத்தவர்கள் தொடர்பில் 4 சட்டம்சார் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

| செயற்திட்ட இலக்கம் 07 | ஊடக மற்றும் விளம்பர நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 16.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 13.39 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. “சமுர்த்தி உதானய” தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சமுர்த்தி வங்கிகளினூடாக கடன் வசதிகளினைப் பெற்று வாழ்க்கையினை வெற்றிகரமாக்கிய பயனாளி சமுதாயத்தின் தகவல்களினை முன்வைப்பதற்கு 38 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
2. சமுர்த்தி "E" செய்தித் தாள் 18 ஒவ்வொரு மாதமும் முதலாவது மற்றும் இரண்டாவது வாரங்களின் புதன்கிழமைகளில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இணையத்தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 08 | திட்டமிடல் மற்றும் செயலாக்கல் நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 6.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 2.24 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல், 130 மாவட்ட, பிரதேச மட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல் மற்றும் 2021 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயற்திறனினை உள்ளடக்கிய அறிக்கையினைத் தயாரித்தல் இடம்பெற்றுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 09 | மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 11.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா. 0.75 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய,

மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தின் திணைக்களத்தின் பதவியணி தொடர்பில் 3 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

| **செயற்திட்ட இலக்கம் 10** | **நுண்நிதிய நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 7.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 2.00 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு வழங்கும் சேவைகளினை மிகவும் விளைத்திறனாக்குவதற்கு பிரதேச மட்டத்தில் 14 புதிய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

| **செயற்திட்ட இலக்கம் 11** | **சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 0.60 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.55 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக உயர் வருமான மட்டத்தினை சுவீகரித்துள்ள குடும்பங்களினைப் பாராட்டுவதற்கு சான்றிதழினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 12** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 4.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 1.33 மில்லியன் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கான 2 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## மீண்டுவரும் ஒதுக்கீடுகள்

| **செயற்திட்ட இலக்கம் 01** | **200,000 சமுர்த்திக் குடும்பங்களினை மையமாகக் கொண்டு வீட்டு வதிவிடப் பொருளாதாரம் மற்றும் தொடர்பான கிராமங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் (பாதீட்டு முன்மொழிவு 2021)** |
|---|---|

2022 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 993 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் கையிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு தொடர்பில் ரூபா. மி. 353.76 செலவு செய்யப்பட்டுள்ளது.

### மீண்டுவரும் ஒதுக்கீடுகள்

| **செயற்திட்ட இலக்கம் 01** | **சமுர்த்தி நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|

2022.01.01 ஆந் திகதி தொடக்கம் 2022.04.30 ஆந் திகதி வரை முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் தலைமைத்துவத்தினைப் பெற்ற குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ரூபா. 55,500.00 மில்லியன் பாதீட்டு ஒதுக்கீடுகளினூடாக மாதாந்தம் கொடுப்பனவினை வழங்குவது இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் 1,760,700 பயனாளி குடும்பங்களுக்கு ரூபா. 36,889.08 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

- தறபோதுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக பாதிப்புக்குட்பட்ட கவனத்திற்கொள்ளப்படவேண்டிய குழுக்களுக்கு நிவாரணங்களினை வழங்குவதற்கு உலக வங்கி நிதி வசதிகளின் கீழுள்ள முதலீட்டுச் செயற்திட்டங்களின் தற்செயல் அவசர பதில் கூறுகளின் (Contingent Emergency Response Components - CERC) கீழ் 2022 மே மாதம் தொடக்கம் யூலை மாதம் வரை குறைந்த வருமானப் பயனாளிகளின் குடும்பங்கள் மற்றும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குடும்பங்களுக்கு நிதியுதவி நிகழ்ச்சித் திட்டமொன்று ((Cash Transfer Program) அமுலாக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தின் கீழ், வழமையான கொடுப்பனவுகளினைப் பெறும் சமுர்த்திப் பயனாளிகள், அங்கவீனமுற்ற நபர்கள், நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மேலதிக கொடுப்பனவுடன் 03

மாதங்களுக்கு ரூபா. 3,000/- தொடக்கம் ரூபா. 5,000/ வரை மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்கள் தொடர்பிலும் ரூபா 5,000/- மாதாந்தக் கொடுப்பனவொன்று இச்செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதுடன், இலக்கிடப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| நிதியினை மாற்றும் தொகுதி | வழமையான பயனாளிகள் தொடர்பிலான கொடுப்பனவுகள் | | | CERC செயற்திட்டத்தின் கீழ் ரூபா.. 5,000 கொடுப்பனவு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | நபர் ஒருவருக்கு வழமையான மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.) | மேலதிக கொடுப்பனவுடன் (top up) CERC செயற்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.) | வழமையான பயனாளிகளின் எண்ணிக்கை | |
| சமுர்த்திக் கொடுப்பனவு | 1,900.00 | 5,000.00 | 1,702,603.00 | 731,975 |
| | 3,200.00 | 6,300.00 | | |
| | 4,500.00 | 7,500.00 | | |
| அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்வாதார உதவி | 5,000.00 | 7,500.00 | 72,000.00 | 62,457 |
| நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான வாழ்வாதார உதவி | 5,000.00 | 7,500.00 | 39,150.00 | 5,798 |
| 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு | 2,000.00 | 5,000.00 | 416,667 | 238,640 |
| நூறு வயதினைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு | 5,000.00 | 7,500.00 | 478 | - |
| **மொத்தம்** | | | **2,230,898** | **1,038,870** |

மே மாதம் தொடக்கம் 2022.08.30 ஆந் திகதி வரை ஒதுக்கீடுகளினை வழங்குவது, உலக வங்கியினால் நிதி வழங்கப்படும் அவசரகால பதில் கூறு (CERC) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், காத்திருப்புப் பட்டியலிலுள்ள சமுர்த்திப் பயனாளி குடும்பங்கள், அங்கவீனமுற்ற நபர்கள், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இக் கொடுப்பனவு தொடர்பிலான விவரம் பின்வருமாறாகும்.

| நிதியினை மாற்றும் தொகுதி | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு மாதாந்த நிவாரண உதவிகளினை வழங்குதல் | 10,778.30 | 1,689,461 |
| சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு ஒதுக்கீட்டு நிதியினை அதிகரித்ததன் பின்னர் நிவாரண உதவிகளினை வழங்குதல். | 155,44.30 | 1,689,461 |
| சமுர்த்திப் பயனாளி காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்குக் கொடுப்பனவு | 10,896.73 | 726,449 |
| **உப மொத்தம்** | **37,219.33** | **2,415,910** |
| அங்கவீனத்தினைக் கொண்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவு | 1,974.02 | 131,152 |
| சிறுநீரக நோயினைக் கொண்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவு | 377.36 | 25,072 |
| 70 வயதிற்கு மேற்பட்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவு | 48.60 | 3,232 |
| **உப மொத்தம்** | **2,399.98** | **159,456** |
| **முழு மொத்தம்** | **39,619.31** | **2,575,366** |

உலக வங்கி நிதியதவியின் கீழ் அமுலாக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் 2022.09.01 ஆந் திகதி தொடக்கம் ஒதுக்கீடுகளினை வழங்குதல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் இடம்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அக்கொடுப்பனவு தொடர்பிலான விவரங்கள் பின்வருமாறாகும்.

| நிதியினை மாற்றும் தொகுதி | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு மாதாந்த நிவாரண உதவிகளினை வழங்குதல். | - | - |
| சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு ஒதுக்கீட்டு நிதியினை அதிகரித்ததன் பின்னர் நிவாரண உதவிகளினை வழங்குதல். | 5,148.24 | 1,682,009 |
| சமுர்த்திப் பயனாளிகளான காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவு | 3,623.11 | 724,622 |
| **உப மொத்தம்** | **8,771.35** | **2,406,631** |
| அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கு மாதாந்த நிவாரண உதவிகளினை வழங்குதல். | 292.13 | 58,427 |
| அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு நிதியினை அதிகரித்ததன் பின்னர் நிவாரண உதவிகளினை வழங்குதல். | 52.08 | 20,830 |
| அங்கவீனத்தினைக் கொண்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவு | 105.94 | 21,188 |
| **உப மொத்தம்** | **450.15** | **79,615** |
| சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்த நிவாரண உதவிகளினை வழங்குதல். | 175.62 | 35,124 |
| சிறுநீரக நோயாளர்களுக்கு ஒதுக்கீட்டு நிதியினை அதிகரித்ததன் பின்னர் நிவாரண உதவிகளினை வழங்குதல். | 46.90 | 18,759 |
| சிறுநீரக நோயினைக் கொண்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவு | 20.01 | 4,001 |
| **உப மொத்தம்** | **242.53** | **39,125** |
| 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்த நிவாரண உதவிகளினை வழங்குதல். | 661.35 | 348,081 |
| 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு ஒதுக்கீட்டு நிதியினை அதிகரித்ததன் பின்னர் நிவாரண உதவிகளினை வழங்குதல். | 618.29 | 206,098 |
| 70 வயதிற்கு மேற்பட்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள முதியோர்களுக்கான கொடுப்பனவு | 558.79 | 111,578 |
| **உப மொத்தம்** | **1,838.43** | **665,757** |
| 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான மாதாந்த நிவாரண உதவிகளினை வழங்குதல். | 1.91 | 381 |
| 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு ஒதுக்கீட்டு நிதியினை அதிகரித்ததன் பின்னர் நிவாரண உதவிகளினை வழங்குதல். | 0.41 | 165 |
| **உப மொத்தம்** | **2.00** | **546** |
| **முழு மொத்தம்** | **11,304.78** | **2,985,411** |

## அமுலாக்கப்பட்ட பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- சமுர்த்திப் பயனாளி குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு, அக்குடும்பங்களின் பிறப்புக்கள் 9,094 தொடர்பாகவும், 22,740 திருமணங்கள் தொடர்பாகவும், 59,925 பேர் மருத்துவசாலையில் இருத்தல் தொடர்பாகவும், 28,997 மரணங்கள் தொடர்பாகவும் மற்றும் 104,690 புலமைப்பரிசில் பயனாளிகள் தொடர்பாகவும் என 225,446 மொத்தக்

குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்புப் பயன்களினை வழங்குதல். இதுவரை வழங்கப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்பு பயனாளிகளின் நிதிப் பெறுமதி ரூ. 1,246.40 ஆகும்.

- வீடமைப்பு லொத்தர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ரூபா. 200,000/- தொடக்கம் 600,000/- வரையிலான வீடமைப்பு உதவிகள், 3,377 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்குதல். மொத்தச் செலவு ரூபா. 676.63 ஆகும்.
- 1,073 சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் 331 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களினூடாக 240,113 பயனாளிகளுக்கு ரூபா. 20,776.77 நுண் நிதியக் கடன் வசதிகளினை வழங்குதல்.

## மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 01 – சகல இடங்களிலும் காணப்படும் சகல விதமான வறுமையினையும் முடிவுக்குக் கொண்டு வருதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 08 – அனைவருக்கும் போசாக்கான, பூரணமான, நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான, விளைத்திறனான மற்றும் கண்ணியமான தொழில்களினை ஊக்குவித்தல்.

## அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்

- நிலையற்ற சந்தை நிலைமைகள் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அடிக்கடி அதிகரிப்பு.
- வருட ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு திறைசேரி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி சரியான நேரத்திற்கு கிடைக்காமையினால் திட்டமிடப்பட்ட கால வரையறையினுள் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு இயலாது போனது.
- உலகளாவிய தொற்றுநோய் சூழ்நிலைகள், பொருளாதார நெருக்கடிகள், நேரம் மற்றும் காலநிலைப் பாதிப்புக்கள் ஏற்படுதல்.
- மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் செயற்பாட்டுத் திட்டத்தினை அவ்வப்போது மாற்றுதல்.

## 6.3.2 சமூக சேவைகள் திணைக்களம் (DSS)

### அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், எமது நாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள், வறிய குடும்பங்கள் மற்றும் அக்குடும்பங்களின் அங்கத்தவர்கள் பல்வேறு நோய்களுக்கு உட்படும் வேளையிலும் மற்றும் இடர்களுக்கு உட்படும் வேளையிலும் நிதிசார் உதவிகளினை வழங்குவதே ஆரம்பத்தில் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகவிருந்தது.

ஆரம்ப காலத்திலிருந்த இந்நிகழ்ச்சித் திட்டங்கள் காலத்தின் தேவைக்கேற்ப புதுப்பிக்கப்பட்டு. வழங்கப்பட்ட நிவாரணங்கள் சார்பு மனப்பான்மைக்கு மட்டுப்படுத்தப்படாது தனிநபர் அல்லது குடும்பத்தின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் மாற்றப்பட்டுள்ளது. தற்போது சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் திணைக்கள கடமைப்பொறுப்பு நிறைவேற்றப்படுகிறது. ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட பிரிவினருக்கு சிறந்த சூழலினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் சமூக சேவைகள் திணைக்களம் உன்னதமான கடமைப் பொறுப்பினை நிறைவேற்றி வருகிறது. அதன் பிரகாரம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை திட்டமிட்டு அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை முன்னெடுத்து வருகிறது.

விசேடமாக அங்கவீனமுற்ற சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அவர்களின் சமூகப் பொருளாதாரத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதற்குப் பல நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதனுள், திணைக்களத்தின் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சமுதாய அடிப்படையிலான அங்கவீனர் புனர்வாழ்வு தேசிய நிகழ்ச்சித் திட்டம் (CBR), சிறுவர் வழிகாட்டி, திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம், விழிப்புலனற்றவர்களினைப் புனர்வாழ்வளித்தல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதானமானதாகும்.

இதுதவிர, போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், தற்போதைய சமூகப் பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு பல்வேறு சமூக ஆய்வுகளினை மேற்கொள்ளுதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இதில் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயற்திட்டத்தினை அமுலாக்குவதனூடாக எதிர்பார்க்கப்படுவது, இலங்கையில் பின்தள்ளப்பட்ட பிரிவினரினை சுயமாக தன்னம்பிக்கையுடன் எழச் செய்து தேசிய அபிவிருத்தியில் செயலூக்கமான பங்குதாரர்களாக ஆக்குவதாகும்.

### நோக்கங்கள்

- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளையஞர் யுவதிகளின் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வெளிச் செயற்பாடுகளினை வலுவூட்டுதல்.
- பாதுகாவலர்களினை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல்.
- 0-16 வயதிற்கிடைப்பட்ட பல்வேறு அங்கவீனத்தினால் வருந்தும் பிள்ளைகளின் அங்கவீன நிலைமையினைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையீடு செய்தல்.

- அங்கவீனமுற்ற சமுதாயம் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளினைக் குறைப்பதற்கு தலையீடு செய்தல் மற்றும் அவர்களினை வலுவூட்டுதல்.
- சைகை மொழியினை அங்கீகரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் தன்னார் அமைப்புக்களினை வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களுக்குச் சரியான வழிகாட்டலினை வழங்குதல்.

## மூலோபாயங்கள்

- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சுயதொழில் தொடர்பில் தொழில்சார் கருவிகளினை வழங்குதல் மற்றும் திறந்த சந்தை வேலைகளுக்கு முன்வைத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் சந்தையினை அறிமுகப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் காலத்தின் தேவைகள் மற்றும் நாட்டங்களினை இனங்காணுதல் மற்றும் ஆய்வு செய்தல்
- விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பில் முன்கூட்டியே தலையீடு செய்வதனூடாக அவர்களினை ஒன்றிணைந்த கல்விக்கு அனுப்புதல்.
- செவிப்புலனற்றவர்களுக்கு அடையாள அட்டைகளினை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளினை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாடச் செயற்பாடுகளினை இலகுவாக்குதல்.
- பாதுகாவலர்களினை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு வாழ்நாள்பூராவும் பாதுகாப்பினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவிகளினை வழங்குதல்.
- 60 வயதிற்குக் குறைந்த விழிப்புலனற்றவர்களுக்கு கண் வில்லைகளினை வழங்குதல், மருத்துவ உதவிகளினை வழங்குதல், விழிப்புலனற்றவர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு விளையாட்டுக்கள், கல்விசார் மற்றும் கலாசாரச் செயற்பாடுகளுக்கு உதவிகளினை வழங்குதல், அவர்களின் நிறுவனங்ளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல் மற்றும் பிற நலன்புரிச் செயற்பாடுகள்.
- சமுதாய அடிப்படை புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதல்.
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்களினை அமைத்தல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| செலவுகளின் வகை | 2022 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 39.00 | 11.60 | 27.40 |
| மீண்டுவரும் | 786.50 | 520.64 | 265.86 |
| **மொத்தம்** | **825.50** | **532.24** | **293.26** |

### 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்.

**மூலதன ஒதுக்கீடுகள்**

| செயற்திட்ட இலக்கம் 01 | சமுதாய மட்டப் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கிடையே, அவர்கள் மற்றும் அவர்கள் வாழும் சமுதாயத்தின் சமூக அமைப்புக்களுக்கிடையே, தொடர்புகளினை ஏற்படுத்துவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல், வலுவூட்டுதல் மற்றும் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு ஏற்றவாறு அவர்களினை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இச் செயற்திட்டத்திற்கு ரூபா. 10.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 4.01 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. முழுநாட்டினையும் உள்ளடக்கும் வகையில் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. 82 அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குவதற்கு ரூபா. 1.53 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
2. கீழ் மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை சுயஉதவி அமைப்புக்களினை பாராட்டுதல் (“சுவாபிமானி” தேசிய விருது வழங்கும் விழா தொடர்பில் 24 மாவட்டப் போட்டிச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளதுடன், இது தொடர்பில் ரூபா. 0.35 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது)
3. அங்கவீனமுற்ற நபர்களின் உற்பத்திகளுக்கு இலட்சினையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கு சிறு வியாபார பிரிவின் பதிவு பெறப்பட்டுள்ளதுடன், அதனூடாக விற்பனைக் கண்காட்சியினை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகிறது.
4. பிராந்திய, மாவட்ட மற்றும் தேசிய மட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துவதற்கு இதுவரை ரூபா. 1.27 மில்லியன் செலவு செய்யப்பட்டு 977 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
5. அங்கவீனமுற்ற நபர்களுக்கு விசேட செயற்திட்டங்களினை அமுலாக்குவதன் கீழ் 15 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் ரூபா 0.85 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 02 | திறன் விருத்தி |
|---|---|

திணைக்களத்தின் கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்ளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட சகல கள உத்தியோகத்தர்களின், திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் மற்றும் பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு, விளைத்திறன் மற்றும் ஆன்மீகம்சார் அபிவிருத்தி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு ரூபா. 2.00 ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரை ரூபா. 0.19 மில்லியன் செலவு செய்யப்பட்டு 17 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**மீண்டுவரும் ஒதுக்கீடுகள்**

| **செயற்திட்ட இலக்கம் 01** | **அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சிறுவர் வழிகாட்டி நிலையங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.** |
|---|---|

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் அமுலாக்கப்படும் 09 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் இடம்பெற்றுவருவதுடன், இச் செயற்திட்டத்திற்கு ரூபா. 55.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபா. 26.39 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், இதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகிறது.

1. 451 அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கென்று ரூபா. 9.50 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
2. பயிலுனர்களின் பொழுதுபோக்குத் தொடர்பில் புத்தாண்டு மற்றும் பொசொன் போயாவினை முன்னிட்டு 2 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்கு ரூபா. 0.01 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
3. திறன் விருத்தி நிலையங்கள் மற்றும் தன்னார்வ அடிப்படையில் செயலாக்கப்படும் விசேடக் கல்வி அலகு தொடர்பிலான பராமரிப்புக்கு உதவுவதன் கீழ் ரூபா. 0.11 மில்லியன் செலவு செய்யப்பட்டு ஒரு நிலையத்திற்கு தேவையான உதவிகள் வழங்கப்படுதல்.
4. அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு தன்னார்வ அடிப்படையின் கீழ் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள 43 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிதியுதவிகளினை வழங்குதலின் கீழ் ரூபா. 3.55 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
5. வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சியினைப் பெறும் பயிலுனர்கள், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தன்னார் அமைப்புக்களின் பயிலுனர்கள் மற்றும் சிறுவர் வழிகாட்டி நிலையங்களின் அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு அன்றாடக் கொடுப்பனவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 726 பயிலுனர்களுக்கு இது வரை ரூபா. 13.22 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 02** | **போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளிக்கும் நிகழச்சித் திட்டம்** |
|---|---|

போதைக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் தொழில்சார் திறமைகளினை மேம்படுத்துவதற்கு உரிய செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு ரூபா. 1.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1. போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு புனர்வாழ்வு மேம்பாட்டுத் திட்டமொன்றினை தயாரித்தல்.
2. ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிறுவனத்தின் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஆய்வு.
3. புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுக்கு பொழுதுபோக்குசார் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

| **செயற்திட்ட இலக்கம் 03** | **விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியம்** |
|---|---|

முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் விழிப்புலனற்ற நிலைக்கு உட்படும் நபர்களுக்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணத்தினை வழங்குவதற்கு ரூபா. 9.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 4.15 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன.

1. விழிப்புலனற்ற பிள்ளைகள் மற்றும் விழிப்புலனற்ற பெற்றோர்களின் சாதாரணமான பிள்ளைகளுக்கு. புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1 வது தரத்திலிருந்து க.பொ.த. (சா/த) வரை, க.பொ.த. (உ/த) மற்றும் 381 பட்டதாரி மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு ரூபா. 3.38 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.
2. 5 போதனாசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு ரூபா. 0.17 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
3. ரூபா. 0.02 மில்லியன் செலவு செய்யப்பட்டு நபர் ஒருவருக்கு கண்வில்லை வழங்கப்படுதல்.
4. வாழ்க்கையின் பிற்காலத்தில் விழிப்புலன் பாதிக்கப்பட்ட 29 நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு உதவிகளினை வழங்குவதற்கென ரூபா. 0.23 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
5. விழிப்புலனற்ற நபர்களுக்கு விளையாட்டு உதவிகளினை வழங்குதலின் கீழ் விசேட பாடசாலைகளுக்கு 12 செஸ் பலகைகள் வழங்குவதற்கென ரூபா. 0.03 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
6. 11,983 பக்கங்களினைக் கொண்ட கதைப் புத்தகம் தொடர்பில் ரூபா. 0.32 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
7. ஒக்டோபர் 15 ஆந் திகதி நினைவுகூரும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினக் கொண்டாட்டத்திற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 04 | அங்கவீனமுற்ற பிள்ளைகளின் விடையாட்டுக்கள், கலாசாரம் மற்றும் கலைத்திறன் விருத்தி செயற்திட்டம் |
|---|---|

அங்கவீனமுற்ற பிள்ளைகளின் அழகியற்கலை மற்றும் விளையாட்டுத் திறமைகளினை வளர்த்து ஆரோக்கியத்துடன்கூடிய திடகாத்திரமான நபர்களாக சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கு முழு நாட்டிலுமுள்ள சகல அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினை பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் அவர்களின் விளையாட்டுக்கள் மற்றும் கலைத் திறமைகளினை மாவட்ட மட்டத்தில் இனங்கண்டு ஒவ்வொரு வருடமும் தேசிய விளையாட்டுக்கள் மற்றும் கலைக் கச்சேரிகள் நடாத்தப்படுதல் இடம்பெற்று வருகிறது. இந்சிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 10.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 3.11 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது.

1. அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய தடகள விளையாட்டு விழா
   அங்கவீனமுற்ற நபர்களின் விளையாட்டு திறமைகளினை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு அமுலாக்கப்படும் தேசிய தடகள விளையாட்டு விழாவினை ஒட்டி மாவட்ட மட்ட போட்டிகள் நடாத்தப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன், போட்டிகளில் வெற்றிவாகை சூடிய நபர்களினை தேசிய பரா ஒலிம்பிக் போட்டிக்கு முன்வைத்து தேசிய மட்டத்தில் 08 சாதனைகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது.
2. அங்கவீனமுற்ற பிள்ளைகளின் தேசிய கலாசாரக் கலைக் கச்சேரி - “சித் றூ”
3. அங்கவீனமுற்ற நபர்களின் அழகியற்கலை இயலுமைகளினை மேம்படுத்துவதற்கு செயலாக்கப்படும் “சித் றூ” கலைக் கச்சேரி திசம்பர் மாதம் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 05 | பல்வேறான அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு அன்றாடக் கொடுப்பனவினை வழங்குதல். |
|---|---|

திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சியினைப் பெறும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 150.00 என்றவாறான அன்றாடக் கொடுப்பனவினை வழங்குவதற்கு ரூபா. 25.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா.13.22 மில்லியன் செலவு செய்யப்பட்டு 726 பயிலுனர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

### வேறு செயற் திட்டங்கள் (மூலதன ஒதுக்கீடுகள்)

| செயற்திட்ட இலக்கம் 01 | சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களினைப் புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைத்தல். |
|---|---|

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கை தொழிற் பயிற்சி நிறுவனங்களினைப் புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பதற்கு ரூபா. 20.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் ரூபா. 4.73 மில்லியன் செலவு ஈடுசெய்யப்பட்டுள்ளதுடன், கொட்டாவ முன் திறன் விருத்தி நிலையத்திற்கென ரூபா. 0.13 மில்லியன் செலவொன்று ஈடு செய்யப்பட்டுள்ளது. 2022.04.26 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றுநிரூப இலக்கம் 03/2022 இன் பிரகாரம் மூலதனச் செலவுகள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுப்பதற்கு இயலுமை கிடைக்கவில்லை.

### மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 04 - முழுமையான, நியாயமான தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கல்வி கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 08 - அனைவருக்கும் போசாக்கான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார மேம்பாடு, பூரணமான மற்றும் சிறந்த தொழில்களினை ஊக்குவித்தல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 10 - நாடுகளுக்குள் மற்றும் நாடுகளுக்கிடையேயுள்ள சமத்துவமின்மையைக் குறைத்தல்.

### சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் அமுலாக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் நிதியங்கள்

#### வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் சீதுவ, வத்தேகம, கெட்டவல, தெளம்புயாய, இராகம, அமணுகும்புர, கலவான, மாதம்பே, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் 09 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களும் மற்றும் தோளங்கமுவ இணைந்த வாழக்கைத் தொழிற் பயிற்சி நிறுவனமும் அமுலாக்கப்படுகிறது.

இவ் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக நாடுபூராவும் சிதறியுள்ள அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தொழில்சார் இயலுமைகளினை வலுவூட்டுதல் மற்றும் திறன் விருத்தியினூடாக அவர்களினை அபிவிருத்தியில் பங்குபற்றச் செய்யும் நோக்குடன் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் தனியாளுமை விருத்தி, அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் விளையாட்டுக்கள், கலைத்திறன்களை வளர்த்தல், முறைசார் வகையில் பயிற்சியினை நிறைவு செய்த பயிலுனர்களுக்கு சான்றிதழ்களினை வழங்குதல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல், சுய தொழில்களுக்கான கருவிகளினை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைப் பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துதல் போன்ற செயற்திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன.
16-35 வயதிற்கிடையே தகைமைகளினைக் கொண்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள், அறிவுசார் முறைமையின் கீழ் இடம்பெறும் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர் அவர்களின் இயலுமைகளுக்குப் பொருந்தும் பயிற்சிப் பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படுவர். பாடநெறியின் தன்மையின் பிரகாரம் பயிற்சிக் காலப்பகுதி வேறுபடும் என்பதுடன், அதன்

பிரகாரம் ஒரு வருட அல்லது இரு வருட முறைசார் பயிற்சி, தெரிவு செய்யப்படும் பயிலுனர்களுக்கு வழங்கப்படும். இக்காலப்பகுதியினுள் அன்றாடக் கொடுப்பனவு, விடுதி வசதிகள், உணவு பானங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும் என்பதுடன், 26 பாடநெறிகளின் கீழ் 451 பயிலுனர்களுக்கு இதுவரை வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது.

## ஜயவிரு செவண பாதுகாப்புப் புகலிடம் (அங்கவீனமுற்ற நபர்களுக்கான பாதுகாப்பு இல்லங்கள்)

பெற்றோர் பாதுகாப்பினை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய அங்வீனமுற்ற ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்காக 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஜயவிரு செவண நிறுவனம், மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், சீதுவப் பிரதேச செயலாளர் பிரிவில், புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்தை பகுதியில் அமைந்துள்ளது.

மூளை வளர்ச்சிக் குறைபாட்டினைக் கொண்ட சமுதாயத்திற்கு, அரவணைப்பு மற்றும் அன்பினை வழங்குவதனூடாக. அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகள் வளர்ச்சிக்கு வாய்ப்பினை வழங்குதல் மற்றும் அவர்களினை உற்பத்திச் செயற்பாட்டிற்குப் பங்குபற்றச் செய்து தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதைப் பணிக்கூற்றாகக் கொண்டு அமுலாக்கப்படும் இந்நிறுவனத்தினூடாக வாழ்நாள்பூராவும் விடுதியிலுள்ள இப்பிள்ளைகளினை தனிமைப்படுத்தாது அன்புடனும் பாசத்துடனும் பாதுகாக்கப்படுவதுடன், அன்றாடச் செயற்பாடுகளுக்கு அனுப்பப்படுவர். பாதுகாப்பினைப் பெறும் காலப்பகுதியினுள் விடுதி வசதிகளினை உள்ளடக்கி, உணவு பானங்கள் மற்றும் மருத்துவ வசதிகளினை இலவசமாக வழங்குவதும் இடம்பெறுகிறது.

## ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிறுவனம் (போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளிக்கும் நிறுவனம்)

போதைக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல், வாழ்க்கைதக் தொழில்சார் இயலுமைகளினை மேம்படுத்துவதற்கு சமூக சேவைகள் திணைக்களத்தில் அமுலாக்கப்படும் நவோதய செயற்திட்டத்தின், துணைச் செயற்திட்டமொன்றாக 2007.07.31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிறுவனம், மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், சீதாவதக்க பிரதேச செயலகப் பிரிவில், புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்த பகுதியில் அமைந்துள்ளது.

பிரத்தியேகப் புனர்வாழ்வு நிலையமொன்றாக பல வருடங்களாக செயலாக்கப்பட்ட ஜயவிரு சமாதி புகலிடத்தினை முன்னெடுத்தவேளையில் வழங்கிய தரமான சேவையினைப் பாராட்டும் முகமாக, மருந்துகளுக்கு அடிமையான நபர்கள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தின் செயற்பாடுகளினை ஒழுங்குபடுத்துவதற்கான 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க மருந்துகளுக்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பிலான சட்டத்தின் 2 வது பிரிவின் கீழ் நமோதிஸ்த புனர்வாழ்வு நிலையமொன்றாக பெயரிடுவதற்கு ஆபத்தான மருந்துகளின் கட்டுப்பாட்டுத் தேசிய சபையின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வாழ்க்கையின் உண்மையான தத்துவத்தையும் வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியையும் கற்பிப்பதன் மூலமும், திறன்களை மேம்படுத்துவதன் மூலமும். போதைக்குள்ள நாட்டத்தினைக் குறைத்து, போதைக்குப் பலியாகும் இளைய தலைமுறையினை தேசிய அபிவிருத்திக்கு பங்குபற்றச் செய்வதைப் பணிக்கூற்றாகக் கொண்டு பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்து புனர்வாழ்வளித்தல் இந்நிறுவனத்தினூடாக இடம்பெறுகிறது.

நீதிமன்றக் கட்டளைகளினூடாக, தன்னார்வமாக, பிரதேச செயலகங்கள் மற்றும் மருத்துவசாலைகளினூடாக முன்வைக்கப்படும் சேவைநாடியினரினை ஒரே தடைவையில் 60

பேர் வரை புனர்வாழ்வளிப்பதற்கு முடியும் என்பதுடன், புனர்வாழ்வுக் காலப்பகுதி 03 மாதங்கள், 06 மாதங்கள் மற்றும் 01 வருடம் வரையான காலப்பகுதிக்கு அமைய இடம்பெறும். நீதிமன்றக் கட்டளைகளினை கீழ் முன்வைக்கப்படும் சேவைநாடியினரின் புனர்வாழ்வுக் காலப்பகுதியினை தீர்மானம் எடுப்பது நீதிமன்றக் கட்டளையின் பிரகாரமேயாகும்.

இந்நிறுவனத்தினூடாக பின்வரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெறுகிறது.

- போதைக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், அவர்களின் வாழ்க்கைத் தொழில் இயலுமைகளினை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் இணைத்தல்.
- போதைப் பொருளுக்கு அடிமையாவதால் அவர்களின் குடும்பச் சூழலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளினைக் குறைப்பதற்கு தலையீடு செய்தல்.
- போதைப்பொருள் பாவனையினால் சீர்குலைந்த வேலைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளினை பழைய நிலைக்குக் கொண்டுவந்து அதுதொடர்பில் உரிய தரப்பினருடன் தொடர்புகளினைக் கட்டியெழுப்புதல்.
- கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குழுக்கள் தொடர்பில் போதைப்பொருள் மீட்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

## நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்

பிறப்பிலிருந்தே குழந்தையின் வளர்ச்சியில் ஏதேனும் அசாதாரண நிலை அல்லது தாமதம் ஏற்பட்டால், முன்கூட்டியே தலையிடுவதன் மூலம் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்கும் நோக்கத்துடன். 2003 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், மகரகம பிரதேச செயலகப் பிரிவில், நாவின்ன, பத்திரகொட பகுதியில் இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் சவால்களினை பெருமையுடன் எதிர்கொள்ளுவதற்கு வலுவூட்டுதல், விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகளின் ஆகக்கூடிய வளர்ச்சிக்கு முன்கூட்டியே தலையீடு செய்தல், பலப்படுத்துதல், சரியான நேரத்தினை அடையும் சேவை வலையமைப்பினைக் கட்டியெழுப்பும் மற்றும் ஒருங்கிணைக்கும் தரகராக செயற்படுவதை பணிக்கூற்றாகக் கொண்டு செயற்படும் இந்நிறுவனத்தினூடாக 80 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன.

## சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையத்தினை முன் மாதிரியாகக் கொண்டு கம்பாந்தோட்டை மாவட்டத்தில் முன்பிள்ளைப் பருவத்தில் வருந்தும் அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கென சேவைகளினை வழங்குவதற்கு அம்பலந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் 2022 ஜனவரி மாதம் 25 ஆந் திகதி இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்நிறுவனத்தினூடாக 15 அங்கவீனமுற்ற சிறார்களுக்கு சேவைகள் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சிறுவர் வழிகாட்டல் நிலையங்களினூடாக பின்வரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெறுகிறது.

- குழந்தையின் அங்கவீனத்தினை முன்கூட்டியே இனங்கண்டு அது தொடர்பில் தலையீடு செய்யும் மிகவும் விளைத்திறனான முறைமைகளினை அறிமுகப்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகளினை வழங்குதல் தொடர்பில் பல்வேறு துறைகளுக்கான சேவைகள் வலையமைப்பினை வலுப்படுத்துதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகளின் முன்பிள்ளைப் பருவக் கல்வி மற்றும் ஒன்றுதிரட்டும் கல்வியினை வலுப்படுத்துதல்.
- பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உள நிலையினை மேம்படுத்துவதற்கு உளவளத்துணை சேவைகளினை முன்னெடுத்துச் செல்லுதல்.

## கொட்டாவ முன் வாழ்க்கைத் தொழில் திறன் நிலையம்

13- 19 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகளினை எதிர்காலத்தில் வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்கு அனுப்புவதற்குத் தேவையான முன் ஆயத்தப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு கொட்டாவ திறன் விருத்தி நிலையம் 2022 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினூடாக 40 அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகள் வழங்கப்படுகிறது.

## விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

விழிப்புலனற்ற நிலைக்கு உட்படும் நபர்களுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்களினை வழங்குவதை பணிக்கூற்றாகக் கொண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினூடாக 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டு, அரச வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் தலைமையினைக் கொண்ட குழுவொன்றினூடாக நிர்வகிக்கப்படும் இந்நிதியம் சமூக சேவைகள் திணைக்கள தலைமை அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிதியத்தினூடாக பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்படுகிறது.

- விழிப்புலனற்ற நபர்கள் மற்றும் விழிப்புலனற்ற அமைப்புக்களுக்கு விளையாட்டு உதவிகளினை வழங்குதல்.
- விழிப்புலனற்ற போதனாசிரியர்களினூடாக விழிப்புலனற்ற பயிலுனர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- விழிப்புலனற்ற மாணவர்கள் மற்றும் விழிப்புலனற்ற பெற்றோர்களின் விழிப்புலனினைக் கொண்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவிகளினை வழங்குதல்.
- விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளினை வழங்குதல்.
- பார்வையற்ற வாசகர்கள் தொடர்பில் பிரெய்ல் மொழில் வெளியிடப்படும் “காலய” சஞ்சிகை தொடர்பில் உதவிகளினை வழங்குதல்.
- பிற்காலத்தில் பார்வையற்ற நிலைக்கு உட்படும் நபர்களினை உள ரீதியில் வலுவூட்டுதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டம்.
- விழிப்புலனற்ற நபர்களின் வாசிக்கும் உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு சாதாரண எழுத்தில் அச்சிடப்பட்ட புத்தகங்களினைப் பேச்சுப் புத்தகங்களாக மொழிபெயர்த்தல் (பேச்சுப் புத்தக நிகழ்ச்சித் திட்டம்)
- கோவிட் தொற்றுநோய் காரணமாக சுயதொழிலைக் கைவிட்ட அல்லது சுயதொழிலை முன்னெடுத்துச் செல்லுவதில் சிரமத்தினைக் கொண்ட பார்வையற்றோருக்கு சுயதொழில் உதவிகள் வழங்குதல்.
- விழிப்புலனற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீரினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உதவிகளினை வழங்குதல்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப விழிப்புலனற்ற நபர்கள் அல்லது விழிப்புலனற்ற நபர்கள் அமைப்பினால் செய்யப்படும் வேண்டுகோளின் பிரகாரம் உதவிகளினை வழங்குதல்.
- கண்வில்லைகள் மற்றும் கண் சிகிச்சைகளுக்கு உதவிகளினை வழங்குதல்.
- சர்வதேச வெள்ளைப் பிரம்பு கொண்டாட்ட தின தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல்.

## 2020.09.30 வரை அமுலாக்கப்பட்ட பிற நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்

### சர்வதேச சைகை மொழி தினத்தினை ஒட்டி சைகை மொழிபெயர்ப்பாளர்களின் குழாமினை ஆரம்பித்தல் மற்றும் கொண்டாட்ட வைபவத்தினை நடாத்துதல்.

சர்வதேச சைகை மொழி தினத்தினை ஒட்டி சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக சைகை மொழி தினக் கொண்டாட்ட வைபவம், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கௌரவ அனுப பஸ்குவல் அவர்களின் தலைமையில் 2022 செப்ரெம்பர் மாதம் 23 ஆந் திகதி செத்சிறிபாய இரண்டாவது கட்ட வளாகத்தில் நடாத்தப்பட்டது. சைகை மொழியினை ஊக்குவிக்கும் நோக்குடன் சைகை மொழிபெயர்ப்பாளர்களின் குழாமினை ஆரம்பிப்பதும் இங்கு இடம்பெற்றுள்ளது.

### இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் உதவிகளினை மேம்படுத்தும் செயற்திட்டம் (ESPD)

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன், அங்கவீனமுற்ற சமுதாயத்தினை தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு அமுலாக்கப்படும் Project for Promoting Employment Support for Person with Disabilities in Sri Lanka (ESPD) செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை செயலாக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஆரம்பக் கட்டச் செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், விசேடமாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினூடாக தொழிலில் ஈடுபடுத்துதல், அரச மற்றும் பிரத்தியேகப் பிரிவின் பயிலுனர்களினூடாக மிகவும் முறைசார் வகையில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்

- நிலையற்ற சந்தை நிலைமைகள் காரணமாக அடிக்கடி பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துச் செல்லுதல்.
- ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்த்தவாறு திறைசேரி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி சரியான நேரத்திற்கு கிடைக்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவது இயலாது போனது.
- மேற்கூறிய சூழ்நிலைகளின் அடிப்படையில் செயற்திட்டத்தினை அவ்வப்போது மாற்றுதல்.

### முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய செயற்திட்டங்கள்

- றியன்சி அலகியவன்ன மகளிர் திறன் விருத்தி மற்றும் பாதுகாப்பு தேசிய நிலையத்தினை ஆரம்பித்தல்.
- கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினை ஆரம்பித்தல்.
- 03 புதிய சிறுவர் வழிகாட்டல் நிலையங்களினை ஆரம்பித்தல்.

## 6.3.3 சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)

### அறிமுகம்

கிராம மக்களினை நேரடியாக உற்பத்திச் செயற்பாட்டிற்குத் தொடர்புடுத்தி தேசிய உற்பத்தியினை அதிகரிப்பதற்கு சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் நிறுவப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமங்களிலும் காணப்படும் வளங்களின் கிடைக்கும் தன்மை, உற்பத்தித் திறன், சந்தை மற்றும் நிலைபேறானாக அமுலாக்கும் இயலுமையினை அடிப்படையாகக் கொண்டு, பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களினை உற்பத்தி செய்யும் அல்லது சேவைகளினை வழங்கும் கிராமங்கள் உற்பத்திக் கிராமங்களாக மேம்படுத்தப்படுகின்றன.

கிராமமொன்றினைத் தெரிவு செய்து கொள்ளுவதற்கான அளவுகோல் பின்வருமாறாகும்.

1. அந்தந்தப் பகுதிகளுக்கே உரித்தான அல்லது தனித்துவமான தயாரிப்புக்களினை உருவாக்கும் கிராமமாக இருத்தல் அல்லது எந்தவொரு பொருளையும் தயாரிப்பதற்கான அறிவுடனான சமுதாயமொன்றினைக் கொண்ட கிராமமாக இருத்தல் அல்லது பிரதேசங்களில் காணப்படும் வளங்கள் அல்லது மூலப்பொருட்களின் கிடைக்கும் தன்மையினைக் கொண்ட கிராமமாக இருத்தல்.
2. உற்பத்திச் செயற்பாட்டில் நேரடியாக ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 20 அல்லது அதனிலும் கூடவாக இருத்தல்.
3. உற்பத்திக் கிராமத்தில் நேரடி உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும் சாத்தியம்.
4. உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்தி, தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதன் இயலுமை.
5. அடையாளம் காணப்பட்ட உற்பத்திகளுக்குள்ள சந்தை வாய்ப்பு
6. பயனாளி தொடர்ச்சியாக வருமான வழியொன்றினை முன்னெடுப்பதற்கான இயலுமை.
7. உற்பத்திக் கிராமத்தினை ஆரம்பித்து நியாயமான காலவரையறையின் பின்னர் உற்பத்தியாளருக்கு தமது உற்பத்திகளினை தன்னிச்சையாக முன்னெடுத்துச் செல்லும் இயலுமை காணப்படுதல்.
8. பிராந்திய, புவியியல், சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொருத்தப்பாட்டின் பிரகாரம் உற்பத்தித் துறைகளினைத் தெரிவு செய்தல்.
9. புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் திறன்
10. சுற்றுச்சூழல் நட்பு

### நோக்கங்கள்

- உள்ளூர் உற்பத்திகளினை ஊக்குவித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்.
- தற்போது காணப்படும் விசேட உற்பத்திகளினை வலுவூட்டுதல்.
- தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதன் மூலம் தொழிலின்மையினைக் குறைத்தல்.
- கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மாற்று வருமான வழிகளினை உருவாக்குதல்.
- தேசிய உற்பத்தியினை அதிகரித்தல்.

## மூலோபாயங்கள்

- ஒரு உற்பத்திக்கான உள்ளீடுகளான மூலப் பொருட்கள், பொதியிடல் போன்றவற்றினை வேறு கிராமங்களினுள் உற்பத்தி செய்வதற்கு வலுவூட்டுதல்.
- பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் பயன்களுக்கு 50% அல்லது அதனிலும் அதிகமான பயன் பங்களிப்பு ஈடுசெய்யப்படுதல்.
- பயனாளியின் பங்களிப்பினை, நிதி வடிவிலோ, மூலதன வடிவிலோ வேறு உள்ளீடாகவோ வழங்க முடியும்.
- உற்பத்திக் கிராமத்தின் அனைத்துப் பயனாளிகளையும் உற்பத்திச் சங்கத்தின் அங்கத்தவர்களாக்குவதன் மூலம் ஒரு உற்பத்தி அலகாகச் செயற்படும் திறன்.
- அதிகமான மக்கள் பயன்பெறும் வகையில் உற்பத்தியாளர்களுக்குப் பொதுவான பயன்பாட்டு உபகரணங்கள் மற்றும் பிற வசதிகளினை வழங்குதல்.

## செயலாக்கும் முறைமை

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயலாளரின் முழுமையான கண்காணிப்பின் கீழும், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் ஒருங்கிணைப்புடனும், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில். பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழும், உதவித் திட்டமிடல் பணிப்பாளரின் ஒருங்கிணைப்புடனும் கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட கள உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

மேலும், கிராமப்புற வளர்ச்சியின் மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, நாட்டினை அபிவிருத்தி செய்து மக்களினை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தினை உருவாக்குவதில் நன்கு வளர்ந்த உட்கட்டமைப்பு பெரும் பங்களிப்பினை வழங்குகிறது. அதன் பிரகாரம், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவும் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதும் இடம்பெறுகிறது.

இதன் கீழ், கிராமப்புற சாலைகளினை அமைத்தல், சீரமைத்தல், மதகுகள், சிறு பாலங்களினை அமைத்தல், பழுதுபார்த்தல், வடிகால் அமைப்புக்களினை அமைத்தல் மற்றும் சிறு நீர்ப்பாசனக் கால்வாய்களினை அமைத்தல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 1,350.00 | 1,185.08 | 164.92 |

## 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்

1. இவ் வருடத்தில் 16 புதிய உற்பத்திக் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், நுவரெலியா மாவட்டத்தில் சீத்தாஎலிய பிரதேச செயலகப் பிரிவில் ஸ்றோபெரி உற்பத்திக் கிராமம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் கல்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் சுற்றுலா சேவைகள் கிராமம் என்பன உற்பத்திக் கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

   2021 ஆம் ஆண்டில் 574 உற்பத்திக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் கண்டி மாவட்டத்தில் 7 கிராமங்களும், நுவரெலியா மாவட்டத்தில் 2 கிராமங்களும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு கிராமமும், அனுராதபுர மாவட்டத்தில் ஒரு கிராமமும், புத்தளம் மாவட்டத்தில் 3 கிராமங்களும், யாழ் மாவட்டத்தில் ஒரு கிராமமும், கேகாலை மாவட்டத்தில் 3 கிராமங்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 2 கிராமங்களும், கம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1 கிராமமும், பதுளை மாவட்டத்தில் ஒரு கிராமமும் மற்றும் மொனராகல மாவட்டத்தில் ஒரு கிராமமும் என்றவாறு 23 கிராமங்களினை மேம்படுதுவதற்கு 2022 ஆம் ஆண்டில் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. ரூபா. 20.04 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரித்துக் கொள்ளப்பட்டது.
2. விளம்பரச் செயற்பாடுகளுக்கு ரூபா. 0.35 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன். அதன் கீழ் 2 வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
3. 2021 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கென ரூபா. 1,111.25 பற்றுச்சீட்டுக்களுக்களுக்கான கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டுள்ளன.

### மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்கினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 01 - சகல இடங்களிலும் காணப்படும் சகல விதமான வறுமையினையும் முடிவுக்குக் கொண்டு வருதல்.

### அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்

- நிலையற்ற சந்தை நிலைமைகள் காரணமாக அடிக்கடி பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகமாக உயருதல்.
- வருட ஆரம்பத்தில் எதிர்பார்த்தவாறு திறைசேரி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி சரியான நேரத்திற்குக் கிடைக்காமையினால் திட்டமிடப்பட்ட காலவரையறைக்கு செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு முடியாது போனது.
- மேற்குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் செயற்பாட்டுத் திட்டம் அவ்வப்போது மாறியது.
- உற்பத்திச் செயற்பாட்டிற்கு இளைய சமுதாயத்தின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பயனாளி பங்களிப்பினை வழங்குவதற்கு தயக்கம் காட்டுதல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியில் ஈடுபடுவதை விட மூலப்பொருட்களாக சந்தைப்படுத்துவதற்கு எத்தனித்தல். (உதாரணம் - பால்).
- மக்களும் மற்றும் உத்தியோகத்தர்களும் நீண்டகாலமாக வளர்ச்சி என்ற கருத்தாக்கத்தில் பாரம்பரியக் கட்டமைப்பில் சிக்கியிருத்தல்.

**முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்த புதிய செயற்திட்டங்கள்.**

- தற்போதுள்ள சமூகம் மற்றும் பொருளாதார நிலைகளினைக் கவனத்திற் கொண்டு 2023 ஆம் ஆண்டில் 145 புதிய உற்பத்திக் கிராமங்களினை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், தற்போது அமைக்கப்பட்டுள்ள தேசிய உற்பத்திக் கிராமங்களுக்கிடையே சாத்தியத்தினைக் கொண்ட கிராமங்களினை மேம்படுத்துவதை முன்னெடுப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 6.3.4 அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் (NSPD)

### அறிமுகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கு நட்புடனான சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்கும் நோக்குடன் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களினை அமுலாக்குதல் இதன் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

### நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல்.
- அங்கவீனம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களினைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் சரியான புள்ளி விவரங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.
- அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளித்தல தொடர்பில் நடவடிக்கைகளினை எடுத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளினை தொழிற்படுத்துதல், ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் உதவிகளினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் தேவைகளினைப் பூர்த்தி செய்தல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு பௌதிக சுற்றுச்சூழலினை, பொருத்தப்பாட்டின் பிரகாரம் அமைப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைகளினைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டல்களினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் தேவைகள் மற்றும் நிலைப்பாடு தொடர்பில் பொதுமக்களினை விழிப்புணர்வூட்டுவதை மேம்படுத்துதல்.

### மூலோபாயங்கள்

- குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் அடிப்படைத் தேவைகளினை பூர்த்தி செய்வதை இலகுவாக்குவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- தனிப்பெற்றாரினைக் கொண்ட குடும்பங்களின் நலன்புரியினை மேலோங்கச் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினை நாளதுவரைப்படுத்தி அங்கவீனமுற்ற நபர்களுக்கு அதிகளவிலான பயன்களினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இடமளித்தல்.
- செவிப்புலனற்ற சமுதாயத்தின் தொடர்பாடல் உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக சைகைமொழிச் சட்ட வரைவினைத் தயாரித்தல்.
- அங்கவீனமுற்ற சமுதாயத்தின் பிரவேசிப்பு உரிமையினை உறுதிப்படுத்துவதற்கான பிரவேசிப்பு வசதிகள் ஒழுங்குவிதிகளினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை முன்னிட்டு பிரத்தியேகப் பிரிவுடன் இணைந்து தொழில்களினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- விக்டோரியா இல்லத்தின் விடுதியிலுள்ள நோயாளர்களின் நலன்புரிக்கென மாதாந்தப் பராமரிப்புச் செலவுகளினை ஈடுசெய்தல்.
- சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அங்கவீனமாவதைத் தடுப்பதற்கென மாதாந்த வாழ்வாதார உதவிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் எதிர்காலத்தினை பாதுகாப்பதற்காக 04 புதிய பாதுகாப்பு இல்லங்களினை நிறுவுவதற்கு நடவடிக்கைகளினை எடுத்தல்.
- சுயமாக எழுந்து நிற்கப் போராடும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு நிதியுதவிகள், நிதியளிப்பு, உற்பத்தித்திறன், சந்தைப்படுத்தல் என ஒவ்வொரு பிரிவின் மீதும் தலையீடு செய்து அவர்களினை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு (ரூ.மி.) | 2022.09.30 ஆந் திகதி வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பாத்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 32.00 | 24.10 | 7.90 |
| மீண்டுவரும் | 7,520.62 | 4,062.88 | 3,457.74 |
| **மொத்தம்** | **7,552.62** | **4,086.98** | **3,465.64** |

பிற நிதியங்கள்

| நிதியங்களின் வகை | 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| வீடமைப்பு நிதியம் (சுப்பிரி வாசனா சீட்டிழுப்பு வருமானத்திலிருந்து 5%) | எதிர்பார்த்த நிதி ரூ. 12.00 மி. | 7.20 | 4.80 |

## 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட அபிவிருத்த நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

**அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டவரைவு**

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவின் சில துணைப் பிரிவுகளின் திருத்தம் 2003 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதுடன், அது, 2003 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டமாக பெயரிடப்பட்டுள்ளது. அச்சட்டம் மீளவும் திருத்தப்படுவதுடன், புதிய சட்ட வரைவினை அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முன்வைப்பதற்காக அமைச்சு ஒப்படைத்துள்ளது.

## சைகை மொழிச் சட்ட வரைவு

சைகை மொழிச் சட்ட வரைவு குழுவின் இணக்கப்பாட்டுடன் திருத்தஞ் செய்யப்பட்ட சட்ட வரைவு தொடர்பில் 2021.01.18 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. 2021.01.22 ஆந்திகதி சட்டவரைஞருடன் நடைபெற்ற கலந்துரையாடலில்

எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு இணக்கத்திற்கு வந்து அத்திருத்தம் இடம்பெற்று நிறைவு பெற்றுள்ளதுடன், மீளவும் வரைவு, அமைச்சுக்கு முன்வைக்கப்படவுள்ளது.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்பு கட்டளைகள் வர்த்தமானி

அரச கட்டிடங்கள், பொது இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்கள் அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதிய 1467/15 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனைத் திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி தற்போதுள்ள நிலைமைக்குப் பொருந்தும் வகையில் மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறை தொடர்பிலான நிபுணர்களினைக் கொண்ட குழுவொன்றினூடாக சர்வதேச தரம் மற்றும் விவரக் குறிப்புக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வர்த்தமானி வரைவு திருத்தம் நிறைவு பெற்றும் துணைக் குழுவுக்கு முன்வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவிகளினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

| **செயற்திட்ட இலக்கம்** 01 | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல்.** |
|---|---|

குறைந்த வருமானத்தினைப் பெறும் அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவுமுகமாக, ஒருங்கிணைந்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் அவர்களினை சுயாதீனமான நபர்களாக ஆக்குவதற்குமாக முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், செவிப்புலக் கருவிகள், மூன்றுசில்லு வண்டிகள், ஊன்றுகோல்கள், கையூன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் என்றவாறும், காற்றுமெத்தைகள், தண்ணீர் மெத்தைகள் போன்ற விசேட உபகரணங்கள் என்றவாறும் மருத்துவப் பரிந்துரைகளின் கீழ் ஆகக்கூடியது ரூபா. 20,000 வரை நிதியுதவிகள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 9.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 6.45 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதில் 16 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளன. 10,906 மூக்குக் கண்ணாடிகள் மற்றும் 5 நபர்களுக்கு நிதியுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

| **செயற்திட்ட இலக்கம்** 02 | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் நீண்டகாலமாகவே நோயினால் பீடிக்கப்பட்டவர்கள், அங்கவீனமாவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது. அதில் அரச வைத்தியசாலைகளினூடாக வழங்கப்படாத மருந்துகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், சிகிச்சைகளுக்குச் செல்லுவதற்கும், இதயம், கண், சிறுநீரகம், மூளை, இடுப்பு எலும்பு, செவிப்புல திசு போன்ற வேண்டிய சத்திர சிகிச்சையொன்றுக்கான தேவையான செலவுகளினை ஈடுசெய்வதற்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆகக்கூடியது ரூபா. 20,000 வரை இதன் கீழ் உதவிகள் வழங்கப்படும். இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 6.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 10.45 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. 696 நபர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம்** 03 | **அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் தன்னார்வ நிறுவனங்களுக்கு நிதியுதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் தன்னார்வ அமைப்பொன்றுக்கு ரூபா. 0.20 மில்லியன் என்றவாறு நிதியுதவி வழங்குவதற்கு ரூபா. 1.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 02 தன்னார்வ அமைப்புக்களுக்கு ரூபா. 0.40 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 04** | **அங்கவீனமுற்ற நபர்களுக்குக் கல்வி உதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்நாள்பூராவும் ஒரு தடைவை மாத்திரம் கிடைக்கக்கூடியவாறு ஆகக்கூடியது ரூபா. 10,000 என்றவாறு அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு பிரதேச செயலாளரின் பரிந்துரைகளுடன் உதவிகளினை வழங்குவதற்கு ரூபா. 4.00 மிலியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 364 மாணவர்களுக்கு ரூபா. 3.74 மில்லியன் செலவு செய்யப்பட்டு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 05** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

சுய தொழிலொன்றினை ஆரம்பித்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக நபர் ஒருவருக்கு அல்லது குடும்பம் ஒன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. 20,000 வரை உதவிகள் வழங்கப்படுவதுடன், சுயதொழில்களினை ஒழுங்குபடுத்துதல், உற்பத்திகளினைத் தரமானதாக உயர்த்துவதற்கு வழிகாட்டுதல் மற்றும் விற்பனை தொடர்பில் தலையீடு செய்தல் இதில் இடம்பெறுகிறது. இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 4.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 3.59 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. 136 நபர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## மீண்டுவரும் ஒதுக்கீடுகளி

| **செயற்திட்ட இலக்கம் 01** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல்.** |
|---|---|

முழுநாட்டினையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச செயகலங்கள் மட்டத்தில் பொருத்தமான பயனாளிகளினை அடையாளம் கண்டு அது தொடர்பில் கொடுப்பனவுகளினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை ரூபா. 5,000/- என்றவாறும், மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை ரூபா. 7.500/- என்றவாறு மாதாந்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல காத்திருப்புப் பட்டயலிலுள்ள பயனாளிகளுக்கு ரூபா. 5,000/- என்றவாறு கொடுப்பனவு, மே மாதம் தொடக்கம் இடம்பெற்றுள்ளது. உலக வங்கியினால் நிதி வழங்கப்படும் அவசரகால பதில் கூறுகள் (CERC) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக் கொடுப்பனவு செலுத்தப்படும். (அத்தகவல்கள் பக்க இலக்கங்கள் 14-16 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது). அதன் பிரகாரம் இச் செயற்திட்டத்திற்கு ரூபா. 4,860.00 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 72,000 பயனாளிகளுக்கு ரூபா. 2,610.52 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

| ***செயற்திட்ட இலக்கம் 02*** | **சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 5,000/- வாழ்வாதார உதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

முழு நாட்டினையும் உள்ளடக்குமாறு பிரதேச செயலகங்கள் மட்டத்தில் தகைமையினைக்கொண்ட பயனாளிகளினை அடையாளம் கண்டு அதனூடாக கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை ரூபா. 5,000/- என்றவாறும், மே மாதம் தொடக்கம் செப்ரெம்பம் மாதம் வரை ரூபா. 7.500/- என்றவாறும் மாதாந்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கு ரூபா. 5,000/ என்றவாறு கொடுப்பனவு மே மாதம் தொடக்கம் இடம்பெற்று வருகிறது. உலக வங்கியினால் நிதி வழங்கப்பட்டு வரும் அவசரகால பதில் கூறுகள் (CERC) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக்கொடுப்பனவுகள் ஈடு செய்யப்பட்டு வருகிறது. (அத்தகவல்கள் பக்க இலக்கங்கள் 14-16 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன). அன் பிரகாரம் செயற்திட்டத்திற்கு ரூபா. 2,642.62 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 39,001 பயனாளிகளுக்கு ரூபா 1,443.78 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

| *செயற்திட்ட இலக்கம் 03* | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.** |
|---|---|

தொழிலொன்றில் ஈடுபடக்கூடிய நிலையிலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கு, ரூபா. 15,000/- ஆகக்கூடியது என்றவாறு பிரத்தியேகச் சேவை வழங்குனர்கள் கொடுப்பனவு செய்யும் சம்பளத்தில் அரைச் சம்பள நிவாரண உதவியொன்றின் கீழ் முழு நாட்டினையும் உள்ளடக்குமாறு பிரத்தியேகப் பிரிவின் தொழில்களுக்கு முன்வைப்பது இதில் இடம்பெறுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் ரூபா. 10.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் ரூபா. 2.58 மில்லியன் செலவு செய்யப்பட்டு 105 நபர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 04** | **விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் ஊழியர்களின் மாதாந்தக் கொடுப்பனவுகள், நீர், மின் கட்டணங்களினை ஈடுசெய்வதற்கு உதவிகளினை வழங்குவதற்கு ரூபா 8.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 6.00 மில்லியன் செலவு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

## பிற ஒதுக்கீடுகளி

| **செயற்திட்டஇலக்கம் 01** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்.** |
|---|---|

குறைந்த வருமானப் பயனாளிகளான, காணியொன்றுக்கு உரித்தான அங்கவீனமுற்ற நபர்களுக்கு புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 250,000/- மற்றும் பழுதுபார்ப்பதற்கு ரூபா. 150,000/- என்றவாறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுவதுடன், தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து 5% வீடமைப்பு நிதியத்திற்கு வழங்கப்படுகிறது. இவ் வருடத்திற்கு ரூபா.12.00 மில்லியன் ஒதுக்கீடுகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 7.20 மில்லியன் ஒதுக்கீடுகள், 82 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 01 - சகல இடத்திலும் காணப்படும் சகல விதமான வறுமையினையும் முடிவுக்குக் கொண்டுவருதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 03 - ஆரோக்கியமான வாழ்க்கையினை உறுதிப்படுத்தி அனைத்து வயதிலுமுள்ள சகலருக்கும் நலன்புரியினை மேம்படுத்துதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 04 - முழுமையான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கு வாழ்நாள் பூராவும் கல்வி கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 08 - அனைவருக்கும் போசாக்கான, முழுமையான, நிலைபேறான பொருளாதார மேம்பாடு, பூரணமான, விளைத்திறனான மற்றும் உன்னதமான தொழில்களினை ஊக்குவித்தல்.

## 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்டுள்ள பிற அபிவிருத்திச் செயற்திட்டங்கள்.

- **சைகை மொழியினை மேலதிக பாடமொன்றாக அமைத்தல்.**

  அரச உத்தியோகத்தர்களுக்கு, சைகை மொழியினை மேலதிக பாடமொன்றாக அமைத்து அங்கவீனமுற்ற நபர்கள் அரச சேவையில் ஆகக்கூடிய பலன்களினைப் பெறக்கூடிய சூழலொன்றினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இது தொடர்பில் ஆரம்பக் கட்டமாக

விடயப் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன், சைகை மொழியினை மேலதிக பாடமொன்றாக நிறுவுதல் தொடர்பில் பொருத்தமான உத்தியோகத்தர்களினை இனங்கண்டு முன்வைக்குமாறு அரச உள்ளூராட்சி அமைச்சினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய களத்தின் பொருத்தமான உத்தியோகத்தர்களினைத் தெரிவு செய்து பெயர்ப் பட்டியலொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மாவட்டச் செயலகங்களுக்கு கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது.

- **04 பாதுகாப்பு இல்லங்களினை நிர்மாணிக்கும் செயற்பாடுகளினை ஆரம்பித்தல்.**
  நாடுபூராவும் 06 பாதுகாப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்காக அமைப/18/0755/711/011 என்ற இலக்கப் பத்திரத்தினூடாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. 04 பாதுகாப்பு இல்லங்களினை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் ஒதுக்கீடுகளினைப் பெறுவதிலுள்ள சிக்கல் காரணமாக தம்புள்ள மற்றும் அக்குரஸ்ஸ இரண்டு நிலையங்களினை மாத்திரம் செயலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தம்புள்ள பாதுகாப்பு நிலையத்திற்கு காணியினை ஒப்படைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. அக்குரஸ்ஸ முன்பிள்ளைப்பருவ விருத்தி
  நிலையத்தின் நிர்மாணிப்பு இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது.

## அமுலாக்கிய வேளையில் எதிர்கொண்ட சவால்கள்

- நிலையற்ற சந்தை நிலைகள் காரணமாக அடிக்கடி பொருடகள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகமாக உயருதல்.
- வருட ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு திறைசேறி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி சரியான நேரத்திற்கு கிடைக்காமை.
- மேற்கூறிய சூழ்நிலைகளின் கீழ் செயற்பாட்டுத் திட்டத்தினை அவ்வப்போது மாற்றுதல்.

## முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய செயற்திட்டங்கள்.

- முழுநாட்டினையும் உள்ளடக்குமாறு 7500 அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு கல்வி நிலையங்களுக்குச் செல்லுவதற்கு மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவினை வழங்குதல்.

## 6.3.5. முதியோர்களுக்கான தேசிய செயலகம் (NSE)

### அறிமுகம்

இலங்கைவாழ் முதியோர் சமுதாயத்தின் உரிமைகளினைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் தனித்துவமான வாய்ப்பொன்றாக 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினைக் கொண்டு திருத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தினை அமைத்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

- முதயோர்களுக்கு அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குதல் குடும்பத்தினூடாக நிறைவேற்ற வேண்டிய பங்கு என்பதை சமுதாயத்திற்கு உணர்த்துதல்.
- முதியோர்களினைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகப் பிரிவின் முதலீட்டு வாய்ப்புக்களினை அதிகரித்தல்.
- முதியோர்களின் இயலுமைகள், திறன் விருத்தியினூடாக வருமானங்களினைப் பெருக்கும் வழிகளுக்கு முன்வைத்தல்.
- விழிப்புணர்வினை வளர்ப்பதனூடாக ஓய்வுகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினைச் சமாளிப்பதற்கு தயார்படுத்துதல்.
- உதவி தேவைப்படும் முதியோர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.

### மூலோபாயங்கள்

- கிராம உத்தியோகத்தர் தொகுதி மட்டத்தில் முதியோர் சங்கங்களினை அமைத்து அதனூடாக முதியோர்களினைத் தனிமைப்படுத்துவதைக் குறைத்தல்.
- முதியோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களினை அமைத்தல்.
- சகல முதியோர் இல்லங்களினையும் தரத்திற்கு அமைவாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- முதியோர்களுக்கென வாழ்வாதார வழிகளினை உருவாக்குதல்.
- பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதனூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- முதியோர் தேவைகளினை இனங்கண்டு அது தொடர்பில் கொள்கைகளினைத் தயாரித்து அமுலாக்குதல்.
- முதியோர்கள் தொடர்பிலான தகவல்களினை நாளதுவரைப்படுத்தல்.
- பிள்ளைகளின் புறக்கணிப்புக்கு உட்படும் பெற்றோர்களுக்கு நியாயத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு பராமரிப்புச் சபையினை முன்னெடுத்துச் செல்லுதல்.
- குறைந்த வருமானத்தினைக் கொண்ட முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| செலவுகளின் வகை | 2022 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 5.00 | 1.00 | 4.00 |
| மீண்டுவரும் | 13,766.09 | 7,123.03 | 6,643.06 |
| **மொத்தம்** | **13,771.09** | **7,124.03** | **6,647.06** |

**பிற நிதியங்கள்**

| கட்டுநிதியின் வகை | 2022 ஆம் ஆண்டு தொடர்பில் ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| முதியோர் பாதுகாப்பு நிதியம் | 763.35 | 314.77 | 448.58 |

## 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்

மீண்டுவரும் ஒதுக்கீடுகள்

| செயற்திட்ட இலக்கம் 01 | முதியோர் பயன்கள் நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|

இச் செயற்திட்டத்திற்கு ரூபா. 50.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 13.89 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று பெறப்பட்டுள்ளது. இதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. கிராமிய மட்ட முதியோர் சங்கங்களினை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டதிட்டத்துடனான வரைவு தேசிய சபைக்கு ஆய்வுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ரூபா. 1.23 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 120,000 பிரதிகள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
2. பாடசாலை மாணவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற நபர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 5.24 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 135 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூபா. 0.48 மில்லியன் செலவு செய்யப்பட்டுளது.
3. முதியோர் அடையாள அட்டைகளினை வழங்குவதற்கு ரூ. 3.10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபா. 0.06 மில்லியன் செலவு செய்யப்பட்டு 183 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
4. முதியோர் இல்லங்களினை மறுசீரமைத்தல், பதிவு செய்தல், தரப்படுத்துதல் மற்றும் மாலிகாதன்ன முதியோர் இல்லத்தினைப் பராமரிப்பதற்காக ரூபா. 1.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 0.90 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.
5. 500 முதியோர்களுக்கு சுய தொழில்களினை வழங்குவதற்கென்று ரூபா. 15.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபா. 5.22 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டு 197 முதியோர்களுக்கு பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.
6. தேசிய முதியோர் சபை மற்றும் பராமரிப்புச் சபையினை முன்னெடுப்பதற்கு ரூபா. 3.62 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 1.91 மில்லியன் செலவு செய்யப்பட்டு 35 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.
7. முதியோர் கொடுப்பனவினை வழங்குவதற்கான நிர்வாகச் செலவுகளாக ரூர. 4.70 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா. 3.60 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.
8. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துவதற்கு ரூபா. 1.26 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.14 மில்லியன் செலவு செய்யப்பட்டு ஒரு கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.
9. கள ஆய்வுக்காக ரூபா. 0.50 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா. 0.19 மில்லியன் செலவொன்று ஈடுசெய்யப்பட்டு காலி மற்றும் கம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களின் கள ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன.
10. ஊடக நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் வெளியீடுகளினை வெளியீடு செய்வதற்கு ரூபா. 12.76 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா. 1.36 மில்லியன் செலவொன்று ஈடு செய்யப்பட்டு 1,000 புத்தகங்கள் மற்றும் 37,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டுள்ளன. நூலகத்திற்கு 143 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

11. ஒக்டோபர் 01 ஆந் திகதி சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டத்திற்கு ரூபா. 0.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 02** | **70 வயதிற்குமேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல்.** |
|---|---|

முழு நாட்டினையும் உள்ளடக்குமாறு பிரதேச செயலகங்கள் மட்டத்தில் தகைமையினைக் கொண்ட பயனாளிகளினை இனங்கண்டு அதனூடாக கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் மாதம் வரை ரூபா. 2,000/- என்றவாறும், மே மாதம் தொடக்கம் ரூபா. 5,000/- என்றவாறும் மாதாந்தம் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கு ரூபா. 5,000/- என்றவாறும் கொடுப்பனவுகள் மே மாதம் தொடக்கம் இடம்பெற்று வருகிறது. உலக வங்கியினூடாக நிதி வழங்கப்பட்டுவரும் அவசரநிலை பதில் கூறுகள் (CERC) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக் கொடுப்பனவுகள் ஈடு செய்யப்பட்டு வருகிறது. (அத்தகவல்கள் பக்க இலக்கங்கள் 14-16 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன). அதன் பிரகாரம் இச் செயற்திட்டத்திற்கு ரூபா. 13,550.00 ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 627,771 பயனாளிகளுக்கு ரூபா. 7,000.20 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

| **செயற்திட்ட இலக்கம் 03** | **100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல்.** |
|---|---|

முழுநாட்டினையும் உள்ளடக்குமாறு பிரதேச செயலகங்கள் மட்டத்தில் தகைமையினைக் கொண்ட பயனாளிகள் இனங்காணப்பட்டு அதனூடாக கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை ரூபா. 5,000/- என்றவாறும், மே மாதம் தொடக்கம் ரூபா.7,500/- என்றவாறும் மாதாந்தாம் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியினால் நிதி வழங்கப்பட்டுவரும் அவசரநிலை பதில் கூறுகள் (CERC) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக்கொடுப்பனவுகள் ஈடுசெய்யப்பட்டு வருகிறது. (அத்தகவல்கள் பக்க இலக்கங்கள் 14-16 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன). அதன் பிரகாரம் இச்செயற்திட்டத்திற்கு ரூபா. 33.59 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 446 பயனாளிகளுக்கு ரூபா. 16,37 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### முதியோர் பாதுகாப்பு நிதியம்

| **செயற்திட்ட இலக்கம் 01** | **முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக செயலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்.** |
|---|---|

1. எவ்வித கொடுப்பனவொன்றுக்கும் உரித்தினைக் கொண்டிராத நாட்பட்ட தொற்றாத நோய்களினால் வருந்தும் முதியோர்களுக்கு ரூபா. 25,000/- என்றவாறு வழங்கப்படும் “ஆரோக்யா” மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குவதற்கு ரூபா. 25.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன, 688 முதியோர்களுக்கு ரூபா. 17.48 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.
2. குறைந்த வருமானத்தினைக் கொண்ட 300 மூத்த பிரஜைகளுக்கு செவிப்புலக் கருவிகளினை வழங்குவதற்கு ரூபா. 5.43 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 107 முதியோர்களுக்கு ரூபா. 2.24 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு 144 முதியோர்களுக்கு செவிப்புலக் கருவகள் வழங்கப்பட்டுள்ளன.
3. பன்னல நல்வரவு முதியோர் இல்லத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பில் ரூபா. 10.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 7.25 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
4. சரண முதியோர் இல்லத்தின் நிர்வாகம் (தெகிஅத்தகண்டிய) தொடர்பில் ரூபா. 0.22 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 0.12 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
5. கதிர்காமம் முதியோர் இல்லத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா. 180.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை ரூபா. 93.25 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
6. 50 முதியோர் இல்லங்களினை நிர்மாணித்தல் மற்றும் மறுசீரமைப்பதற்கு இல்லமொன்றுக்கு ரூபா. 2.00 மில்லியன் நிதியுதவி வழங்கப்படுதல். இதுதொடர்பில் ரூபா. 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 3.71 மில்லியன் 6 முதியோர் இல்லங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
7. 50 முதியோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு, நிலையமொன்றுக்கு ரூபா. 3.5 மில்லியன் வழங்கப்படுதல். இது தொடர்பில் ரூபா. 175.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா. 32.69 மில்லியன், 17 முதியோர் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
8. குறைந்த வருமானத்தினைக் கொண்ட முதியோர்களுக்கு இல்லங்களினை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்ப்பதற்கு ரூபா. 5.00 மில்லியன் என்றவாறு வழங்கும் திரிய பியச வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 25.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 48 முதியோர்களுக்கு ரூபா. 24.00 மில்லியன் வீடமைப்பு உதவியாக வழங்கப்பட்டுள்ளது.
9. முதியோர்களுக்கு தமது வீடுகளிலேயே வாழ்வதற்குத் தேவையான குறைந்த வசதிகள் மற்றும் ஆரோக்கிய வசதிகளினை வழங்குவதற்கு பயனாளி ஒருவருக்கு ஆகக்கூடியது ரூபா. 0.075 மில்லியனினை

வழங்கும் இலகு நிதியுதவி முன்மொழிவுத் திட்டம், இதில் பிரதேச செயலகமொன்றுக்கு ஆகக்குறைந்தது 06 பயனாளிகள் என்றவாறு 2,000 முதியோர்களுக்கு பயன்களினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா.100 மில்லியன் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1,521 முதியோர்களுக்கு ரூபா. 75.69 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

10. முதியோர் மதச் சுற்றுலாக்களினை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு ரூபா. 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சுற்றுலா ஒன்றுக்கு ரூபா. 0.05 மில்லியன் என்றவாறு 100 சுற்றுலாக்களுக்கு நிதி வசதிகள் வழங்கப்படுகிறது. இதுவரை 75 சுற்றுலாக்கள் தொடர்பில் ரூபா. 3.53 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.
11. கிராம மட்டத்தில் முதியோர் சங்கங்களினை வலுவூட்டுவதற்கு ரூபா. 99.90 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஆகக்கூடியது ரூபா. 0.1 மில்லியன் என்றவாறு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் 999 சங்கங்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 501 சங்கங்களுக்கு ரூபா. 50.11 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
12. நிலையமொன்றுக்கு ரூபா. 0.05 மில்லியன் என்றவாறு 50 முதியோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவியினை வழங்குவதற்கு ரூபா. 25.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபா. 3.61 மில்லியன் செலவு செய்யப்பட்டு 09 பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
13. 100 முதியோர் இல்லங்களுக்கு, வேண்டுகோளின் கீழ் ஏதேனும் தொற்று நோய் அல்லது அவசர நிலையின்போது ரூபா. 2000/- உதவியினை வழங்குவதற்கு ரூபா. 2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 3 முதியோர் இல்லங்களுக்கு ரூபா. 0.46 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

## மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 01 - சகல இடங்களிலும் காணப்படும் சகலவிதமான வறுமையினையும் முடிவுக்குக் கொண்டுவருதல்.
- ஊட்டச்சத்தை அடைந்து, நிலையான விவசாயத்தை ஊக்குவிக்கவும்
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 02 - பசியினை ஒழித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் சிறந்த ஊட்டச்சத்து நிலையினை அடைந்து, நிலையான விவசாயத்தினை ஊக்குவித்தல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கம் 16 - பேண்தகு அபிவிருத்திக்கு அமைதியான, முழுமையான சமுதாயமொன்றினை உருவாக்குதல், அனைவருக்கும் நீதிக்கான வாய்ப்புக்களினை வழங்குதல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்பினைக் கொண்ட முழுமையான நிறுவனங்களினைக் கட்டியெழுப்புதல்.

## அமுலாக்கிய வேளையில் எதிர்கொண்ட சவால்கள்

- நிலையற்ற சந்தை நிலையின் காரணமாக அடிக்கடி பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகமாக உயருதல்.
- வருட ஆரம்பத்தில் எதிர்பார்த்துள்ளவாறு திறைசேரி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதிகள் சரியான நேரத்திற்குக் கிடைக்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட காலவரையறையினுள் செயற்திட்டங்கள மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு முடியாது போனமை.
- மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் செயற்பாட்டுத் திட்டம் அவ்வப்போது மாற்றப்பட்டமை.

## முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய செயற்திட்டங்கள்

- முதியோர்களுக்கு டிஜிட்டல் எழுத்தறிவினை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதாரத்திற்கு முதியோர்களினைப் பங்குபற்றச் செய்வதற்கான செயற்திட்டம்.
- முதியோர் சுவ சரண பாதுகாப்பு முன்மொழிவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் அமுலாக்குதல்.

## 6.3.6 இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

### அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சமூகப் பாதுகாப்புச் சபை சட்டத்தினூடாகவும் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாகவும் நிறுவப்பட்டு அமுலாக்கப்பட்டு வரும் அரச நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும்.

### நோக்கங்கள்

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது, அக்காலத்தில் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மரணிக்கும்போது, அவர்களில் தங்கிவாழ்வோருக்கு நிவாரணத்தினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை உரிய தொழிற் பயிற்சிகளில் ஈடுபடும்படி வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சுய தொழில்களில் ஈடுபடுமாறு இளைஞர்களினை வலுவூட்டுதல், அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் பயன்கள் தொடர்பில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களினை விழிப்புணர்வூட்டுதல்.
- சாதாரணமாக சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

### மூலோபாயங்கள்

- ஒவ்வொரு இலக்குக் குழுவினையும் (மாலுமிகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் போன்றோர்) இலக்காகக் கொண்டு கவர்ச்சிகரமான பயன்களுடன் புதிய ஓய்வூதியத் திட்டங்களினைத் தயாரித்து அறிமுகப்படுத்துதல்
- வினைத்திறனான வாடிக்கை சேவையொன்றினை வழங்குவதற்கு புதிய ஓய்வூதிய முகாமைத்துவத் திட்டங்களினை அறிமுகப்படுத்துதல், உகந்த தகவல் அமைப்பொன்றினை நிறுவுவதனூடாக பயன்களின் உரிமைகோரலினை எளிதாக்குதல், நெறிப்படுத்துதல் மற்றும் விரைவுபடுத்துதல்.
- பள்ளி மாணவர் சமுதாயத்தினரிடையே சமூகப் பாதுகாப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- இளைய சமுதாயத்தினை சுயதொழில்களுக்கு அனுப்புவதை வலுவூட்டுதல், ஊக்கப்படுத்துவற்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிணைந்த இளைஞர் குழுக்களினை வலுப்படுத்தும், விழிப்புணர்வூட்டும் மற்றும் ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுலாக்குதலினூடாக ஒட்டுமொத்தமான அனைத்து சமூகப பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களினையும் ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டு வருதல்.
- வாடிக்கையாளர் சேவைகளினை மேம்படுத்துவதற்காக பிரதேச செயலகங்கள் மட்டத்தில் உத்தியோகத்தர்களினை இணைப்புச் செய்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்.

- வணிக வங்கிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளினூடாக பயன்களினைக் கொடுப்பனவு செய்வதற்கும் மற்றும் தவணைகளினைச் சேகரிப்பதற்கும் வாய்ப்பு வழங்குவதனூடாக வாடிக்கையாளர் அந்நியப்படுத்தப்படுவதைக் குறைத்தல்.
- சபை ஒருங்கிணைப்புடன் அங்கத்துவத்தினைப் பெறும் நபர்களுக்கு அரச வணிக வங்கிகளினூடாக கடன் நிதியினை வழங்குதல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு (ரூ.மி.) | 2022.09.30 ஆந் திகதி வரை நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மீண்டுவரும் | 135.40 | 103.68 | 31.72 |

## 2022.09.30 ஆந் திகதி வரை அடைந்த சாதனைகள் மற்றும் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதன் முன்னேற்றம்.

ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைத் திட்டத்திற்கு அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதன் முன்னேற்றம்.

| ஆண்டு | அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதன் முன்னேற்றம் | பெறுமதி (முதலாவது தவணை) (ரூ,மி.) |
|---|---|---|
| 1996.01.01 - 2021.12.31 | 834,796 | 641.34 |
| 2022.01.01 - 2022.09.30 வரை | 16,788 | 46.67 |
| **முழுமொத்தம்** | **851,584** | **688.01** |

### 2022.01.01 - 2022.09.30 ஆந் திகதி வரை பயன்களினைக் கொடுப்பனவு செய்தல்

| விவரம் | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) |
|---|---|---|
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 33,690 | 281.99 |
| மரணப் பணிக் கொடைக் கொடுப்பனவுகள் | 33 | 1.23 |
| பகுதியளவிலான அங்கவீன மரணப் பணிக் கொடைக் கொடுப்பனவுகள் | - | - |
| முழுமையான அங்கவீன மாதாந்தக் கொடுப்பனவுகள் | 53 | 0.34 |
| மேலதிகப் பயன்கள் (5 ஆந் தர புலமைப்பரிசில், க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) | 353 | 4.08 |
| **மொத்தம்** | **34,129** | **287.30** |

### 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட பிற அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்.

- சமூகப் பாதுகாப்புப் பிரேரணை திட்டங்களுக்கு 16,788 புதிய அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.
- செயலற்ற அங்கத்தவர்களினை மீளவும் செயலாக்குவதற்கு புதிய செயற்திட்டத்தினூடாக 22 செயலற்ற அங்கத்தவர்களினை மீளவும் செயலாக்குதல்.

- 1,288 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- கணனிமயப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதிய முகாமைத்துவத் திட்டமொன்றினை விருத்தி செய்வதற்கு தேவையான விரிவான விவரக்குறிப்பு அறிக்கை (DSR) தயாரிப்பினை நிறைவு செய்தல்.
- சுய தொழில்களுக்கு இளைஞர்களினை ஊக்குவித்தல், அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துவதற்கு 03 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- பள்ளி மாணவர்களிடையே சமூகப் பாதுகாப்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தினை பிரபலப்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- சமூக ஊடக வலையமைப்புக்கள், தொலைக்காட்சி, வானொலி விளம்பரங்களினை விளம்பரப்படுத்துதல், அலைவரிசைகளினூடாக செய்தி ஒளிபரப்பு, வானொலிக் கலந்துரையாடல்கள் மற்றும் செய்திக் கட்டுரைகள் என்ற திட்டங்களினூடாக ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணை திட்டங்களினை ஊக்குவித்தல்.
- வெளிநாட்டில் பணியாற்றுபவர்களுக்கு புதிய ஓய்வூதிய பிரேரணைகள் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- பிக்குகளின் பெற்றோருக்கு புதிய ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- கடற்படையினருக்கு புதிய சமூகப் பாதுகாப்பு பிரேரணைகள் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- கலைஞர்கள் ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்திற்கு 85 கலைஞர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

## மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 01 - சலக இடங்களிலுமுள்ள சகல விதமான வறுமையினையும் முடிவுக்குக் கொண்டு வருதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கம் 16 - பேண்தகு அபிவிருத்திக்கு அமைதியான, முழுமையான சமுதாயமொன்றினை உருவாக்குதல், அனைவருக்கும் நீதிக்கான வாய்ப்புக்களினை வழங்குதல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்பினைக் கொண்ட முழுமையான நிறுவனங்களினைக் கட்டியெழுப்புதல்.

## அமுலாக்கிய வேளையில் எதிர்கொண்ட சவால்கள்

- ஓய்வூதியத்தின் அவசியம் குறித்து பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு மற்றும் புரிந்துணர்வு இல்லாமை.
- பிரேரணைத் திட்டங்களின் அங்கத்தவராயினும் குறிப்பிட்டவாறு தவணைகளினைச் செலுத்தாமையினால் செயலற்ற அங்கத்தவர்களின் சதவீதம் அதிகமாகக் காணப்படுதல் மற்றும் அதில் செயலிலுள்ள அங்கத்தவரின் சதவீதத்தினை அதிக மட்டத்தில் முன்னெடுப்பதற்கு அங்கத்துவப் பணம் தொடர்பில் அரச மட்டம், தொழில் வழங்குனர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் போன்ற வெளித்தரப்பினரிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பு குறைவாகக் காணப்படுதல்.
- எமது நாட்டில் சமூகப் பாதுகாப்பு மக்களுக்கு கட்டாயமானதாகவில்லை.
- பல்வேறு துறைகளினை இலக்காகக் கொண்டு நிறுவனம்சார் மட்டத்தில் ஓய்வூதியத் திட்டங்களினை அறிமுகப்படுத்துதல்.
- போட்டிப் பயன்களுடன்கூடிய முன்மொழிவுத் திட்டங்களினை அறிமுகப்படுத்துவதற்கு சட்டரீதியான தடைகள் காணப்படுதல் மற்றும் விளம்பர நடவடிக்கைகளுக்கு போதிய ஒதுக்கீடு செய்யப்படமை.

- பதவியணி வெற்றிடங்கள் பாரியளவில் காணப்படுதல் மற்றும் அது தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சட்டரீதியலான தடைகள் காணப்படுதல்.
- வருடத்தின் முதல் 08 மாதங்களில், கொவிட் தொற்றுநோயுடன் காணப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் எரிபொருள் நெருக்கடியின் காரணமாக களப் பணியில் இடையூறுகள் ஏற்படுதல்.
- அதிக பணவீக்கம் காரணமாக கைச்சாத்திடப்பட்ட ஓய்வூதிய திட்டங்களில் தேய்மானம்.
- பொருளாதார நெருக்கடியின் காரணமாக தனிநபர் சேமிப்பு குறைவடைதல்.

**முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய செயற்திட்டங்கள்.**

- வணிக கடற்படையினருக்கான "நாவிகயா" என்ற பெயரில் புதிய சமூகப் பாதுகாப்பு பிரேரணைத் திட்டத்தினை அமுலாக்குதல்.
- "புதுபுத் மாபிய கரசர" என்ற கட்டளைக்கமைவாக தமது பிள்ளைகளினை ஒப்படைத்த துறவிகளின் பெற்றோர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்தினை அமுலாக்குதல்.
- "மனுசவி"என்ற பெயரில் வெளிநாட்டில் பணியாற்றுபவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அமுலாக்குதல்.
- அதன் பிரகாரம் குழந்தைப் பருவத்திலிருந்தே வள முகாமைத்துவம், சமூகப் பாதுகாப்பு, அதன் முக்கியத்துவம், சார்பு மனப்பான்மையிலிருந்து விடுபடுதல், ஒவ்வொரு தொழிலுக்கும் முறையான தொழில்முறை மரியாதை அளித்தல் போன்ற நிலைகள் தொடர்பில் பாடசாலை மாணவர் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டுவதற்கு நாடு தழுவிய நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்
- சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் டிப்ளோமாப் பாடநெறியினை ஆரம்பித்தல்.
- பல்பொருள் அங்காடிகள் மற்றும் பிரத்தியேக வங்கிகளினூடாக தவணைகளைச் செலுத்தும் வாய்ப்புக்களினை ஏற்படுத்துதல்.
- மாணிக்கக் கற்கள் மற்றும் சுரங்கத் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- பெருந்தோட்ட கைத்தொழிலுடன் தொடர்பிலான ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்.
- மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பிலான ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.

## 6.3.7 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

### அறிமுகம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் உயர் கல்வி நிறுவனமொன்றாக நிறுவப்பட்டுள்ள இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்குவதற்கு அதிகாரத்தினைக் கொண்ட நிறுவனமாக 2005 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூக சேவைகள் (Social Work) தொடர்பிலான கல்வியினை வழங்கிவரும் இலங்கையிலுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாகும்.

இலங்கையின் மையப் பிரிவான நிர்வாக சபையின் (Governing Council) ஊடாக நிறுவனத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதிசார் செயற்பாடுகள் அமுலாக்கப்படுகின்றன. நிர்வாக சபையின் கீழ் அமுலாக்கப்படும் கல்விசார் விவகார சபையின் ஊடாக (Academic Affairs Board), நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குதல் இடம்பெறுகிறது.

நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒன்றோடொன்று தொடர்புடைய 4 முக்கியமான பிரிவுகளினைக் கொணடு அமுலாக்கப்படுகிறது. அவை,

1. சமூக சேவைகள் கல்லூரி
2. பயிற்சிப் பிரிவு
3. சமூக மேம்பாடு, கொள்கைகள், ஆய்வுகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவு
4. நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு

### நோக்கங்கள்

- ➢ சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்திக் கல்வியினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பணிச் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு அமைச்சருக்கு உதவியினை வழங்குதல்.
- ➢ சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான பட்டம் மற்றும் முதுகலைப் பாடநெறிகளினை நடாத்துதல்.
- ➢ சமூக நலன்புரித் திட்டங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் கல்விச் செயற்பாடுகளினை நடாத்துதல் மற்றும் அவற்றினை மேம்படுத்துதல்
- ➢ சமூகப் பணிகளில் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட சமூகப் பணி மற்றும் சமூக மேம்பாட்டுக் கல்வி நடைமுறையில் ஆக்கபூர்வமான நடைமுறையினைத் தொடங்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- ➢ சமூக நலன்புரி முறைமையின் பதவியணியின் தொழில்சார் மற்றும் முகாமைத்துவ திறனினை வளர்ப்பதற்கு ஏற்பாடுகளினைச் செய்தல்.
- ➢ சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில் நிபுணத்துவ சேவைகளினை அரசுக்கும் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களுக்கும் கிடைப்பதற்குச் செய்தல்.
- ➢ ஒத்த நோக்கங்களினைக் கொண்ட பிற நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

## மூலோபாயங்கள்

- சமூகப் பணி தொழில்வாண்மைக் கல்வியினை மேம்படுத்துதல்.
- சமூகப் பணி தொடர்பில் உள்ளூர் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளினை நடாத்துதல்
- சமூகப் பணி, சமூக நலன்புரி மற்றும் சமுக அபிவிருத்தித் துறையில் ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளினை வெளியீடு செய்தல்.
- சமூக நலன்புரித் துறையில் உளவளத்துணை சேவைகளினை நடாத்துதல்.
- சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊழியர்களின் முகாமைத்துவம் மற்றும் தொழில் திறன்களினை மேம்படுத்துதல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 80.00 | 48.30 | 31.70 |
| மீண்டுவரும் | 126.00 | 92.88 | 33.12 |
| **மொத்தம்** | **206.00** | **141.18** | **64.82** |

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தொடர்பில் சீதுவப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத் தொகுதியின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

இக்கட்டிட நிர்மாணம் 2017.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 திசம்பர் மாதம் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் A மற்றும் B என இரு பிரிவுகளினைக் கொண்டுள்ளது.

| மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச்செலவு (ரூ.மி.) | 2017.01.01 தொடக்கம் 2021.12.31 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு (ரூ.மி.) | 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2017.01.01 தொடக்கம் 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.09.30 வரை பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1,000.00 | 750.45 | 60.00 | 48.30 | 798.75 | A பிரிவு - (56%)<br>▪ 3 வது மாடியில் அலுமினிய வேலை மற்றும் சீலிங் பணியினை முன்னெடுத்தல்.<br>▪ மின் பொருத்தல்கள் மற்றும் தீ பணியினை சீர்செய்தல்.<br>▪ வெளிப்புறத்தினை பிளாஸ்டர் செய்தல் மற்றும் வெளிப்புறத்திற்கு வர்ணம் பூசுதல்.<br>▪ ஒலியியல் குழு மற்றும் கேட்போர் கூட மர தளம்<br>▪ 1 வது தளம் தொடக்கம் 3 5 வது தளம் வரை குளியலறை சுவர் மற்றும் தரை மாபிள் பதிக்கும் பணி.<br>▪ வடிகால் அகழ்வு, மழைநீர் அகற்றும் அமைப்பின் கட்டுமானம்.<br>▪ Fixing eave ceiling - Moldings & Beading |
| | | | | | B பிரிவு - (100%)<br>▪ தீ பாதுகாப்பு அமைப்பின் செயற்பாட்டினை சோதனை செய்தல். |

## திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் 2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்.

சமூக சேவைகள் கல்லூரியினூடாக அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்.

| செயற்திட்ட இலக்கம் 01 | சமூகப் பணியில் இளங்கலைப் பாடநெறி |
|---|---|

1. 04 வருட முழுநேரப் பாடநெறியொன்றாகும். 2017/2018, 2018/2019 போன்ற வருடங்களுக்கு ஆங்கில மொழியிலும், 2019/2020 (E,S,T) 2020/2021 (E,S,T) போன்ற வருடங்களுக்கு ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழியிலும் விரிவுரைகளினை நடாத்துதல், களப்பயிற்சி, கள ஆய்வுகளினை நடாத்துதல் இடம்பெறுகிறது. மொத்தக் கல்விப் பிரிவுகளினதும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 968 ஆகும்.
2. 2021/2022 கல்வி ஆண்டுக்கான முதலாவது கல்வித் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்தக் கல்விப் பிரிவினதும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 448 ஆகும்.

| செயற்திட்ட இலக்கம் 02 | சமூகப் பணியில் உயர் டிப்ளோமாப் பாடநெறி (சிங்களம் மற்றும் தமிழ் மொழி) |
|---|---|

2018/2019, 2019/2020 போன்ற வருடங்களுக்கான விரிவுரைகள் நடாத்தப்படுதல், களப் பயிற்சி, களப்பணி கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. மொத்தக் கல்விப் பிரிவுகளிலுமுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 89 ஆகும்.

பயிற்சிப் பிரிவினூடாக அமுலாக்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

| *செயற்திட்ட இலக்கம் 01* | குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்களினை நடாத்துதல். |
|---|---|

இதன் கீழ் பிற திணைக்களங்களின் வேண்டுகோளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் குறுகிய காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கிராமிய நிலையங்களில் நடாத்தப்பட்டு வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா. 0.21 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.09 மில்லியன் செலவொன்று ஈடு செய்யப்பட்டுள்ளது 778 நபர்களின் பங்குகொள்ளலுடன் 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

| *செயற்திட்ட இலக்கம் 02* | கள ஆய்வு |
|---|---|

இதன் கீழ் கள ஆய்வு நடைமுறை கையேட்டினை சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்வது நிறைவு பெற்றுள்ளதுடன், களப்பணி மேற்பார்வைப் பட்டறைகளினை நடாத்துவதற்கு பீட மேற்பார்வையாளர்களுக்கு 02 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. ரூபா. 0.12 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

| *செயற்திட்ட இலக்கம் 03* | உளவளத்துணை தொடர்பிலான புதிய பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல். |
|---|---|

உளவளத்துணை தொடர்பில் புதிய பட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், முன்மொழிவின் 03 பிரதிகள் அங்கீகாரத்திற்காக உயர் கல்வி அமைச்சுக்கு முன்வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ரூபா. 0.17 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. செலவு ரூபா. 0.05 மில்லியனாகும்.

ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினூடாக இடம்பெற்ற ஆய்வுகள் மற்றும் வெளியிடப்பட்ட பிரசுரங்கள்.

| செயற்திட்ட இலக்கம் 01 | சமூகப் பணி தொடர்பில் வெளியிடப்பட்ட பிரசுரங்கள்.<br>1. சமூகப் பணி இதழ் (இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை)<br>2. சமூக அபிவிருத்தி இதழ் (இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை)<br>3. சமூகப் பணி தொடர்பிலான E இதழ் (இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை)<br>4. சமூகப் பணி தொடர்பிலான மாணவர் இதழ்<br>5. செய்திக் கட்டுரைகளின் வெளியீடு (இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை) |
|---|---|

சகல அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பிரத்தியேத் துறைகளினை இலக்காகக் கொண்டு தேசிய சமூக அபிருத்தி நிறுவனத்தின் சகல பிரிவுகளின் செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்வரும் காலத்தில் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ள செயற்பாடுகள் தொடர்பில் வெளிப்படுத்துதல் இதில் இடம்பெறும். இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை முன் வைக்கப்படும் இதழ்கள் மற்றும் கட்டுரைகளுக்குரிய

முதலாவது தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. சமூகப் பணி தொடர்பிலான மாணவர் இதழின் கட்டுரைகள் திருத்தப்படு வருகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 0.10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 02** | **புத்தக வெளியீடு மற்றும் அறிவுசார் சொற்பொழிவினை நடாத்துதல்.** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 0.05 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 05 புத்தகங்களினை வெளியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 200 அறிஞர்களின் பங்கு கொள்ளலுடன் அறிவு சார் சொற்பொழிவொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| **செயற்திட்ட இலக்கம் 03** | **சமூக மேம்பாடு தொடர்பிலான பட்டத்திற்கான பாடத்திட்ட மேம்பாடு** |
|---|---|

சமூக மேம்பாடு தொடர்பிலான பட்டத்திற்கு பாடத்திட்டத்தினை விருத்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு எண்ணக்கரு தாள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 0.05 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 04** | **காலத்தின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து விசாரணைகளினை நடாத்துதல்.**<br>1. **கொவிட் - 19 நோயிலிருந்து மீண்ட நபர்கள், அவர்களின் உள்ளகத் தொடர்புகளினை முன்னெடுப்பதில் முகங்கொடுக்கும் சவால்கள்.**<br>2. **கொவிட் 19 சுகாதார சேவைகள் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் சுற்றுச்சூழல் தாக்கம், எதிர்காலம் தொடர்பில் சமூகம் ஈடுகொடுக்கும் திறன்.**<br>3. **அநர்த்தம் ஏற்படுதல், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளின் மீது ஏற்படும் தாக்கங்கள்.**<br>4. **சமூகப் கொள்கை வெளியீடு - II இன் வெளியீடு.** |
|---|---|

இச் சோதனைகள் தொடர்பில் தரவுகளினைச் சேகரித்தல், கலந்துரையாடல்கள் நடாத்தப்படுதல் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் ரூபா. 0.10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| **செயற்திட்ட இலக்கம் 05** | **ஒன்லைன் முறையில் சமூக விருத்தி தொடர்பிலான மகாநாட்டினை நடாத்துதல்.** |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 0.05 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 100 பேரின் பங்கு கொள்ளலுடன் இம் மகாநாடு நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## கட்டணம் அறவீடு செய்து அமுலாக்கப்படும் பாடநெறிகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

சமூக சேவைகள் கல்லூரியினூடாக அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்.

| ***செயற்திட்ட இலக்கம் 01*** | **சமூகப் பணியில் முதுகலைப் பாடநெறிகள் MSW** |
|---|---|

2018/2019 (ஆங்கிலம், சிங்களம், தமிழ்), 2019/2020 (ஆங்கிலம்), 2020/2021 (ஆங்கிலம், சிங்களம், தமிழ்) போன்ற கல்விசார் ஆண்டுகளுக்கு அறவீடு செய்யப்பட வேண்டிய கட்டணம் ரூபா. 15.00 மில்லியனாகும். இதுவரை ரூபா. 3.04 மில்லியன் நிதி அறவீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வு செயற்திட்டத்தினை நிறைவு செய்த 16 மாணவர்களுக்கு Viva நடாத்தப்பட்டு வருகிறது. 29 மாணவர்களுக்கு ஆய்வுச் செயற்திட்டம் மற்றும் களப் பயிற்சி II அமுலாக்கப்படுகிறது. 66 மாணவர்களுக்கு களப் பயிற்சி நடாத்தப்படுகிறது.

பயிற்சிப் பிரிவினூடாக அமுலாக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்

| ***செயற்திட்ட இலக்கம் 01*** | **சமூகப் பணியில் டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் 2019/2020** |
|---|---|

564 டிப்ளோமாதாரர்களுக்கு டிப்ளோமா வழங்கப்பட்டுள்ளது. அறவீடு செய்யப்பட வேண்டிய நிதி ரூபா. 8.9 மில்லியனாகும். இதுவரை ரூபா. 0.08 மில்லியன் நிதி அறவீடு செய்யப்பட்டுள்ளது.

| *செயற்திட்ட இலக்கம் 02* | **உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி** |
|---|---|

2020/2021, 2021/2022 போன்ற கல்வியாண்டுகளுக்கான தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகம்/தலாவ/ரன்ன/கிளிநொச்சி மற்றும் அம்பாறை போன்ற நிலையங்களில் விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளன. 2022/2023 போன்ற கல்வியாண்டுகளுக்கான மாணவர்களினைப் பதிவு செய்தல் இடம்பெற்று வருகிறது. அரச உத்தியோகத்தர்கள் மற்றும் க.பொ.த (உ.த.) சித்தி யெய்தியவர்களினை உள்ளடக்கி சகல கல்வியாண்டுகளுக்குமான மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1,100 ஆகும். பாடநெறிக்கு அறவீடு செய்யப்பட்ட வேண்டிய நிதி ரூபா. 25.30 மில்லியனாகும். இதுவரை ரூபா. 6.12 மில்லியன் நிதி அறவீடு செய்யப்பட்டுள்ளது.

| *செயற்திட்ட இலக்கம் 03* | **உளவளத்துணை தொடர்பிலான உயர் டிப்ளோமாப் பாடநெறி** |
|---|---|

2022/2023 கல்வியாண்டுகளுக்கான 27 மாணவர்களுக்கு விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளன. பாடநெறிக்கு அறவீடு செய்யப்பட வேண்டிய நிதி ரூபா. 2.00 மில்லியனாகும். இதுவரை ரூபா. 0.42 மில்லியன் நிதி அறவீடு செய்யப்பட்டுள்ளது.

| *செயற்திட்ட இலக்கம் 04* | **குழந்தைகளினை இலக்காகக் கொண்டு சமூக மேம்பாட்டிற்கான சான்றிதழ் பாடநெறி** |
|---|---|

19 மாணவர்களுக்கு விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், பாடநெறிக்கு அறவீடு செய்யப்பட வேண்டிய நிதி ரூபா. 0.21 மில்லியனாகும்.

### மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 04 - முழுமையான, நியாயமான தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் பூராவும் கல்வி கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 08 - சகலருக்கும் போசாக்கான, முழுமையான மற்றும் நிலையான பொருளாதார மேம்பாடு, முழுமையான விளைத்திறனான மற்றும் சிறந்த தொழில்களினை ஊக்குவித்தல்.

### முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட புதிய செயற்திட்டங்கள்.

- உளவளத்துணை தொடர்பிலான பட்டப் பாடநெறி மற்றும் பட்டிப்பின் படிப்பு டிப்ளோமாப் பாடநெறியொன்றினை ஆரம்பித்தல்.
- சமூகப் பணி தொழிலுக்கான அங்கீகாரமொன்றினை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு UNICEF நிறுவனத்தின் அனுசரணையுடன் நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினை பல்கலைக்கழகமொன்றாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 6.3.8 கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### அறிமுகம்

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது, 1978 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக, அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கப்பட்டப்பட்ட அல்லது பின்தள்ளப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான ஆற்றலினை உயர்த்தி, அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்ளுவதற்கு பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும்.

உற்பத்தியின்போது, விற்பனையின்போது, நுகர்வின்போது மற்றும் கடன் செயற்பாடுகளின்போது வறிய சமுதாயம் முகங்கொடுக்கும் பாதகமான நிலைமையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்கு தேவையான வலுவூட்டும் வினையூக்க செயல்முறை இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பொன்றாகும். பரிசோதனையின் மூலம் செயலில் கற்றல் செயல்முறை என்பது ஒரு சமூக உயிரோட்டமானது ஆகும். அதாவது முதியோர் கல்விக்கு ஒரு புதிய அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. பங்கேற்பு மேம்பாட்டு முறை பின்னர் இலங்கையில் கிராமப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்ட அனைத்து தேசிய மற்றும் பிராந்திய அபிவிருத்தி திட்டங்களுக்கும் மாற்றியமைக்கப்பட்டது. இதன் பயிற்சி செயன்முறையின் மூலம், மேம்படுத்தப்பட்ட 12 பயிற்சி மாதிரிகள் தொடர்பில் கிராமப்புற மற்றும் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் 12 பயிற்சி மாதிரிகள் தொடர்பில் கிராமப்புற மற்றும் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் சமுதாய அமைப்புப் பணியாளர்களுக்குப் பயிற்சியினூடாக அவர்களினை வலுவூட்டுவது இடம்பெற்று வருகிறது

### நோக்கங்கள்

- சமூக வளர்ச்சியில் அறிவு முகாமைத்துவம்
- சமூக வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை அதிகரித்தல்.
- புதுமையான வளர்ச்சி அணுகுமுறைகளினை அறிமுகப்படுத்துதல்.

### மூலோபாயங்கள்

- இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்துதல்.
- கொள்கை வகுப்பாளர்கள்/அபிவிருத்தியாளர்கள் தொடர்பிலான தகவல்களினை தொகுத்தல்.
- சேவைகள் மற்றும் செயல்முறைகளின் தரத்தினை மேம்படுத்துதல்.
- புதிய அபிவிருத்தி அணுகுமுறைகளினை சமூகமயப்படுத்துதல்.
- புதிய தயாரிப்புக்களினை அறிமுகப்படுத்துவதனூடாக தொழில்நுட்பத்தினைப் பிரபலப்படுத்துதல்.
- சமூக மேம்பாடு தொடர்பிலான அறிவார்ந்த மற்றும் நிபுணத்துவ அறிவினை சமூகமயமாக்குதல்.

## நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு (ரூ.மி.) | 2022.09.30 வரையான நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 40.10 | 29.49 | 10.61 |

**2022.09.30 வரை அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றம்.**

| செயற்திட்ட இலக்கம் 01 | தெரிவு செய்யப்பட்ட சுபீட்சமான கிராமமொன்றில் பங்கேற்பு கிராமிய அணுகுமுறையினை அமுலாக்குதல். |
|---|---|

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 0.05 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், 63 உத்தியோகத்தர்களின் பங்குகொள்ளலுடன் 2 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

| செயற்திட்ட இலக்கம் 02 | **விடய ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், கிராமிய அபிவிருத்திச் செயற்பாட்டினை வெற்றியடையச் செய்வதற்குப் பயன்படுத்தும் மூலோபாயங்கள் தொடர்பிலான புலனாய்வு.** |
|---|---|

இதன் கீழ் கிராமிய அபிவிருத்திச் செயற்பாட்டினை வெற்றியடையச் செய்வதற்கு பயன்படுத்தும் மூலோபாயங்கள் தொடர்பிலான புலனாய்வுக் கற்கை, அரசின் கொள்கைகளுக்கு இணங்க வறுமையினை ஒழித்தல் தொடர்பிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் விடய ஆய்வு இடம்பெற்றுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 03 | **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.** |
|---|---|

களப் பயிற்சியாளர்கள் தொடர்பில் 29 ஒன்லைன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வெளி நிறுவனங்களுடன் ஒரு ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளன.

| செயற்திட்ட இலக்கம் 04 | **வெளியீடுகளினை வெளியிடுதல்.** |
|---|---|

பிரஜாசக்தி இதழின் ஒரு இலத்திரனியல் தொகுதி வெளியீடு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி செய்தியின் ஒரு தொகுதி இணையத்தினூடாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

| செயற்திட்ட இலக்கம் 05 | **நூலகங்களின் மேம்பாடு** |
|---|---|

இதன் கீழ் 2,000 வெளியீடுகள் தொடர்பில் வர்ண குறியீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது

| செயற்திட்ட இலக்கம் 06 | **காலத்தின் தேவைப்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளினை முன்னெடுத்தல்.** |
|---|---|

இதன் கீழ், இலங்கையில் கிராமிய அபிவிருத்திச் செயன்முறையினை வெற்றிபெறச் செய்வதற்கு ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் பயன்படுத்தும் முறைகள் குறித்த இரண்டாம் நிலை தரவுகளின் அடிப்படையில் நடாத்தப்பட்ட ஆய்வு (06 நாடுகளிலிருந்து)

- நிறுவனத்தின் விரிவுரை அரங்குகள் மற்றும் தங்கும் விடுதிகளை வெளி நிறுவனங்களுக்கு வழங்கி ரூபா. 1.42 மில்லியன் வருமானமொன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

**மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களினை அமுலாக்கியதனூடாக பின்வரும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது**

- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 04 - முழுமையான, நியாயமான தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கல்வி கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்கு 16 - நிலையான அபிவிருத்திக்கான அமைதியான, முழுமையான சமுதாயமொன்றினை உருவாக்குதல், அனைவருக்கும நீதிக்கான வாய்ப்புக்களினை வழங்குதல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள பொறுப்பினைக் கொண்ட முழுமையான நிறுவனங்களினைக் கட்டியெழுப்புதல்.

**அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்.**

- வருட ஆரம்பத்தில் எதிர்பார்த்தவாறு திறைசேரி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி சரியான நேரத்திற்குக் கிடைக்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்கு செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு இயலாது போனமை.
- மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் செயற்பாட்டுத் திட்டத்தினை அவ்வப்போது மாற்றுதல்.

**முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்தில் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய செயற்திட்டங்கள்.**

- பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையினைப் பயன்படுத்தி அமுலாக்கக்கூடிய நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 12 பயிற்சி மாதிரிகள் மூலம் பிரதேச, கிராம மட்ட கள உத்தியோகத்தர்களினதும் மற்றும் சமுதாய அமைப்புக்களின் ஆர்வலர்களினதும் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- தற்போதைய சமூகப் பொருளாதாரப் போக்குகளினை உள்ளடக்கிய 02 சமூக ஆய்வுகளினை நடாத்தப்படுதல்.
- அண்மைக் காலத்தில் குறைந்த வருமானப் பயனாளிகளுக்கென அமுலாக்கப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் விளைத்திறனை அலசி ஆராயும் இரண்டு ஆய்வுகள் நடாத்தப்படுதல்.
- சமுதாயத்தினை வலுவூட்டுவதற்காக அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து விடய ஆய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுலாக்குதல்.
- சமுதாயத்தினை வலுவூட்டுவதற்காக செயற்படும் அபிவிருத்தியாளர்கள், ஆய்வாளர்கள், அபிவிருத்தி ஆர்வலர்களுக்கு அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அபிவிருத்தி செய்தி தொடர்பிலான அறிவினைப் பகிரும் நோக்கத்தோடு பிரசுரங்களினை வெளியிடுதல்.
- பயிற்சி வசதிகள் மற்றும் தங்குமிட விடுதி வசதிகள் போன்ற வெளிச் சேவைகளினை வழங்குவதனூடாக வருமானங்களினை உழைத்து அரச வருவாய்க்கு வரவிடுதல்.

## 6.3.9 உளவளத்துணைப் பிரிவு

### அறிமுகம்

2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவின் காரணமாக அவ்வேளை பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் கீழ் உளவளத்துணைப் பிரிவு என்ற பெயரில் பிரிவொன்று நிறுவப்பட்டு 2005 ஆம் ஆண்டில் புதிய பட்டதாரிகளினை ஆட்சேர்ப்புச் செய்யும் தேசியக் கொள்கையின் பிரகாரம், திணைக்களம்சார் பதவியொன்றாக "உளவளத்துணை உதவியாளர்" என்ற பெயரில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு உளவளத்துணை தலையீட்டின் செயற்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அவ்வப்போது பல்வேறு கொள்கைகளின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இதுவரையில் கடமையாற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 210 ஆகும். அவர்கள், தலைமை அலுவலகம், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலங்களுக்கும் இணைக்கப்பட்டு உளவளத்துணை சேவைகளினை வழங்குதல் இடம்பெற்று வருகிறது.

### நோக்கங்கள்

- சமுதாயம் உளக் கோளாறுகளினால் பாதிக்கப்படுவதைக் குறைத்தல்.
- வறிய சமுதாயத்தினை பொருளாதார ரீதியில் வலுவூட்டும் செயற்பாடுகளினை பலப்படுத்துவதற்கு உளத்தினை வலுப்படுத்துதல்.
- உளவளத்துணைக் களத்துறையில் புதிய நூதனங்களினைப் பயன்படுத்தி தரமான உளவளத்துணை சேவையொன்றினை வழங்குதல்.
- உளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களுக்கிடையே முறைசார் தொடர்பொன்றினை ஏற்படுத்துதல்.
- உளவளத்துணை சேவைகளினை வழங்குதல் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல்.

### மூலோபாயங்கள்

- உற்பத்திக் கிராமங்களின் பயனாளிகளினை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்காக அமுலாக்கப்படும் செயற்திட்டங்களின் நிலைபேறான தன்மையினை முன்னெடுப்பதற்கு உளவியல் உளவளத்துணை தலையீட்டினை முன்னெடுத்தல்.
- உள சமூகப் பிரச்சினைகளினைக் குறைப்பதற்கு அபிவிருத்திசார் மற்றும் நிவாரணம்சார உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- இயற்கை மற்றும் மனிதர்களினால் உருவாக்கப்பட்ட அநர்த்தங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு அநர்த்த உளவளத்துணை சிகிச்சைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- உளவியல் உளவளத்துணை, உளச் சிகிச்சை மற்றும் அதன் பயன்கள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சிரேஸ்ட பிரஜைகள், இளைஞர் யுவதிகள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகளினை விழிப்புணர்வூட்டுவதனூடாக உளவளத்துணை சேவைகளினை விரிவுபடுத்துதல்.
- உளவளத்துணை சேவை தொடர்பில் நடைமுறை மற்றும் செய்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- உளவளத்துணை சேவைகளினை வழங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல்.
- உளவளத்துணை சேவைத் தேவைப்பாடுகளினைக் கொண்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவையினை வழங்குதல்

(வைத்தியசாலை, சிறைச்சாலை, சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், விமான சேவைக் கம்பனி)

- உளவளத்துணை விடயத் துறை தொடர்பில் நடைமுறை அறிவினை வளர்ப்பதற்கு வெளியீடுகளினை வெளியிடுதல் (சிங்களம் மற்றும் தமிழ் மொழி).

**நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்**

திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு (ரூ.மி.) | 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.10.01 தொடக்கம் 2022.12.31 வரை எதிர்பார்த்த மொத்தச் செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| மூலதனம் | 10.00 | 4.06 | 5.94 |

**2022.09.30 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்**

| செயற்திட்ட இலக்கம் 01 | சமுதாயத்தினை பொருளாதார ரீதியில் வலுவூட்டும்போது உளக் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள விஞ்ஞான உளவளத்துணை தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். |
|---|---|

மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர் தொகுதிகளில் அமுலாக்கப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 6.78 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 191 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு ரூபா.1.98 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தஅமைச்சு இலங்கைதகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமுகவராண்மைநிறுவனத்துடன் இணைந்தஜக்கியநாடுகளின் ஆசியபசுபிக் தகவல் தொடர்பாடலுக்கானநிலையத்துடன் 2016 ஆம் ஆண்டில் சுஹுரூலிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது. தகவல் தொழில்நுட்பபுதிய வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் இலங்கைப் பெண்களின் பொருளாதாரத்தை கட்டி யெழுப்புவதும் ,அவர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சமூகசிக் கல்கள் தொடர்பில் தீர்வுவழங்குவதும், டிஜிரல் அறிவைக் கொண்டபெண்கள் சமுதாயத்தைஉருவாக்குவதும்,சமூகபொருளாதாரஅபிவிருத்திமற்றும் அதன் மூலம் சகல இலங்கைப் பெண்களுக்கும் மென்மேலும் சிறந்தவாழ்க்கைத் தரத்தைஉருவாக்கிக் கொள்ள நடவடிக்கைகளை செய்து கொடுப்பதும் இந்தநிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியநோக்கமாகும். 2022 ஆம் ஆண்டில் நாட்டின் சகலமாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் பேஸ்புக் நிறுவனத்தின் நிதிஉதவுடன் இதன் கீழ் 27 நிகழ்ச்சித்திட்டங்களைநடாத்ததிட்டமிடப்பட்டுள்ளதுடன், இதுவரை 21 நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாகநடாத்திமுடிக்கப்பட்டுள்ளன.

### 2.5 ஈ-சந்தை ஒன்லையின் மூலமான சந்தைப் படுத்தல் மேடை

இன்று மிகவும் உயர் முன்னேற்றத் தைஅடைந்து கொண்டுள்ள தகவல் தொழில் நுட்பத்தின் பயன்களை ஊக்கம்மிக்க இலங்கை தொழில் முயற்சி யாளர்களான பெண்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அமைச்சினால் ஈ-சந்ஜத ஒன்லையின் சந்தைப்படுத்தல் மேடை 2022 ஆம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக பெண்களான தொழில் முயற்சி யாளர்களின் உற்பத்திகளை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் சந்தைக்கு அறிமுகம் செய்ய ஒன்லையின் முறையில் சந்தைப் படுத்தலை மேற்கொள் வதற்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பது இதன் நோக்கமாகும். தற்போது இலங்கைமகளிர் பணியகம் மற்றும் சௌபாக்யாஅபிவிருத்திபணியகத்தில் பதிவு செய்துள்ள பெண்களான தொழில் முயற்சியாளர்கள் ஏற்கெனவே இதில் பதிவு செய்துள்ளார்கள்.

## 4. அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2022.09.30 ஆம் திகதிக்கு முன்னேற்றம்.

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம்(ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீகமுன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை / பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வெளிக்களஆய்வுகள் மற்றும் பின்னாய்வு | - | - | வெளிக்களஆய்வுகள் 02 | கம்பஹாதற்காலிகஅரவணைப்புநிலையம் அவதானிப்புச் செய்யப்பட்டது. | |
| 2 | ஸ்மார்ட் செயற்பணிசேவைநிலையஎண்ணக்கருவைதாபித்தல் மற்றும் மேம்படுத்தல் | - | - | சகலசம்பந்தப்பட்டஅமைச்சுக்கள் / திணைக்களங்களையும் சம்பந்தப்படுத்திக் கொண்டு இணைந்தநிகழ்ச்சித்திட்டமொன்றைஅமுல்படுத்தல் | சம்பந்தப்பட்டஅமைச்சுக்களுடன் ஆரம்பகலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. | |
| 3 | முன்னேற்றமீளாய்வுக் கூட்டங்கள் | 0.010 | 0.007 | 6 கூட்டங்கள் | காலாண்டு/மாதாந்தமுன்னேற்றமீளாய்வுக் கூட்டங்ள் 5 நடாத்தப்பட்டுள்ளன. | |
| உபமொத்தம் | | **0.010** | **0.007** | | | |
| 4 | ஈ-சந்தைநிகழ்ச்சித்திட்டத்தைஅமுல்படுத்தல் | 0.700 | 0.370 | • பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள்<br>• வருடாந்தசேவைஉடன்படிக்கைகள் மற்றும் ளுஆளு சேவைக்கானமாதாந்தக் கட்டணம் | • பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள்<br>• வருடாந்தசேவைஉடன்படிக்கைகள் மற்றும் ளுஆளு சேவைக்கானமாதாந்தக் கட்டணம் | 40 |
| 5 | பெண் தொழில்முயற்சியாளர்களைதகவல் தொழில்நுட்பம் மூலம் வலுவூட்டும் சுஹுருலியநிகழ்ச்சித்திட்டம் | 0.100 | 0.100 | 23 நிகழ்ச்சித்திட்டங்கள் | சுஹுருலியநிகழ்ச்சித்திட்டம் 19 மாவட்டங்களுக்குநடாத்தப்பட்டன. | 1700 |
| 6 | பாடசாலைமாணவர்களின் ஒன்லையின் கல்விபற்றிநடாத்தப்பட்டஆய்வு | 0.200 | 0.200 | 100 புத்தகங்கள் | 100 புத்தகங்கள் | |
| 7 | துகவல ' தொழில்நுட்பம் பற்றியபயிற்சிநிகழ்ச்சித்திட்டங்களைஅமைச்சுஅலுவலர்களுக்காகநடாத்தல் | 0.050 | 0.020 | 5 பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்களைநடாத்தல் | | |
| 8 | பால்நிலைஅடிப்படையில் மாவட்டமட்டத்தில் தகவல்களைவரைபடமாக்கல் (புநனெநச யுவடயள) | - | - | இணையத்தளத்தில் வெளியடப்பட்டது. | இணையத்தளத்தில் வெளியடப்பட்டது. | |
| 9 | வருடாந்தசேவைஉடன்படிக்கைகள் | 1.650 | .0710 | 4 சேவைஉடன்படிக்கைகளைபுதுப்பித்தல் | 2 சேவைஉடன்படிக்கைகளைபுதுப்பித்தல் | |
| முழு மொத்தம் | | **2.710** | **1.407** | | | |

## 7.2.3 முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகம்

### நோக்கு

உடல், உளவியல் சமூக மற்றும் இனப்பெருக்க அபிவிருத்தியைக் கொண்ட இலங்கை முன்பிள்ளைப் பருவ சிறுவர் சமூகமொன்றை உருவாக்குதல்.

### செயற்பணி

தேசிய மட்டத்திலான கேந்திர நிறுவனம் என்ற வகையில் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னாய்வு செய்வதன் ஊடாக இலங்கை முன்பிள்ளைப் பருவ சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதிசெய்தல்.

### நிறுவன ஒழுங்கமைப்பு




**1. பிரதான செயற்பணிகள்**

- முன்பிள்ளைப் பருவ உபசரணை மற்றும் அபிவிருத்தி பற்றிய கொள்கையை தயார்செய்தல், அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல்.
- அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும், வலையமைப்புச் செய்வதும்.
- முன்பிள்ளைப் பருவ உபசரணை மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரவுகளை சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- முன்பிள்ளைப் பருவ சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி தொடர்பில் ஏற்புடையதாகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்வதும் அமுல்படுத்துவதும்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான மனித வள அபிவிருத்தி.

**2. அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2022**

**2.1 கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு ரூபா 20,000.00 ஆன போசாக்குக் கொடுப்பனவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்க்கும் மற்றும் ஒவ்வொரு பாலூட்டும் தாய்க்கும் தேவையான போசாக்குப் பதார்த்தங்களை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 2,000/-பெறுமதிமிக்க 10 முத்திரைகள் ஒரே தடவையில் வழங்கி வைக்கப்படுகின்றன. கர்ப்பகாலத்தின் இறுதி ஆறு மாதங்கள் மற்றும் பாலூட்டும் முதல் 04 மாதங்களுக்கு மேற்படி போசாக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் கீழ் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா மில்லியன் 4,000 ஆன

ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதிக்கு பயனாளிகள் 119,462 பேருக்கு ரூ.மி. 2389.2 ஆன தொகை செலவானது.

### 2.2 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ∴ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

பாலர் பாடசாலை வயதிலுள்ள குறைந்த எடையைக் கொண்ட பிள்ளைகளின் போசாக்கு நிலைமையை மேம்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். அதற்கமைய நாட்டின் 256 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 3808 பாலர் பாடசாலைகளின் சுமார் 90,203 பிள்ளைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். 2022 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிலவும் பணவீக்க நிலைமைக்கு மத்தியில் ஒரு பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 30 ஆன தொகை போதுமானதல்ல. 2022 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி முதல் 2023 மே மாதம் 15 ஆம் திகத வரை ஒரு பிள்ளைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 60 ஆக அதிகரிக்கப்பட்டு முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய உலக வங்கியின் கருத்திட்டத்தினால் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய 2022 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு பயனாளிகளான சிறுவர்கள் 63,321 பேருக்கு ரூ.மி. 73.273 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

### 2.3. பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு ரூபா 2500 ஆன மாதாந்தக் கொடுப்பனவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - "குரு அபிமானி நிகழ்ச்சித்திட்டம்"

இந்த "குரு அபிமானி நிகழ்ச்சித்திட்டம்" இன் மூலம் பனாளிகளான ஆசிரியைகள் 16,275 பேருக்கு 2022 ஆம் ஆண்டு ரூ.மி. 500 ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன், ஒரு காலாண்டுக்கு ரூ.மி. 125 வீதம் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய 2022.09.30 ஆம் திகதியளவில் பயனாளிகளான ஆசிரியைகள் 15726 பேருக்கு ரூ.மி. 301.409 வழங்கப்பட்டுள்ளது.

### 2.4. முன்பிள்ளைப்பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

முன்னைய ஆண்டுகளில் திறைசேரியினால் ஏற்பாடுகள் வழங்கப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் அவ்வாறு நிதி ஒதுக்கப்படாமையினால் இதுவரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவற்கான ஏற்பாடுகள் உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் காலாண்டு அடிப்படையில் நிதி வழங்குவது மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.5. முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகத்தினால் ஆராய்ச்சிசார் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தரநியமங்களை பிள்ளைகள் அடைந்துகொள்கின்றார்களா என்பதை மதிப்பீடு செய்துகொள்வதற்கு மற்றும் அதற்குத் தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்வதற்காக இந்த முன்பிள்ளைப் பருவ மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய ஒவ்வொரு பாலர் பாடசாலையினதும் வயது 3-4 மற்றும் 4-5 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவைச் சேர்ந்த சகல பிள்ளைகளும் இந்த மதிப்பீட்டு நிகழ்ச்சித்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்களை பயிற்றுவிப்பதற்காக ரூ.மி. 0.216 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன்,ரூ.மி. 0.195 ஆன தொகை முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்கள் 151 பேரை பயிற்றுவிக்க செலவிடப்பட்டுள்ளது.
மதிப்பீடு செய்வது பற்றி பாலர் பாடசாலை ஆசிரியைகளை விழிப்புணர்வூட்டுவதற்காக ரூ.மி. 12.775 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதிக்கு ரூ.மி. 2.864 ஆன தொகை செலவிடப்பட்டுள்ள ஆசிரியைகள் 2905 பேருக்காக 69 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
மதிப்பீடு செய்வது பற்றி ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் வழிகாட்டல் வீடியோ தொகுப்பொன்றை தயார் செய்வதற்கு ரூ.மி. 1.250 ஆன தொகை செலவிடப்படவுள்ளது.

### 2.6. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் /பாலர் பாடசாலை கற்கை வட்டம் நிகழ்ச்சித்திட்டம்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் “விளையாட்டை மையமாகக் கொண்ட கற்றல் வட்டம்” தொடர்பில் பாலர் பாடசாலை ஆசிரியைகளை பயிற்றுவிப்பதற்கான 26 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயனாளிகள் 990 பேருக்கு ரூ.மி. 0.375 ஆன தொகை செலவிடப்பட்டது.
சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 670 பாலர் பாடசாலைகளில் மேற்படி வட்டங்களை கட்டியெழுப்புவதற்காக ரூ.மி. 16.750 ஒதுக்கப்பட்டதுடன், 2022.09.30 ஆம் திகதிக்கு ரூ.மி. 6.244 செலவிடப்பட்டு பயனாளிகள் 8040 பேருக்காக 268 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

### 2.7. ‘அருண தக்கின ரட்டா’ சிறுவர்களின் சித்திரக் கண்காட்சியும், செயலமர்வும்

முன்பிள்ளைப் பருவ சிறுவர்களின் ஆக்கங்கள், திறமைகளை மெருகூட்டுவதற்காக வருடாந்தம் நாடளாவிய மட்டத்தில் சித்திரக் கண்காட்சியொன்று நடாத்தப்படுகின்றது. முன்பிள்ளைப் பருவ பிள்ளைகளின் அழகியற்கலை ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளித்தல், சுய ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல், அழகியற்கலை ஆற்றல்களை பாராட்டுவதை நோக்காகக் கொண்டு ஆற்றல்கள் மிக்க முன்பிள்ளைப் பருவ சிறுவர் பரம்பரையை உருவாக்கும் குறிக்கோளுடன் நாட்டின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் அருன தக்கின ரட்டா நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2022 ஆண்டில் ரூ.மி. 6.700 ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன, 2022.09.30 ஆம் திகதியளவில் நடாத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 335 ஆகும் என்பதுடன், அவற்றுக்காக ரூ.மி. 5.025 ஆன தொகை செலவிடப்பட்டது. இதன் பயனாளிகளின் எண்ணிக்கை 28,174 பேர் ஆவார்கள்.

### 2.8. முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய குழுக கூட்டங்களை நடாத்தல்

அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கைக்கு அமைய புதிய “முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய ஒருங்கிணைப்புக் குழு” தாபிக்கப்பட்டது. இந்த தேசியக் குழுவானது தேசிய கொள்கைகளை அமுல்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மாற்றங்களை மேற்கொள்ளும் தேசிய மட்டத்திலான முகாமைத்துவக் குழுவாக உள்ளது.

இது செயற்றிட்டங்களை தயார் செய்யும் போதும், அமுல்படுத்தும் போதும் மற்றும் முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய பணிகளின் போதும் தேசிய மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையான பல்துறை ஒத்துழைப்பை உறுதி செய்கின்றது. முன்பிள்ளைப் பருவ விடயத்துடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் இந்தத் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவை பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள். 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன், அதற்காக ரூ.மி. 0.015 ஆன தொகை செலவிடப்பட்டது.

### 2.9 முன்பிள்ளைப் பருவக் கல்வி பற்றிய தேசிய குழு

மனிதவள அபிவிருத்தியின் முக்கிய காலப்பகுதியான முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பருவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி முன்பிள்ளைப் பருவ கல்வி பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்வது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கல்விக் கொள்கை பற்றி சகல மாகாண செலயாளர்கள், தேசியக் குழு உறுப்பினர்கள், மாகாண பாலர் பாடசாலை பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் சகல தரப்பினர்களையும் விழிப்புணர்வூட்டுவது தொடர்பாக 2022.09.12 ஆம் திகதி நடாத்தப்பட்ட குழுக் கூட்டத்திற்கு ரூ.மி. 0.074 செலவிடப்பட்டுள்ளது.

### 2.10 வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய கருத்திட்டம்

வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்திக்கு உயர் விளைதிறனைக் கட்டியெழுப்பல் மற்றும் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை இனங்காணும் நோக்கத்துடன் மாவட்ட மட்டத்தில் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூ.மி. 1.186 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதியளவில் பயனாளிகளின் எண்ணிக்கை 811 ஆகும். அதற்காக ரூ.மி. 0.346 செலவிடப்பட்டுள்ளது.

### 2.11 செனஹஸ தட்டாக்க பெற்றோரை விழிப்புணர்வூட்டுவதற்காக பங்கேட்பு புதிய எண்ணக்கருவுக்கு அமைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

பங்கேட்பு அணுகுமுறை ஊடாக வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய புதிய முறையியலை இனங்கண்டு வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உயர் விளைதிறனை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் இந்த ஆண்டுக்கு ரூ.மி. 0.350 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதி வரை பயனாளிகள் 796 பேருக்காக ரூ.மி. 0.160 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

### 2.12 விசேட கருத்திட்டங்கள்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்களுக்கு நல்ல அலுவலக சூழலில் இருந்தவாறு கடமையாயாற்றுதல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு தேவையான அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு விசேட கருத்திட்டங்களின் கீழ் இந்த ஆண்டுக்கு ரூ.மி. 2.875 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதி வரை ரூ.மி. 0.912 ஆன தொகை செலவிடப்பட்டு பிரதேச செயலாளர் பிரிவுகள் 10 இன் அலுவலர்களுக்கு அலுவலக கதிரை, மேசை, கப்பர்ட் போன்றன பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 2.13 முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு தொடர்பில் விடயப்பரப்புசார் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விஸ்தரித்தல், ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் மற்றும் பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்ட முறையான நிகழ்ச்சித்திட்டங்களை வெளிக்களத்தில் அமுல்படுத்துவதற்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்ட அலுவலர்களை ஊக்குவித்தல் மற்றும் பாராட்டுவதை நோக்காகக் கொண்டு இந்த ஆண்டுக்கு ரூ.மி. 0.434 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022 பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டுவதற்கு மற்றும் பாராட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அலுவலர்கள் 35 பேருக்காக ரூ.மி. 0.030 ஆன தொகை செலவிடப்பட்டது.

## 2.14 "மாத்ரு அபிமானி" கர்ப்பிணித் தாய்மாருக்கான நிகழ்ச்சித்திட்டம்

பிரதேச செயலக மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் கர்ப்பிணித் தாய்மாருக்கு முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு ரூபா 10,000 வீதம் ஏற்பாடுகள் விடுவிக்கப்படுகின்றன. மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூ.மி. 3.710 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதிக்கு 156 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன்,ரூ.மி. 1.226 செலவிடப்பட்டுள்ளது.

## 2.15 கூட்டு சிறுவர் மற்றும் மகளிர் மாதிரிக் கிராமங்களைத் தாபித்தல்

கூட்டு சிறுவர் மற்றும் மகளிர் மாதிரிக் கிராமங்களைத் தாபித்தல் - 2018 என்ற பெயரில் 2018, 22019, 2020 ஆகிய 03 வருடங்கள் முழுவதும் அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமாக இது அமுல்படுத்தப்படுகின்றது. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம், இலங்கை மகளிர் பணியகம், அபிவிருத்தி பிரிவு மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த கூட்டு சிறுவர் மற்றும் மகளிர் மாதிரிக் கிராமங்களைத் தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்கின்றன. இந்த ஆண்டுக்குரூ.மி. 6.2 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும், இரண்டாவது காலாண்டுக்கு அம்பாறை மாவட்டத்தின் மஹஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு மாத்திரம் ரூ.மி. 0.200 செலவிடப்பட்டுள்ளது.

## 2.16 முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல்

மாவட்ட செயலகங்களின் கடமை நடவடிக்கைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்களை தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைப்புச் செய்து முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய தேசயி செயலகத்தின் செயற்பணியை உயர் விளைதிறனுடன் மேற்கொள்வதற்கு இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அதற்காக ரூ.மி. 0.407 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து அசௌகரியங்களின் அடிப்படையில் ஒன்லையின் முறையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அலுவலர்களை வரவழைத்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியிருந்த மாவட்டங்கள் 2022.09.30 ஆம் திகதி வரை குழுக் கூட்டங்கள் 52 ஐ நடாத்தி ரூபா மில்லியன் 0.103 ஆன தொகையை செலவிட்டுள்ளது.

### 2.17 திடீர் அனர்த்த நிலைமைகளின் போது முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நடவடிக்கைகள்

திடீர் அனர்த்த நிலைமைகளின் போது பாதிக்கப்படுகின்ற முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டுக்கு ரூ.மி. 0.271 ஒதுக்கப்பட்டுள்ளதுனட், 2022.09.30 ஆம் திகதியளவில் மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் ஜுனியர் ஸ்ரெப் பாலர் பாடசாலைக்கு ரூ.மி. 0.049 செலவிடப்பட்டது.

### 2.18 அலுவலர்களின் திறன் அபிவிருத்தி

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகத்தில் கடமையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் பயிற்சித் தேவைகள் பற்றி கவனம் செலுத்தி அலுவலர்களின் திறன்களை வளர்ப்பதற்காக ரூ.மி. 0.500 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன்,செயலாற்றுகைச் சுட்டிகளை தயார் செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அலுவலர்களுக்கு ரூ.மி. 0.023 செலவிடப்பட்டுள்ளது.

### 2.19 சிறுவர் அரவணைப்பு நிலையங்களின் அபிவிருத்திக்கு சிறுவர் நட்புறவு சூழலை ஏற்படுத்தல்

சிறுவர் இல்லங்கள் மற்றும் பிள்ளைகளை பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையங்களிலுள்ள சிறுவர்களுக்கு பரந்தளவிலான அபிவிருத்தி வாய்ப்புக்களைக் கொண்ட சிறுவர் நட்புறவு சூழலை ஏற்படுத்தல் மற்றும் சிறுவர் இல்லங்கள் மற்றும் சிறுவர்களை பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையங்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றிய அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு அமுல்படுத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ரூ.மி. 7.500 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.30 ஆம் திகதிக்கு 2 நிலையங்களின் வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக ரூ.மி. 0.800 ஆன தொகை செலவிடப்படவுள்ளது.

### 2.20 முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம்

ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை முன்பிள்ளைப் பருவ விடயம் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய சகல தரப்பினர்களையும் ஒன்றுதிரட்டிக்கொண்டு, முன்பிள்ளைப் பருவ பிள்ளைகளின் பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் நடாத்தப்படுகின்றன. “எல்லாக் காலங்களிலும் பாதுகாக்க வேண்டிய – பிள்ளைகள் மாணிக்கங்களே” எனும் தொணிப்பொருளின் கீழ் 2022 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத் தொடர் அமுல்படுத்தப்பட்டதுடன், இதற்காக ரூ.மி. 7.500 ஆன தொகை ஒதுக்கப்பட்டது. 2022.09.30 ஆம் திகதிக்கு 28 பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், பய ாளிகள் 4252 பேருக்காக ரூ.மி. 6.141 செலவிடப்பட்டது.

## 4 அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2022.09.30 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 01 | கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு ரூபா 20,0000 ஆன போசாக்குக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 4000.000 | 3102.963 | 2,000,000 போசாக்குப் பொதிகள் | | சுமார் 119,462 கர்ப்பிணித் தாய்மார் |
| 02. | பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு ∴ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் | 150.000 | 73.273 | பாலர் பாடசாலை பிள்ளைகள் 90இ203 | பாலர் பாடசாலை பிள்ளைகள் 63,321 | பாலர் பாடசாலை பிள்ளைகள் 53இ778 |
| 03. | பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு மாதாந்த கொடுப்பனவை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் “குரு அபிமானி” மாதாந்தம் ரூபா 2500/- | 500.000 | 301.409 | பாலர் பாடசாலை ஆசிரியைகள்16இ275 | பாலர் பாடசாலை ஆசிரியைகள் 15,726 | பாலர் பாடசாலை ஆசிரியைகள் 14இ462 |
| **மொத்தம் (மீண்டெழும் செலவினம்)** | | **4650.000** | **3477.645** | | | |
| **04.** | **முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டம்** | | | | | |
| 4.1 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்<br>❖ அலுவலர்களை பயிற்றுவித்தல் | 0.216 | 0. 195 | நிகழ்ச்சித்திட்டம் 03 | நிகழ்ச்சித்திட்டம் 03 | நிகழ்ச்சித்திட்டம் 151 |
| | ❖ ஆசிரியர்களை பயிற்றுவித்தல் | 12.775 | 2.864 | நிகழ்ச்சித்திட்டம் 280 | நிகழ்ச்சித்திட்டம் 69 | ஆசிரியர்கள் 2905 |
| 4.2 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம்/ பாலர் பாடசாலைகளுக்கு கற்றல் வட்டம் நிகழ்ச்சித்திட்டம் | | | | | |
| | ❖ ஆசிரியர் பயிற்றுவித்தல் | 0.390 | 0.375 | நிகழ்ச்சித்திட்டம் 26 | நிகழ்ச்சித்திட்டம் 26 | பயனாளிகள் 990 |
| | ❖ வட்டங்களை கட்டியெழுப்புதல் | 16.750 | 6.224 | நிகழ்ச்சித்திட்டம் 334 | நிகழ்ச்சித்திட்டம் 250 | பயனாளிகள் 8040 |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 4.3 | அருன தக்கின ரட்டா முன்பிள்ளைப் பருவ பிள்ளைகளின் சித்திரக் கண்காட்சி மற்றும் செயலமர்வு | 6.700 | 5.025 | நிகழ்ச்சித்திட்டம் 335 | நிகழ்ச்சித்திட்டம் 335 | பிள்ளைகள் 28174 |
| 4.4 | முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசி குழுக் கூட்டங்களை நடாத்தல | 0.165 | 0.015 | குழுக்கள் 04 | குழுக்கள்01 | உறுப்பினர்கள் 31 |
| 4.5 | முன் பிள்ளைப் பருவ கல்வி பற்றிய தேசிய குழு | 0.075 | 0.074 | குழுக்கள் 02 | குழுக்கள் 01 | உறுப்பினர்கள் 50 |
| 4.6 | வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய கருத்திட்டம் | 1.186 | 0.346 | நிகழ்ச்சித்திட்டம் 25 | நிகழ்ச்சித்திட்டம் 10 | பயனாளிகள் 811 |
| 4.7 | செனஹச தட்டாக்க பெற்றோரை விழிப்புணர்வூட்டுவதற்கு பங்கேட்பு புதிய எண்ணக்கருவுக்கு அமைய நிகழ்ச்சித்திடடங்களை அமுல்படுத்தல் | 0.350 | 0.160 | நிகழ்ச்சித்திட்டம் 10 | நிகழ்ச்சித்திட்டம் 07 | பயனாளிகள் 796 |
| 4.8 | விசேட கருத்திட்டங்கள் | 2.875 | 0.912 | நிகழ்ச்சித்திட்டம் 25 | நிகழ்ச்சித்திட்டம் 10 | அலுவலர்கள் 10 |
| 4.9 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் | 0.434 | 0.034 | மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 01, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 02 | மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 01 | அலுவலர்கள் 35 |
| 4.10 | மாத்ரு அபிமானி நிகழ்ச்சித்திட்டம் | 3.710 | 1.226 | நிகழ்ச்சித்திட்டம் 336 | நிகழ்ச்சித்திட்டம் 156 | தாய்மார் 6398 |
| 4.11 | இணைந்த சிறுவர் மற்றும் மகளிர் மாதிரிக் கிராமங்களைத் தாபித்தல் | 6.200 | 0.200 | கருத்திட்டம் 25 | கருத்திட்டம் 1 | பிள்ளைகள் மற்றும் பெற்றோர் 48 |
| 4.12 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | 0.407 | 0.103 | நிகழ்ச்சித்திட்டம் 104 | நிகழ்ச்சித்திட்டம் 52 | அலுவலர்கள் 356 |
| 4.13 | திடீர் அனர்த்த நிலைமைகளின் போது முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நடவடிக்கைகள் | 0.271 | 0.049 | நிகழ்ச்சித்திட்டம் 01 | நிகழ்ச்சித்திட்டம் 01 | பிள்ளைகள் 50 |
| 4.14 | அலுவலர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சி | 0.500 | 0.021 | நிகழ்ச்சித்திட்டம் 04 | நிகழ்ச்சித்திட்டம் 01 | அலுவலர்கள் 30 |
| 4.15 | சிறுவர் அரவணைப்பு நிலையங்களின் அபிவிருத்திக்கு சிறுவர் நட்புறவு சூழலை ஏற்படுத்தல் | 7.500 | 0.800 | நிலையம் 15 | நிகழ்ச்சித்திட்டம் 02 | பயனாளிகள் 60 |
| 4.16 | முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம் | 7.500 | 6.141 | நிகழ்ச்சித்திட்டம் 28 | நிகழ்ச்சித்திட்டம் 28 | பயனாளிகள் 4252 |
| **உப மொத்தம்** | | **68.004** | **24.569** | | | |
| **மொத்தம்(புணரமைப்பு செலவு)** | | **69.000** | **24.569** | | | |

## 7.2.4 முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திக் கருத்திட்டம்

### அறிமுகம்

முன்பிள்ளைப் பருவத் துறையின் முக்கியத்துவம் மற்றும் இலங்கையின் முன்பிள்ளைப் பருவம் பற்றி 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டக ற்கையை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்டகுறைபாடுகளைக் கவனத்தில் கொண்டு இலங்கையின் முன்பிள்ளைப் பருவஅபிவிருத்தித் துறையின் தரத்தைமேம்படுத்தல் மற்றும் யாவருக்கும் ஒன்றாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதானசேவையாகமாற்றியமைப்பதற்கு இலங்கைஅரசுமற்றும் உலகவங்கி இணங்கியதைஅடுத்து இந்நாட்டின் முதலாவதுமுன்பிள்ளைப் பருவஅபிவிருத்திக் கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டது.உலகவங்கியின் நிதிசார் அனுசரணையுடன் 2016 – 2022 ஆம் ஆண்டுகாலப்பகுதிக்குஅமுல்படுத்தப்பட்ட இக்கருத்திட்டத்தின் மூலம் நாடுமுழுவதிலும் முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### குறிக்கோள்

இலங்கைமுன்பிள்ளைப் பருவத் துறையைதரமானவாறுமேம்படுத்தல் மற்றும் சகலருக்கும் ஒரேவகையில் பெற்றுக் கொள்ளக்கூடியசேவையாகமாற்றியமைப்பது இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

### நிறுவன ஒழுங்கமைப்பு




க.அ. – கருத்திட்ட அலுவலர் மு.உ. முகாமைத்துவ உதவியாளர் உ.அ. உதவி அலுவலர்
அ.சி. – அலுவலக சிற்றூழியர் தொ.உ. தொழில்நுட்ப அலுவலர்

## 1. பிரதானபணிகள்

நாடளாவியரீதியில் முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்கள் ∴பாலர் பாடசாலைகள் பற்றியதேசியகணக்கெடுப்பு 2016 ஆம் ஆண்டுநடாத்தப்பட்டது. மேற்படிகணக்கெடுப்பின் முக்கியதரவுகளைஅடிப்படையாகக் கொண்டுகருத்திட்டத்தின் கீழ் பின்வரும் பிரதானபணிகள் அமுல்படுத்தப்படுகின்றன.

- குறைந்தவசதிகளைக் கொண்டமுன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- குறைந்த பயன்களைக் கொண்ட அல்லதுபயன்கள் கிடைக்காத பிரதேசங்களில் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களைத் தாபித்தல்.
- பொருளாதார அசௌகரியங்களைக் கொண்டமுன்பிள்ளைப் பருவ பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாலர் பாடசாலைகட்டணநிவாரணம் வழங்குதல்.
- மாகாணமட்டத்தில் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வளநிலையங்களைத் தாபித்தல்.
- விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு நலன்புரிஉதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- முன்பிள்ளைப் பருவபிள்ளைகளின் சுகாதாரமற்றும் போசாக்கு பற்றி பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றியசான்றிதழ் ∴ டிப்ளோமா பயிற்சிபாடநெறியில் பாலர் பாடசாலை ஆசிரியைகளைஈடுபடுத்தல்.
- பெற்றோரை விழிப்புணர்வூட்டல் மற்றும் உளவியல் சமூகஉதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ஒவ்வொரு முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்திலும் பெற்றோர் குழுக்களைத் தாபித்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக் குகற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றி முன்னோடிபயிற்று விப்பாளர்களை பயிற்றுவித்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி ஆசிரியர்களுக்கு குறுகியகால தரப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல்.
- முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை முறையாக கண்காணிப்புச் செய்தல் மற்றும் மதிப்பீடுசெய்யும் முறையியலை அமுல்படுத்தல்.

### தோட்டத்துறையில் அமுல்படுத்தப்படும் நடவடிக்கைகள்

- முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களைநிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் விளையாட்டு முற்றங்களை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்களுக்கு டிப்ளோமாபயிற்சிபாடநெறியைபெற்றுக் கொடுத்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்களின் அறிவினை ஊக்குவிப்பதற்கான பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்களைநடாத்தல்.

- பெற்றோரைஅறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைநடாத்தல்.
- சிறுவர் சுகாதாரம் மற்றும் போசாக்குவிருத்திக்கானநிகழ்ச்சித்திட்டங்களைநடாத்தல்.

**கருத்திட்டத்தின் பயனாளிகள்**

கருத்திட்டத்தின் நேரடிப் பயனாளிகளாக இருப்பதுவயது 3-5 வரைபாலர் பாடசாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகள் மற்றும் தோட்டத்துறையில் பகல்நேரபராமரிப்புநிலையங்களில் வயது 0-2 வரையானபிள்ளைகளாவார்கள். ஏனைய மறைமுகபயனாளிகளாக இருப்பதுமுன்பிள்ளைப் பருவஅபிவிருத்திஆசிரியர்கள் மற்றும் ஆசிரியஉதவியாளர்கள்,முன்பிள்ளைப் பருவநிருவாகஸ்தர்கள்,கருத்திட்டத்தின் வசதிகளைப் பெறுகின்றமுன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்கள் மற்றும் முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களுக்குஅனுமதிக்கப்படுகின்றபிள்ளைகளின்

## 2. 2022 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- புதியமுன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களைநிர்மாணித்தல்
- தோட்டத்துறையில் முன்பிளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு விளையாட்டு முன்றல் புதிதாக அமைத்தல்
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி முன்னோடி பயிற்று விப்பாளர் களைபயி ற்றுவித்தல் நிகழ்ச்சி த்திட்டம்
- முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களின் வசதிகளைமேம்படுத்தஉதவிவழங்குதல்
- முன்பிளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு
- முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களின் வசதிகளைமேம்படுத்தஉதவிவழங்குதல்

**4. அமுல் படுத்தப்பட்டஅபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீகமற்றும் நிதிசார் முன்னேற்றத்தின் பொழிப்பு - 2022.09.30**

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | கருத்திட்டத்தின் பௌதீக இலக்கு | பௌதீகமுன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்குநீர்,துப்பரவேற்பாட்டுவசதிகள் மற்றும் மின்சாரவசதிகளைப் பெற்றுக் கொடுத்தல | 624.000 | 252.720 | 925மற்றும் தொடர்ச்சியானகருத்திட்டங்கள் 633 | |
| 2 | குறைந்தபயன்கள்/பயன்கள் பெறாதபிரதேசங்களுக்குமுன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களைத் தாபித்தல் (ECD Center) | 270.000 | 392.650 | 19 (2022: 19 யனெ 2021:2 | நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன |
| 3 | குறைந்த பயன்கள்/பயன்கள் பெறாத பிரதேசங்களில் முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களைத் தாபித்தல் (ECD Center) | 23.000 | 6.120 | 2022-1 மற்றும் 2020-1 (தொடர்ச்சியாக) | நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன |
| 4 | இனங்காணப்பட்ட ECD நிலையங்களுக்குகற்றல் உபகரணத் தொகுதிகளைப் பெற்றுக் கொடுத்தல் (விளையாட்டுஉபகரணத் தொகுதிகள்) | 80.000 | | 3386 | பெறுகைகட்டத்தில் உள்ளது |
| 5 | இனங்காணப்பட்டநுஊனு நிலையங்களுக்குநீர் வடிகட்டிகளைப் பெற்றுக் கொடுத்தல் (Water Filters) | 72.000 | | 6000 | பெறுகைகட்டத்தில் உள்ளது |
| 6 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு நீர், துப்பரவேற்பாட்டுவசதிகள் மற்றும் மின்சாரவசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் - புதியவை | 138.000 | 101.080 | 1394 | 73 பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுஇ 292நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனஇ |
| 7 | இனங்காணப்பட்டECD நிலையங்களுக்குவாசிப்புஅம்சங்களின் தொகுதிகளைவிநியோகித்தல் | 110.000 | | 3386 | பெறுகைகட்டத்தில் உள்ளது |
| 8 | நுஊனு நிலையங்களுக்குபொருட்களைவழங்குதல் - வருடாந்தம் சிறுவர் அபிவிருத்திமதிப்பீட்டை (CDA) நடாத்துவதற்குNSECD மூலம் பொருட்களின் தொகுதிகள் 12,000 ஐ அச்சிடல் | 82.000 | 3.140 | 12000 | 2300 விநியோகிக்கப்பட்டன |
| 9 | நுஊனு பயிலுனர்களுக்கு,பயிற்றுவிப்பாளர்களைபயிற்றுவிக்கும் சான்றிதழைஅச்சிடல் மற்றும் விருதுவழங்கும் வைபவம் | 12.000 | 6.090 | 2 | நிகழ்ச்சித்திட்டம் 1 |
| 10 | பாலர் பாடசாலைஆசிரியர்களுக்கானகுறுங்காலபயிற்சியைபெற்றுக் கொடுத்தல் (Short Term Training) | 46.000 | 5.970 | 77 | நிகழ்ச்சித்திட்டம் 25 |
| 11 | பாலர் பாடசாலைஆசிரியர்களுக்கானகாலத்திற்குஉகந்த இணைச் செயற்பாடுகளுக்குஉதவுதல் | 9.000 | 0.120 | 92 | பயிற்சிநிகழ்ச்சித்திட்டம் 8 |
| **உப மொத்தம்** | | **1466.00** | **767.890** | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | கருத்திட்டத்தின் பௌதீக இலக்கு | பௌதீகமுன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 12 | முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திபற்றியநீண்டகாலசான்றிதழ் /டிப்ளோமாபயிற்சிபாடநெறி (தேசியகல்விநிறுவகம் மற்றும் இலங்கைதிறந்தபல்கலைக் கழகம் - 200) | 5.000 | 2.400 | 490 | 490பயிற்சிபெறுகின்றனர் |
| 13 | முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திபற்றிபாலர் பாடசாலைஆசிரியர்களைவிழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திடடம் | 10.000 | 1.600 | 2500 | 2355 பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தி. |
| 14 | முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திபற்றியசமூககண்காய்வைமேற்கொள்ளல் | 6.000 | - | 1 | ஆய்வுநிறைவுசெய்யப்பட்டது. அறிக்கைசமர்ப்பிக்கப்படும் |
| 15 | முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திநிலையங்களைபதிவுசெய்வதற்குமாகாணமட்டத்தில் நிலையங்களைபதிவுசெய்யும் முறையியலைதாபித்தல் | 10.000 | - | 1 | எண்ணக்கருசட்டகம் தயார் செய்யப்பட்டுள்ளது. |
| 16 | மாணவர்களுக்குகட்டணங்களுக்குவிலக்களித்தல் | 300.00 | 7.310 | 37500 | கட்டணத்துக்குவிலக்களிக்கும் பணிஆரம்பிக்கப்பட்டது. |
| 17 | முன்பிள்ளைப் பருவபிள்ளைகளுக்குகாலைஉணவுவழங்குதல் (ரூ. 30 கொடுப்பனவு,ரூ. 60 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திபற்றியதேசியசெயலகத்துடன் இணைந்து) | 587.000 | - | 155,000 | ஆரம்பகட்டபணிகள் பூர்த்தி. நவம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கதிட்டமிடப்பட்டுள்ளது. |
| 18 | செயற்பாட்டுசெலவினம் | 133.000 | 65.120 | | |
| **உப மொத்தம்** | | **1051.000** | **76.43** | | |
| **மொத்தம்** | | **2517.000** | 844.32 | | |

## பெருந்தோட்டமனிதஅபிவிருத்திநம்பிக்கைப் பொறுப்பு(ரீனுவு) மூலம் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் செயற்பாடுகள்

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | கருத்திட்டத்தின் பௌதீக இலக்கு | பௌதீகமுன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | சிறுவர் அபிவிருத்திநிலையங்களைநிர்மாணித்தல் (Construction of New CDCs) | 322.000 | 88.2400 | 21 | 21 நிலையங்களின்நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன |
| 2 | தற்போதுள்ளசிறுவர் அபிவிருத்திநிலையங்களை(CDCs)புனரமைப்புச் செய்தல் -21 | 21.000 | 18.260 | 21 | 21 பூர்த்திசெய்யப்பட்டன |
| 3 | தளபாடம் /உபகரணம் பெற்றுக் கொடுத்தல் (CDC புதியநிர்மாணிப்பு/CDCபுனரமைப்புச் செய்தல;) | 16.000 | 15.140 | 91 | 35விநியோகிக்கப்பட்டன |
| 4 | வெளிப்புறவிளையாட்டுஉபகரணம் பெற்றுக் கொடுத்தல் | 25.000 | | 140 | 89 விநியோகிக்கப்பட்டன |
| 5 | சிறுவர் அபிவிருத்திஅலுவலர்களுக்கானடிப்ளோமாபாடநெறியைநடாத்தல் (5 மொடியுல்) | 6.000 | 5.960 | 3 | 3 பூர்த்திசெய்யப்பட்டன |
| 6 | பெற்றோரைஅறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைநடாத்தல் | 2.500 | 1.970 | 240 | பயிற்சிஅமர்வுகள் 137 நடாத்தப்பட்டன. |
| 7 | சிறுவர் மதிப்பீட்டுபயிற்சியைநடாத்தல் | 1.000 | 0.520 | | 3பூர்த்திசெய்யப்பட்டன |
| 8 | செயற்பாட்டுச் செலவினம் | 19.220 | 17.610 | | |
| | **மொத்தம்** | **413.000** | **147.700** | | |

பெருந்தோட்டமனிதஅபிவிருத்திநம்பிக்கைப் பொறுப்பு(ரீஜுவு) மூலம் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் செயற்பாடுகள்

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | கருத்திட்டத்தின் பௌதீக இலக்கு | பௌதீகமுன் னேற்றம் |
|---|---|---|---|---|---|
| **அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்** | | | | | |
| 1 | விசேடதேவைகளைக் கொண்டசிறுவர்களுக்கானநிலையங்களைதாபித்தல் | 54.40 | 21.33 | நிலையங்களைத் தாபித்தல் - 1 | 42% |
| **நன்னடத்தைமற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்** | | | | | |
| 1 | உபகரணத் தொகுதிகள் 09 மாகாணங்களுக்கும் | 0.450 | - | 9 | பெறுகைநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. |
| **முன்பிள்ளைப் பருவஅபிவிருத்திபற்றியதேசியசெயலகம்** | | | | | |
| 1. | பயிற்சிமற்றும் ஏனைய செயற்பாடுகள் 29 ஐ நடாத்தியமை | 95.000 | 13.760 | பயிற்சிமற்றும் ஏனைய செயற்பாடுகள் 29 ஐ நடாத்தியமை | |
| **கருத்திட்டங்களின் முழு மொத்தம்** | | **3079.00** | **1007.95** | **100%** | **60%** |

## 7.2.5 நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

**நோக்கு**

சிறுவர்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டதும், அவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமானதுமான சமூகம்.

**செயற்பணி**

தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு அமைய அநாதைகளான, கைவிடப்பட்டுள்ள மற்றும் அநாதரவான சிறுவர்கள் மற்றும் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்.

**1. பிரதான செயற்பணி**

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை ஆகிய பிரதான இரண்டு துறைகளின் கீழ் தமது செயற்பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

**1.1 நன்னடத்தைச் சேவை**

- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல், உதவுதல், முன்னேற்றத்தை வினவுதல்.
- நன்னடத்தைச் சேவைக்கும் அதன் கீழ் இயங்கி வருகின்ற பல்வேறு நிறுவனங்களுக்கு வழிகாட்டுவதும் தேசிய கொள்கைகள்.'. தர நியமங்களை தயாா் செய்வதும்.
- சிறுவா்களுக்கு ஏற்புடைய சட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் புதிய சட்டங்களை ஆக்குதல்
- மாற்று அரவணைப்புக் கொள்கையை அமுல்படுத்தல்
- பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்
- சிறுவா் அரவணைப்பு நிறுவனங்களின் அபிவிருத்திக்கு உதவுதல்.

**1.2 சிறுவர் பராமரிப்புச் சேவை**

- சிறுவா் விடயத்தில் தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயாா் செய்தல்
- தேசிய சம்பவ முகாமைத்துவக் கொள்கையை அமுல்படுத்தல்
- சிறுவர்களின் நிலைத்திருத்தல் மற்றும் அபிவிருத்திகான பல்வேறு உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்
- பயிற்சி, ஆராய்ச்சி நடவடிக்கைகள்
- சிறுவா் உரிமைகள் சமவாயத்தை அமுல்படுத்தல்.
- சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதற்காக சிறுவா் சபை, சிறுவா் கழகம் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்
- சிறுவா் பாதுகாப்பு:க்கான சமூகக் கட்டமைப்புக்களைத் தாபித்தல் மற்றும் வலுவூட்டல்
- பிரதேச செயலாளா் பிரிவுகளில் சிறுவர்கள் தொடா்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல், வழிநடாத்துதல், முன்னேற்றத்தை வினவுதல்.

- சிறுவர் பராமரிப்புக்காக நாடு முழுவதும் சேவையில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து தேசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் தீர்க்கப்படாதுள்ள மற்றும் தீர்த்துவைப்பதற்கு தேசிய மட்டத்திலான தலையீடு அவசியமான தீர்மானங்கள், முடிவுகளை மேற்கொள்ளும் சிறுவர் உரிமைகள் பற்றிய தேசிய வழிப்படுத்தல் குழுவை அமைச்சின் செயலாளரின் பங்கேட்புடன் இயங்கச் செய்தல்.

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக**
**வலுவூட்டல் அமைச்சு**



## 2. பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர் பாதுகாப்பென்பது அது தொடர்பில் முன்னணி செயற்பணியொன்றை நிவேற்றி வருகின்ற சமுதாயத்தை மையமாகக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்பொன்றாகும். அடிப்படைய தொழில்நுட்ப கட்டமைப்புக்கள் மற்றும் முறையியல்களை இனங்கண்டு தேவையான தலையீடுகளை வழங்கி பலம்மிக்க பல நிகழ்ச்சித்திட்டங்களை கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரை நிறைவேற்றுவதற்கு நல்லமுறையில் மையப்படுத்தப்பட்டுள்ள மனிதப் பொறிமுறை மற்றும் சமுதாயத்தை மையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு முறையியல்கள் சில நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திடம் காணப்படுகின்றன.

### 2.1 சிறுவர் உரிமைகள் சமவாயம் பற்றிய நடவடிக்கைக் குழு நிகழ்ச்சித்திட்டம்

கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களை பேணிவரும் பொறுப்பு அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 2021 ஆம் ஆண்டு முதல் முறையாக கிராம அலுவலர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருப்பது அதன் செயற்பணிகளை தொடர்ச்சியாக பேணிவரும் நோக்கத்துடனாகும். மேலும், மாகாண சிறுவர் அபிவிருத்திக் குழு இந்த அமைச்சுச் செயலாளரின் 2018.01.10 ஆம் திகதி 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய இயங்கிவருகின்றது.

#### 2.1.1 சிறுவர் உரிமைகள் பற்றிய தேசிய நடவடிக்கைக் குழு

சிறுவர் உரிமைகள் சமவாயத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கால அடிப்படையிலான அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் சிபாரிசுகளை அமுல்படுத்தத் தேவையான காத்திரமான தலையீடு, சிறுவர்கள் தொடர்பிலான சிக்கல்களின் போது ஆலோசனை – கலந்தாராய்கை தலையீடு, சிறு

வர் உரிமைகளை பலமுடன் சமூகமயப்படுத்தல் மற்றும் சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களையும் தடுப்பதற்கு தேசிய மட்டத்தில் திட்டங்களைத் தயார் செய்ய உதவுவது இந்தக் குழுவின் பிரதான செயற்பணிகளாகும்.

2022.09.13 ஆம் திகதிய தேசிய குழுவின் கூட்டமொன்று ஞுழழஅ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டதுடன், அதன் தீர்மானங்கள் தொடர்பிலான அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குழுவின் ஒழுங்கமைப்பின் ஊடாக சமர்ப்பிக்கப்படுகின்ற சிக்கல்களின் அடிப்படையில் அடுத்த கூட்டம் தீர்மானம் செய்யப்படும்.

### 2.2 சிறுவர் கழகம் மற்றும் சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் கழக கருத்திட்டம் என்பது, சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை மென்மேலும் அர்த்தப்பூர்வமாக உறுதிப்படுத்துவதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள சிறுவர்களின் கட்டமைப்பாக உள்ளது. கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் கழக பதவிவழியானது, பிரதேச சிறுவர் சபை மற்றும் தேசிய சிறுவர் சபை வரை பரந்து செல்கின்றது.

### 2.3 சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகள்

சிறுவர்களின் பங்கேட்பை அர்த்தப்பூர்வமாக பெற்றுக் கொள்ள நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிப் பிரேரணையை தயார் செய்துகொள்ள பயிற்சி வழங்கிய பின்னர் சிறுவர்கள் இனங்காணும் சிக்கலொன்றுக்கு சிறுவர்களாகவே தீர்வுத் திட்டமொன்றை அவர்களே அமுல்படுத்துவதன் மூலம் சிறுவர்களை முனைப்புடன் செயற்படுவோராக மாற்றுவதற்கு இதன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டில் சிறுவர்கள் பிரேரித்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து தெரிவு செய்துகொள்ளப்பட்ட மாவட்டங்களுக்கு ரூபா 75,000.00 வீதம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**2.4 சிறுவர் மைய அனர்த்த அச்சுறுத்தல்களைக் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் பிரதானமாக சிறுவர் சபைகள் மற்றும் சிறுவர் கழகங்களின் சிறுவர்களை மையமாகக் கொண்டு அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும். இலங்கை அண்மைக் காலமாக பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு பரவலாக முகம் கொடுக்கும் நாடாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே பிள்ளைகளை முன்ஆயத்தப்படுத்தும் செயன்முறையில் காத்திரமான தலையீடு செய்பவராக பலப்படுத்துவது மிகவும் முக்கியமான உபாயமுறையாகும் என்பதுடன், இது நீண்டகால அடிப்படையில் பாதுகாப்பான சமூகமொன்றாக செய்யும் முதலீடாகும். இந்த நோக்கத்துக்காக எமது திணைக்களம் சிறுவர் மைய அனர்த்த அச்சுறுத்தல்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் பிள்ளைகள் சமர்ப்பித்த கருத்திட்டப் பிரேரணைகளுக்கு முன்னுரிமை வழங்க திணைக்களம் திட்டமிட்டுள்ளது. பிள்ளைகளினால் பிரேரிக்கப்பட்டுள்ள கருத்திட்டமொன்றுக்கு திணைக்களத்தின் மூலம் நிதிப் பங்களிப்பாக ரூபா 10,000 ஆன தொகை வழங்கப்படுகின்றது.

**2.5 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் ஆராய்ச்சி சாத்தியக்கூறினை மேம்படுத்தல்.**

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் /உதவியாளர்களின் தொழில்சார் அறிவு, திறமை மற்றும் அனுபவங்களை கலைத்துவ அணுகுமுறையின் ஊடாக பரிமாற்றிக் கொள்ள வாய்ப்பளிப்பதும், தொழில்சார் திறமைகளை மென்மேலும் மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு சமூகவியல்சார் ஆராய்ச்சி வெளியீடொன்றை வெளியிடுவது இதன் கீழ் மேற்கொள்ளப்படும். இந்த ஆராய்ச்சியானது தமது சொந்த செலவில் மேற்கொள்ளப்படுகின்றது.

**2.6 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

சிறுவர் உரிமகளை சமூகத்தில் உறுதி செய்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதை நோக்காகக் கொண்டு சிவில் சமூகத்தை வலுவூட்டுவதற்காக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமுதாயத்திற்கு அது பற்றிய பரந்தளவிலான புரிந்துணர்வைப் பெற்றுக்கொடுக்கும் தேவைப்பாட்டை இதன் மூலம் நிறைவு செய்துகொள்ள முடியுமாகின்றது. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக ஒன்லையின் ஊடாக மேற்கொள்ளப்படும் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஏற்படும் சிக்கலான நிலைமைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக இணையத்தளத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறந்த பெற்றோர் மற்றும் பிள்ளைகளை ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் வளர்ப்பதற்கான சிறந்த முறையில்கள் பற்றிய பெற்றோரின் திறமைகளை வளர்ப்பதும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் சிறுவர் உரிமைகள் சம்பந்தமான பல்வேறு துஜறகள் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்படுகின்றன.

## 2.7 சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் நிலைத்திருத்தல், அபிவிருத்தியடையும் உரிமையை உறுதி செய்வதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

### 2.7.1 ஓரங்கட்டப்பட்டுள்ள சமுதாயத்தினரின் பிள்ளைகளுக்கு உரிமைகளை உறுதி செய்வறத்கான சூழலை உருவாக்குதல்.

சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திக்கான, அரவணைப்புக்கான, பாதுகாப்புப் பெறும் உரிமை மற்றும் பங்கேற்பு உரிமையை உறுதி செய்வதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. சிறுவர் உரிமைகளை இழக்கும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள தோட்டப்புற, வீதி, தொடர்மாடி வீடுகளின், மீன்பிடி மற்றும் ஆதிவாசிகள் போன்ற ஓரங்கட்டப்பட்டுள்ள சமுதாயத்தினரின் பிள்ளைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

- ஓரங்கட்டப்பட்டுள்ள சமுதாயத்தினரின் பிள்ளைகளுக்கு நடமாடும் சேவைகளை நடாத்தல் மற்றும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- நன்மையிழந்துள்ள சமுதாயம் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளுக்கு நிதி நிவாரணம் வழங்குதல்.

## 2.8 கல்வியைப் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர்களின் அபிவிருத்தியில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணியொன்றான கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டங்களாக அமுல்படுத்தப்படுகின்றன.

### 2.8.1 செவண சரண பெற்றோர் பாதுகாவலர் திட்டம்

கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர்களின் நிதி உதவியின் கீழ் பொருளாதார அசௌகரியங்களுக்கு மத்தியில் கல்வி பயில்கின்ற பிள்ளைகளுக்கு கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு கற்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. மாதாந்தம் பாதுகாவலர்களான பெற்றோர் வழங்குகின்ற நிதியை தபால் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளதுடன், கெப்பகரு பாதுகாவலர்களின் விருப்பத்துக்கு அமைய புலமைப் பரிசில் தொகை வழங்கப்படுகின்ற காலம் தீர்மானிக்கப்படும்.

### 2.8.2 அத்வெல அனுசரணையாளர் பெற்றோர் திட்டம்

ஒரு பிள்ளை பாதுகாப்பான குடும்பமொன்றில் வாழ்வதற்குள்ள உரிமையை உறுதி செய்து பிள்ளையின் ஒட்டுமொத்த அபிவிருத்தியையும் செய்துகொடுக்கும் நோக்கத்துடன் இந்த அத்வெல அனுசரணையாளர் பெற்றோர் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது அனுசரணையாளர் மற்றும் உதவி எதிர்பார்க்கும் பிள்ளை, குடும்பத்துக்கு இடையே ஒருங்கிணைப்பு திணைக்களத்தினால் செய்துகொடுக்கப்படும். சிறுவர் உரிமைகளை மீறியுள்ள அல்லது மீறப்படும் அபாயத்தைக் கொண்டுள்ள பிள்ளைகள் மற்றும் திடீர் விபத்து அல்லது அனர்த்தத்துக்கு ஆளான பிள்ளைகளுக்கு நிதிசார் உதவி, பொருள் உதவி மற்றும் சேவை வழங்குவதற்கு தலையீடு செய்வது மேற்கொள்ளப்படுகின்றது. நிதிசார் உதவி அவசியமான பிள்ளைகளுக்கு அவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படுகின்ற கணக்கின் ஊடாக நிதி வழங்குதல் ம்றறும் பொருட்கள், வேறு உதவிகள் மற்றும் உதவிச் சேவைகள் அவசியமான பிள்ளைகளுக்கு திணைக்களம் ஊடாக அல்லது சிபாரிசின் பேரில் நேரடியாக உதவி வழங்குவது இதன் கீழ் மேற்கொள்ளப்படும். ஆகக் குறைந்த அனுசரணை தொகை ரூ. 5,000.00 ஆகும்.

### 2.8.3 சிப்சவிய கல்வி புலமைப்பரிசில் உதவி நிகழ்ச்சித்திட்டம்

கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொருளாதார அசௌகரியங்களைக் கொண்ட பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு எட்லஸ் நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு அமுல்படுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் போது 200 புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதற்கமைய 6 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் 200 பேருக்கு மாதாந்தம் ரூ. 1500 வீதம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ரூ. 5000 ஆன தொகையை நிலையான வைப்பாக கணக்குகளில் சேமிப்பொன்றாக பேணிவருவது மேற்கொள்ளப்படும். 3 மாதங்களுக்கு ஒரு தடவை தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் பின்னாய்வு அறிக்கை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ளப்பட்டு பரிசோதிக்கப்படும்.

### 2.8.4 நெனதிரிய கல்வி புலமைப்பரிசில் திட்டம்

2011 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகள் பற்றிய ஆய்வின் போது இனங்காணப்பட்டுள்ள கல்வி வாய்ப்பினை இழக்கும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள பிள்ளைகளுக்காக நெனதிறிய புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு பூரண நிதிப் பங்களிப்பு தனியார் துறையினரால் வழங்கப்படுவதுடன், செவண சரண பெற்றோர் பாதுகாவலர் திட்டத்தின் ஒரு உப கருத்திட்டமாக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்தம் புலமைப் பரிசில் உதவித் தொகையை தபால் அலுவலகங்களின் ஊடாக பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

### 2.8.5 கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் புலமைப்பரிசில் திட்டம்

கல்வி பயில்கின்ற பொருளாதார அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள பிள்ளைகளுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற புலமைப் பரிசில் திட்டமொன்றாக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது. பிரதேச செயலகம் ஊடாக குறித்த பிரதேச செயலக பிரிவிலுள்ள பிள்ளைகளுக்கு இரண்டு மாதாங்களுக்கு ஒரு தடவை இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்றது. மாதாந்தம் ஒரு பிள்ளைக்கு ரூபா 700.00 ஆன தொகை இதன் கீழ் கிடைக்கின்றது. பிள்ளைகள் 2000 பேர் இதன் மூலம் பயன்களைப் பெறுகின்றார்கள். அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

### 2.8.6 பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பாடசாலைமயப்படுத்தல் மற்றும் கற்கை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இனங்காணப்படுகின்ற பிள்ளைகளுக்காக பிரதேச செயலாளருக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுவதுடன், குறித்த உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதானது பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர், சிறுவர் மேம்பாட்டு உதவியாளர் ஊடாக மேற்கொள்ளப்படும். ஒரு பிள்ளைக்கு ரூபா 1,000.00 ஆன தொகை உரித்தாகும். ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் பிள்ளைகள் 6 பேருக்கு இதன் மூலம் பயன்கள் கிடைக்கும்.

## 2.9 சுகாதாரம் மற்றும் போசாக்குக்குக் காணப்படுகின்ற உரிமையை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதாரம் மற்றும் போசாக்குக்கான உரிமையை சிறுவர்களுக்கு உறுதி செய்துகொடுப்பதற்காக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.9.1 திடீர் விபத்து உதவி நிகழ்ச்சித்திட்டம்

இயற்கை அனர்த்தங்கள் அல்லது பல்வேறு காரணங்களினால் திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு ஆளாகின்ற பிள்ளைகளின் போஷாக்குத் தேவைகளுக்காகவும் மற்றும் வேறு தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஒரு தடவை மாத்திரம் நிதி உதவி வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்திலுள்ள சிறுவர்களுக்கு ஆகக் குறைந்தது ரூபா. 5,000.00 மற்றும் உச்சளவாக ரூபா. 10,000.00 வரை கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. உரிய கொடுப்பனவுகளை பிரதேச செயலகத்தின் ஊடாக பொருத்தமானவாறு செலுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

### 2.9.2 இரட்டைக் குழந்தைகளுக்கான உதவி நிகழ்ச்சித்திட்டம்

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் இரட்டைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகையாகும். இரட்டைக் குழந்தைகளின் போசாக்குத் தேவைகள் மற்றும் வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு இந்த உதவி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இரட்டைக் குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ரூபா 7500.00 மற்றும் மூவர் கொண்ட இரட்டைக் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு ரூபா 15,000.00 என்ற வகையில் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன், இக்கொடுப்பனவை ஒரு தடவை மாத்திரம் பிரதேச செயலகத்தினால் பொருத்தமானவாறு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.9.3 மருத்துவ உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் நோய்வாய்ப்பட்டுள்ள பிள்ளைகளுக்காக வழங்கப்படுகின்ற உதவித் தொகையாகும். மேற்படி பிள்ளைகளுக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான செலவினத்தைத் தாங்கிக் கொள்வதற்காக இந்த நிதி உதவி வழங்கப்படுகின்றது. ஒரு பிள்ளைக்கு ஆகக் குறைந்தது ரூபா 5,000 முதல் உச்சளவாக ரூபா 15,000 வரை வழங்கப்படுகின்றது. பிரதேச செயலகத்தின் ஊடாக இக்கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது.

### 2.9.4 செனெஹச சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம்

2004 சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். ஒரு மாதத்திற்கு ரூபா 1500 வீதம் பிள்ளைகளின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு 18 வயது பூர்த்தியடைந்த பின்னர் வைப்புத் தொகையை குறித்த பிள்ளைக்கு பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது உதவி பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை 4 ஆகும்.

**வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு உதவி வழங்குதல்**

2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற திடீர் வெள்ளம் காரமணாக தாய் தந்தையை இழந்தள்ள பிள்ளைகளுக்கு உதவி வழங்குவது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய தற்போது உதவி பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

### 2.9.5 அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்களுக்குப் பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல்

சிறுவர்கள் பல்வேறு காரணங்களினால் அச்சுறுத்தலான நிலைக்கு ஆளாவதுடன், பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகின்றனர். இந்த அச்சுறுத்தல் நிலைமைகளை இனங்கண்டு தொழில்நுட்ப உபாய முறையியல்கள் ஊடாக பகுப்பாய்வு செய்து அச்சுறுத்தலான நிலைமைகளை தடுத்து மேற்படி சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதற்கு பல்வித அணுகுமுறைகளின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், பிள்ளைகளுக்கு குடும்ப அலகில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது.

### 2.10 உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடுதல்

ஒவ்வொரு வருடமும் சர்வதேச சிறுவர் தின தொணிப்பொருளுக்கு இசைவான தொணிப்பொருளின் கீழ் உலக சிறுவர் தினத்தை கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் போது பிள்ளைகளின் பங்கேட்பை அர்த்தப்பூர்வமாக்குதல், சிறுவர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல் மற்றும் பிள்ளைகளை பாராட்டுவதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு அனுசரணையாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பிள்ளைகளுக்காக நடவடிக்கை மேற்கொள்வது சமூகத்தின் பொறுப்பாகும் என்பதை உணர்த்த எதிர்பார்க்கப்படுகின்றது.

“கூற முடியாததை வரையுங்கள் - தெலி துடக அசிரிய” சிறுவர் சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய பிள்ளைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிவைப்பதும் இடம்பெற்றது.

### 2.11. சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு சிறுவர் இல்லங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சிறுவர் இல்லங்களின் பதவியணியினருக்கு தொடர்ச்சியாக பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதும், உரிய தரத்தைக் கொண்ட நிலையில் சிறுவர் இல்லங்களைப் பேணிவருவதற்கும் சிறுவர்களுக்கு ஆற்றப்படுகின்ற சேவைகளை மென்மேலும் நல்ல மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கும் தீவிர கண்காணிப்புச் செயன்முறையை அமுல்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களை சமூகமயப்படுத்துவதற்கு தொழில்சார் மற்றும் வாழ்க்கைத்திறன் பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கி தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 2.12 சிறுவர்கள் தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்தல்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆகிய இரு துறைகளுக்கும் ஏற்புடைய தேசிய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் தேசிய வழிகாட்டல்களைத் தயார் செய்வது திணைக்களத்தின் முக்கிய செயற்பணியாகும். அதற்கமைய, பின்வரும் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் தரநியமங்களைத் தயார் செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் மற்றும் சம்பவ முகாமைத்துவக் கொள்கையை தயார் செய்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று அமுல்படுத்தல்.
- மாற்று அரவணைப்புக் கொள்கை
- சிறுவர் அரவணைப்பு நிலையங்கள் மற்றும் நன்னடத்தை அலுவலர்களுக்கான நிலையான கட்டளைகளைத் திருத்தம் செய்தல்
- அர்த்தப்பூர்வமான சிறுவர் பங்கேட்பு பற்றிய வழிகாட்டல்கள்
- சிறுவர் அபிவிருத்திக் கிராமிய குழுக்கள் பற்றிய வழிகாட்டல்கள்.

## 2.13. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

திணைக்களத்தின் கீழ் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்வது அத்தியாவசியமாகும். அதற்காக வருடாந்தம் துறைசார் பயிற்சி செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான துறைகளின் ஊடாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் பாதுகாப்புத் துறை சம்பந்தமான ஆராய்ச்சிகள் பற்றிய ஆவணங்களை சேகரிப்பதை நோக்காகக் கொண்டு தேசிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது, திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. .

## 3. 2023 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைத்திருத்தல், அபிவிருத்தி மற்றும் கல்விக்கான உரிமைகளை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

- அர்த்தப்பூர்வமான சிறுவர் பங்கேட்பை வலுவூட்டல் மற்றும் விருத்தி செய்வதற்கு சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
- சிறுவர் உரிமைகளை மீறுவதை தடுத்தல் மற்றும் மீறல்கள் தொடர்பில் தலையீடு செய்தல்
- ஓரங்கட்டப்பட்டுள்ள சமுதாயத்தில் வாழும் சிறுவர்களின் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்
- அனர்த்த அச்சுறுத்தல்களை குறைக்கும் செயன்முறையில் சிறுவர்களின் தலையீட்டை வலுவூட்டல்
- சிறுவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிகளை அமுல்படுத்தல்
- இணையத்தளத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை பலப்படுத்தல்
- மாற்று அரவணைப்புக் கொள்கையை அமுல்படுத்தல் (தாய்மாருடன் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கான மாற்று அரவணைப்பு முறையொன்றை அறிமுகம் செய்தல்)
- கடும் அச்சுறுத்தலான நிலைமையிலுள்ள பிள்ளைகளுக்கு கெப்பகரு பாதுகாவலர் முறையை அறிமுகம் செய்தல்
- பிள்ளைகளைத் தத்தெடுப்பதற்கான முறையியலை இலகுபடுத்தல்
- சம்பவ முகாமைத்துவ முறையியலை வலுவூட்டல் மற்றும் அச்சுறுத்தலான பிள்ளைகளுக்கு பாதுகாப்புத் திட்டங்களை தயார் செய்தல்.
- மனிதவள அபிவிருத்திக்கான பயிறசி மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்ளல்.
- தேசிய வைபவங்களை ஒழுங்குசெய்வதும், கொண்டாடுவதும்.
- கொள்கைகளை தயார் செய்தல் மற்றும் ஆலோசனை
- விழிப்புணர்வூட்டல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- ஊடகமும், வெளியீடுகளும்.

## 4. அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தின் பொழிப்பு -2022.09.30

| தொடர் இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை/ பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | **சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் (சிறுவர் உரிமைகள் பற்றிய பூகோள பிரகடனம் மற்றும் சமவாயம்) தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கு உதவி வழங்குதல்** | | | | | |
| 1.1 | மருத்துவ உதவி வழங்குதல் | 2.879 | 1.680 | சிறுவர்கள் - 561 | சிறுவர்கள் - 326 | சிறுவர்கள் - 326 |
| 1.2 | இரட்டைப் பிள்ளைகளுக்கு உதவி வழங்குதல் | 1.097 | 0.795 | குடும்பம் - 142 | குடும்பம் -97 | குடும்பம் - 97 |
| 1.3 | திடீர் விபத்து உதவி | 0.567 | 0.390 | சிறுவர்கள் - 113 | சிறுவர்கள் - 73 | சிறுவர்கள் - 73 |
| 1.4 | செனெஹச உதவி (சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு) | 0.039 | 0.035 | சிறுவர்கள் - 4 | சிறுவர்கள் - 4 | சிறுவர்கள் - 4 |
| 1.5 | வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி | 0.458 | 0.342 | சிறுவர்கள் - 20 | சிறுவர்கள் - 19 | சிறுவர்கள் - 19 |
| **2** | கல்வி உதவி மற்றும் புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொடுத்தல் | | | | | |
| 2.1 | கெப்பகரு தெகுரு பாதுகாவலர் உதவி வழங்குதல் | 16.800 | 13.405 | சிறுவர்கள் -2000 | சிறுவர்கள் -2000 | சிறுவர்கள் - 2இ000 |
| 2.2 | கல்வி உதவி வழங்குதல் | 2.0785 | 2.074 | சிறுவர்கள் -2023 | சிறுவர்கள் -2021 | சிறுவர்கள் 2021 |
| 3 | அச்சுறுத்தலான மற்றும் ஓரங்கப்பட்டப்பட்டுள்ள குடும்பங்களிலுள்ள சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | | | | | |
| 3.1 | ஓரங்கட்டப்பட்டுள்ள சமுதாயத்தினரின் பிள்ளைகளுக்கு நடமாடும் சேவைகளை நடாத்தல் மற்றும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல் | 0.686 | 0.453 | நிகழ்ச்சித்திட்டம் 16 | நிகழ்ச்சித்திட்டம்-10 | சிறுவர்கள் - 10இ<br>குடும்பம் 10 |
| 3.2 | அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய பிள்ளைகளின் அபிவிருத்தி மற்றும் நிலைத்திருத்தலின் உரிமையை உறுதி செய்ய உதவுதல் | 0.015 | 0.013 | கூட்டம் - 1 | கூட்டம் - 1 | அலுவலர்கள் - 77 |
| 3.3 | இணையத்தளத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது பற்றிய துண்டுப் பிரசுரம் அச்சிடல் | 0.105 | 0.105 | துண்டுப் பிரசுரம் - 24,000 | துண்டுப் பிரசுரம் - 24,000 | துண்டுப் பிரசுரம் - 24,000 |
| 3.4 | அச்சுறுத்தலான சிறுவர்களுக்கு பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல் | 8.344 | 6.144 | பாதுகாப்புத் திட்டம் - 275 | பாதுகாப்புத் திட்டம் 193 | சிறுவர்கள் - 193 |
| 3.5 | இணையத்தளத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது பற்றி பெற்றோரை அறிவுறுத்தல் | 0.648 | 0.308 | நிகழ்ச்சித்திட்டம் 162 | எதிர்காலத்தில் மேலும் 77 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படவுள்ளன. | பெற்றோர் 7920 |
| | **உப மொத்தம்** | **33.716** | **25.744** | | | |

| தொடர் இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை/ பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **4** | சமுதாய அடிப்படையிலான சிறுவர் பாதுகாப்புச் செயன்முறையை வலுவூட்டல் | | | | | |
| 4.1 | சிறுவர் உரிமைகள் பற்றிய பிரதேச நடவடிக்கைக் குழுக் கூட்டங்களை நடாத்தல் | 3.249 | 2.270 | கூட்டம் - 1340 | கூட்டம் - 800 | அலுவலர்கள் 59இ375 |
| 4.2 | சிறுவர் உரிமைகள் பற்றிய தேசிய நடவடிக்கைக் குழுக் கூட்டங்களை நடாத்தல் | 0.025 | 0.000 | கூட்டம் - 2 | கூட்டம் - 1 | உறுப்பினர்கள் 30 |
| 4.3 | கிராமிய குழு பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.041 | 0.036 | நிகழ்ச்சித்திட்டம் - 2 | நிகழ்ச்சித்திட்டம் - 2 | பயிற்றுவிப்பாளர்கள் 70 |
| 4.4 | சிறுவர் உரிமைகள் பற்றிய மாகாண நடவடிக்கைக் குழுக் கூட்டங்களை நடாத்தல் | 0.131 | 0.0719 | கூட்டம் - 14 | கூட்டம் - 6 | அலுவலர்கள் 375 |
| 4.5 | மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 0.000 | 0.000 | மாதிரிக் கிராமம் | நிகழ்ச்சித்திட்டம் - 1 | சிறுவர்கள் 30 |
| 4.6 | உலக சிறுவர் தினைத்தைக் கொண்டாடுதல் | 1.514 | 0.331 | நிகழ்ச்சித்திட்டம் 363 | நிகழ்ச்சித்திட்டம் - 3 | பயனாளிகள் 280 |
| 4.7 | சிறந்த பெற்றோர் நிலை மற்றும் பிள்ளைகளுக்கான ஒழுக்கக்கட்டுப்பாட்டு முறையியல்கள் பற்றிய பெற்றோரின் திறமைகளை வளர்த்தல் மற்றும் பாராட்டப்பட வேண்டிய சிறுவராக எவ்வாறு இருப்பது என்பது தொடர்பிலான சிறுவர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.855 | 1.753 | நிகழ்ச்சித்திட்டம் - 336 | நிகழ்ச்சித்திட்டம் - 325 | பயனாளிகள் 13இ975 |
| **5** | அர்த்தப்பூர்வமான சிறுவர் பங்கேற்பை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | | | | | |
| 5.1 | சிறுவர் கழகம் மற்றும் சிறுவர் சபைக் கூட்டங்களை நடாத்தல் (பி.செ., மாவட்டம் மற்றும் தேசிய மட்டத்தில்) | 2.290 | 1.062 | கூட்டம் 721 | கூட்டம் 337 | சிறுவர்கள் - 20இ500 |
| 5.2 | சிறுவர் சாதகமான சமூகத்தை உருவாக்குவதற்கு சிறுவர்களை வலுவூட்டல் - சிறுவர் மைய ஆராய்ச்சிகள் | 0.095 | 0.000 | ஆராய்ச்சி 3 | ஆராய்ச்சி 0 | பங்கேற்றோர் எண்ணிக்கை |
| **6** | மாற்று அரவணைப்பு | | | | | |
| 6.1 | மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பௌதீக வளங்களின் குறைபாடுகளை பெற்றுக் கொடுத்தல் | 1.922 | 1.459 | சிறுவர் இல்லங்கள் - 6 | சிறுவர் இல்லங்கள் - 5 | சிறுவர்கள் - 110 |
| 6.2 | இனங்காணப்பட்ட சிறுவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தல் | 2.003 | 0.085 | சிறுவர்கள் -5 | சிறுவர்கள் - 1 | சிறுவர்கள் - 1 |
| | **உப மொத்தம்** | **13.125** | **7.069** | | | |

| தொடர் இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை/ பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 6.3 | பிள்ளைகளை அரவணைப்புச் செய்யும் அலுவலர்களை பயிற்றுவித்தல் | 0.200 | 0.000 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 1 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 0 | அலுவலர்கள் |
| 6.4 | நன்னடத்தை அலுவலர்களுக்கு ஆட்கடத்தலை தடுத்தல் மற்றும் சட்டங்கள் பற்றிய திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 0.250 | 0.00614 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 2 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 2 | அலுவலர்கள் |
| 6.5 | மாகாண நன்னடத்தை திணைக்களங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் | 0.150 | 0.050 | கூட்டங்கள் 3 | கூட்டங்கள் 2 | சிறுவர்கள் மற்றும் அலுவலர்கள் 55 |
| 6.6 | நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்கு (பரத்த) பயிற்றுவித்தல் /திறன் அபிவிருத்தி /திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 0.008 | 0.008 | நிகழ்ச்சித்திட்டம்1 | நிகழ்ச்சித்திட்டம்1 | நிகழ்ச்சித்திட்டம்1 |
| 6.7 | சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்வதன் மூலம் இனங்காணப்பட்ட தேவைகளுக்கு மற்றும் ஆகக் குறைந்த தரநியமங்களை பேணிவருவதற்கு நிதி உதவி வழங்குதல் | 4.750 | 4.316 | நிலையம் 3 | நிலையம் 2 | சிறுவர்கள் 237 |
| **7** | **திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு** | | | | | |
| 7.1 | தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் | 1.3496 | 0.540 | கூட்டம் - 253 | கூட்டம் - 129 | அலுவலர்கள் -445 |
| 7.2 | சி.உ.மே.அ. ளின் வருடாந்த தொகுப்பு சம்மேளனம் மற்றும் அனுபவப் பகிர்வுக்கான வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல் | 1.000 | 0.000 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 1 | நிகழ்ச்சித்திட்டம் எதிர்காலத்தில் நடைபெறும் | அலுவலர்கள் 445 |
| 7.3 | தற்போதைய பொறிமுறையில் அலுவலர்களின் செயலாற்றுகையை தொடர்ச்சியாக கண்காணிப்புச் செய்தல் | 0.567 | 0.000 | செயலாற்றுகை அறிக்கை புத்தகங்கள் 450 | பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | அலுவலர்கள் 420 |
| 7.4 | உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் பயனாளிகளை பின்னாய்வு செய்தல் | 0.020 | 0.006 | கூட்டம் 1 | கூட்டம் 1 | |
| 7.5 | பாதுகாப்புத்திட்டங்களின் பயனாளிகள் பற்றிய பின்னாய்வை மேற்கொள்ளல் | 0.0383 | 0.0383 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 1 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 1 | |
| | **உப மொத்தம்** | **8.333** | **4.964** | | | |

| தொடர் இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை/ பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **8** | **அலுவலர்களின் திறன் அபிவிருத்தி** | | | | | |
| 8.1 | பிரதேச அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் பயிற்சித் தேவைகள் (வெளிவாரிப் பயிற்சி) | 0.200 | 0.060 | பயிற்சிகளின் எண்ணிக்கை 4 | பயிற்சிகளின் எண்ணிக்கை 1 | அலுவலர்கள் 1 |
| 8.2 | சம்பவ முகாமைத்துவ வழிகாட்டல்கள் பற்றி சி.உ.மே.அ. பயிற்சியளித்தல் | 0.200 | 0.196 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 4 | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 4 | |
| **9** | **வேறு** | | | | | |
| 9.1 | அச்சு நடவடிக்கைகள் மற்றும் வெளியீடுகள் | 0.150 | 0.107 | வெளியீடு 4 | வெளியீடு 2 | |
| 9.2 | கையிலுள்ள பட்டியல்கள் 217-2-2-5-2202 | 0.3551 | 0.3551 | | | |
| 9.3 | கையிலுள்ள பட்டியல்கள் 217-2-2-6-2202 | 0.6002 | 0.6002 | | | |
| 9.4 | வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இற்கமைய ரத்துச் செய்யப்பட்ட கருத்திட்டம் 217-2-2-6-2202 | 0.7955 | | | | |
| 9.5 | வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இற்கமைய ரத்துச் செய்யப்பட்ட கருத்திட்டம் 217-2-2-4-2202 | 0.475 | | | | |
| | **உப மொத்தம்** | **2.7758** | **1.3183** | | | |
| | **முழு மொத்தம்** | **57.950** | **39.094** | | | |

## 7.2.6 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

**<u>நோக்கு</u>**

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

**<u>செயற்பணி</u>**

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

### 1. பிரதான பணிகள்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பது உட்பட சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான சகல பணிகளையும் அமுல்படுத்தல், கண்காணிப்புச் செய்தல், ஒழுங்குறுத்தல மற்றும்பின்னாய்வு செய்தல்.

## நிறுவன ஒழுங்கமைப்பு



## 2. பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

### 2.1 சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களை சேர்ந்த அரசதுறை அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பில் மாவட்ட மட்டத்தில் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் சிறுவர் அலுவல்கள் தொடர்பான வெளிக்கள அலுவலர்களுக்கு கூட்டு அணுகுமுறைகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். இந்த கொள்கைக்கமைய, 2022 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல், விரிவுரைகளுக்காக பயிற்றுவிப்பாளர் குழுமத்தை உருவாக்குதல், கொள்கை பற்றிய பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல், மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் மற்றும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துவது மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.2 சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல்.

சிறுவர் பகல்நேர அரணைப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்வதன் மூலம் இலங்கையின் சகல பகல்நேர பராமரிப்பு நிலையங்களையும் உயர் தரத்தைக் கொண்டதாக பேணிவருவதை உறுதி செய்வது இதன் நோக்கமாகும்.

### 2.3 தேசிய தரவு முறைமையை அபிவிருத்தி செய்தல்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தகவல்களை வீடியோ ஒளிப்பதிவு செய்வது பற்றிய தகவல்கள், பொலிஸ் நிலையங்களுக்கு அறிக்கையிடப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்கள் மற்றும் அச்சுறுத்தலான சிறுவர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய தேசிய தரவு முறைமை தயார் செய்யப்பட்டுள்ளது. தற்போது பரீட்சார்த்த மட்டத்தில் காணப்படுகின்றது.

### 2.4 சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுத்தல் மற்றும் பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள்.

சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பதற்காக மற்றும் சமய நிலையங்களில் சிறுவர்களுக்கு இடம்பெறக்கூடியதான சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக முறையான முறையியலை தாபிப்பது இதன் நோக்கமாகும். மாகாண மட்டத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களின் வளவாளர் குழுவை தயார் செய்தல், வழிகாட்டல் தொகுப்பை தயார் செய்தல் மற்றும் சமயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டுவது மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.5 பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சுரகும் பவ்வ)

கட்டாயக் கல்வி உரிமையை உறுதி செய்தல் மற்றும் குறித்த சிறுவர்களை சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து தடுத்துக் கொள்ளத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே, பாடசாலைகளில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிப்பதன் நோக்கமாகும். இதன் போது 2011 இன் 17 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய கல்வி அமைச்சுடன் இணைந்து இந்த நிகழ்ச்சி த்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**2.6 பாடசாலை மாணவர் தலைவர்களுக்கு "மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம்".**

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாணவர் தலைவர்களை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதை குறைத்துக் கொள்ள் மற்றும் தடுத்துக் கொள்வதற்கு மாணவர் தலைவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது இதன் நோக்கமாகும். மேலும், சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான சூழலை பாடசாலைகளில் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் போது சிறுவர் பாதுகாப்புக்கு மாணவர் தலைவர்களை தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் பங்கேட்கச் செய்துகொள்வது இடம்பெறுகின்றது. இலங்கையின் அரச, பகுதியளவிலான அரச, பிரிவெனா, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளை சேர்ந்த மாணவர் தலைவர்கள், மாணவர் தலைவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் அதிகர்களை பிரதானமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டமானது கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது பாடசாலைகளை பதிவு செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**2.7 பாடசாலைகளுக்கு சிறுவர் உளவிய் மற்றும் உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டம்**

"சீக்ஷா" கையேட்டைப் பயன்படுத்தி சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பில் பாடசாலைகளின் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. திறிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உளவியல் சமூக தலையீடுகளை செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

**2.8 திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கான அவசர நிவாரண நிகழ்ச்சித்திட்டம்**

திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருத்தலை உறுதி செய்வதற்கு உகந்த சிறுவர் பாதுகாப்புத் தேவைகளை பூர்த்தி செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். மேலும் சிறுவர்களுக்கு அவசர நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படும்.

**2.9 ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய, கண்ணுக்கு தென்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவிகள் அல்லது உரிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.**

சிறுவர் துஷ்பிரயோகம், பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான மற்றும் கண்ணுக்கு தென்படாத சிறுவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

**2.10 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்**

சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் சகல சமய மற்றும் அரக்கட்டளை நிலையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களினால் பேணிவரப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்துவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நாடளாவிய ரீதியில் பரந்துள்ள மேற்படி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்துவது மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச அலுவலர்கள் மற்றும் நன்னடத்தை சிறுவர்

பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புச் செய்து இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

**2.11 சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஊடக திட்டங்கள், தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் கருவிகள் அபிவிருத்தி, நாட்களை கொண்டாடுதல் மற்றும் சம்பவங்கள், கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள், உத்தியோகபூர்வ இணையத்தளம், பேஸ்புக் லுழரவுரடிந மற்றும் வுறவைவநச பேணிவருவது உள்ளிட்ட தொடர்புசாதன நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி தொடர்பாக சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டுவது தொடர்பான தகவல்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவது இதன் பிரதான நோக்கமாகும். அதற்கமைய, அச்சு, இலத்திரனியல் மற்றும் கற்புல, செவிப்புல முறைகள் ஊடாக விழிப்புணர்வூட்டுவதும், பிரச்சாரம் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது,

**2.12 விசேட விசாரணைகள், விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்குறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் தொடர்பான சைபர் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சிறுவர் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அரவணைப்புச் செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். அதற்கு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விசேட விசாரணைகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றன.

**2.13 சிறுவர்களுக்கு நட்புறவான முறையில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல்**

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்கள் இரண்டு முறை பாதிக்கப்படுவதை தடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் லமா பியச எனும் வளவில் புதிய சிறுவர்களுக்கு நட்புறவான வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவு மூலம் சிறுவர்களின் சாட்சியங்கள் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

**2.14 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் 1929 இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலி நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ளல்**

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் உடல், உள, பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாரபட்சம் காட்டல் தொடர்பில் மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வது 24 மணி நேரமும் 365 நாட்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

**2.15 தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை**

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை குறைத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்குள்ள அபாயத்தை தடுத்தல், கல்வி மற்றும் உடல்சார், உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் சிறுவர் மை உளவியல் சமூக உதவி சிறுவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இந்த சேவை மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுலவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**2.16 தொழில்வல்லுனர்களுக்கு உளவியல் சமூக பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஐநுஊ கருவிகள் போன்றவற்றை தயார் செய்தல்**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் தொழில்வல்லுனர்களின் அறிவை இற்றைப்படுத்தி பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் மீள்இணைப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

**2.17 சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அச்சுறுத்தலுக்கு ஆளாகும் சமுதாயத்தினர் மற்றும் சிறுவர் குழுக்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டம்.**

அச்சுறுத்தலுக்கு ஆளாகும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் போது புலம்பெயர் ஊழியர்களின் பிள்ளைகள், தோட்டத்துறை சமுதாயத்தினரின் பிள்ளைகள் போன்ற குழுக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பல்வேறு சமுதாயத்தினருடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2.18 சிறுவர் பாதுகாப்பு பற்றிய வளங்ளின் நூல் நிலையத்தை அபிவிருத்தி செய்தல்.**

உச்சளவிலான தரத்தைக் கொண்ட தகவல் சேவைகள் மற்றும் தகவல் மூலங்களை பெற்றுக் கொடுத்து சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சிக்கு ஒத்துழைப்புமிக்க சூழலை உருவாக்குவது மற்றும் நிறுவனத்தின் அலுவலர்களின் வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பது இமதன் முக்கிய நோக்கமாகும். சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் அபிவிருத்தி, சட்டம், உளவியல், சிறுவர் உரிமைகள் போன்ற பல்வேறு முக்கிய துறைகள் தொடர்பிலான அறிவை வளர்ப்பது இதன் கீழ் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூல் நிலையத்தை பல்வேறு சிறுவர்கள், ஆய்வாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் நிறுவனங்கள் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

**2.19 சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக:கு கெப்பகரு உபசரணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.**

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பை பரிசோதித்து அவர்களின் உச்சளவிலான நலனை உறுதி செய்கின்ற பாதுகாவலர் மற்றும் அரவணைப்புக்கு சிபாரிசுகளை செய்தல் மற்றும் சகலருக்கும் கல்வி எனும் நிலைபேறான தொணிப்பொருளின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட, ஓரங்கப்பட்டப்படட் மற்றும் அநாதரவான சிறுவர்களுக்கு கல்வி வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

**2.20 சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித ் திட்டம்)ஊீனு)**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவு மற்றும் திறமைகளைக் கொண்டுள்ள பதவியணியை ஏற்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும்.

## 4.அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தின் பொழிப்பு 2022.09.30 இற்கு

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களை சேர்ந்த அரசதுறை அலுவலர்களை விழிப்புணர்வூட்டல். | 0.675 | 0.215 | செயலமர்வுகள் 02<br>நிகழ்ச்சித்திட்டங்கள் 03 | செயலமர்வுகள் 02 | 54 |
| 02 | சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் பற்றிய தேசியக் கொள்கையை தயார் செய்தல் | 0.400 | 0.040 | ஊனுஉஊ கொள்கை | 8 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கைக்கு 2022.08.16 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்தது. | இலங்கையின் சகல பகல்நேர பராமரிப்பு நிலையங்களினதும் சிறுவர்கள் |
| 03 | தேசிய தரவு முறைமையை அபிவிருத்தி செய்தல். | 0.500 | 0.000 | தரவு முறைமை | தேசிய தரவு முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய மேம்படுத்தல்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன. | பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான மற்றும் பாதுகாப்பற்ற சகல சிறுவர்களும் |
| 04 | சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுத்தல் மற்றும் பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள். | 4.000 | 0.809 | நிகழ்ச்சித்திட்டங்கள்250 | நிகழ்ச்சித்திட்டங்கள்02 | 161 |
| 05 | பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சுரகும் பவ்வ) | 2.000 | 1.224 | ளுஊீஊ கையேட்டை தயார் செய்தல்<br>500 குழு நிகழ்ச்சித்திட்டங்கள் | மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள் பற்றிய அனுபவப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. 16 மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகள் 15 இற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. | 83 |
| உப மொத்தம் | | **7.575** | **2.288** | | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 06 | பாடசாலை மாணவர் தலைவர்களுக்கு "மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம்". | 0.500 | 0.000 | நிகழ்ச்சித்திட்டங்கள்25 | மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டத்துக்கு பாடசாலைகளை பதிவு செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்துகொள்ளும் பாடசாலைகளுடன் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள சகல நடவடிக்கைகளும் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளன. | |
| 07 | பாடசாலைகளுக்கு சிறுவர் உளவிய் மற்றும் உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டம் | 1.250 | 0.062 | பயனாளிகள் 100<br>2 நாள் வுழுவு நிகழ்ச்சித்திட்டம்இ மாகாண நிகழ்ச்சித்திட்டம் 9, பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் 8 | வுழுவு நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்துள்ளது. மாகாண நிகழ்ச்சித்திட்டங்கள் 2 நிறைவு. | 80 |
| 08 | திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கான அவசர நிவாரண நிகழ்ச்சித்திட்டம் | 0.500 | 0.300 | சம்பவத்துக்கு அமைய | இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த ரூபா 20,000/- வீதம் 25 மாவட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. | - |
| 09 | ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய, கண்ணுக்கு தென்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவிகள் அல்லது உரிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல். | 4.000 | 0.464 | சிறுவர்கள் 1000 | சிறுவர்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. | 330 |
| 10 | சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் | 0.500 | 0.276 | சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தல் - 369<br>விழிப்புணர்வூட்டல் 7 மாகாணங்களின் ஒழுங்குறுத்தலின் பின்னர் விழிப்புணர்வூட்டல் -320 | மாகாண விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 7 நடாத்தப்பட்டன. சிறுவர் அபிவிருத்தி நிலையங்க்ள 320 ஐ ஒழுங்குறுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 308 |
| உப மொத்தம் | | **6.750** | **1.102** | | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவா்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 11 | சிறுவர் பாதுகாப்பு தொடா்பில் ஊடக திட்டங்கள், தகவல், கல்வி மற்றும் தொடா்பாடல் கருவிகள் அபிவிருத்தி, நாட்களை கொண்டாடுதல் மற்றும் சம்பவங்கள், கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள், உத்தியோகபூர்வ இணையத்தளம், பேஸ்புக் லுழரவுரடிந மற்றும் வுறவைவநச பேணிவருவது உள்ளிட்ட தொடா்புசாதன நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.000 | 0.774 | ஊடக நடவடிக்கைகள்01இ உடல்சார் தண்டனை பற்றிய சுவரொட்டி01இ நாட்களை கொண்டாடல்0இ இணையத்தளத்ஜ பேணிவருதல், சமூக ஊடகங்களை பேணிவருதல் | ஊடக அறிவித்தல்கள்- 9<br>ஊடகவியலாளா் மாநாடுகள் - 55<br>கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகள் -1<br>உத்தியோகபூர்வ இணையத்தளம் இற்றைப்படுத்தப்பட்டது. லுழரவுரடிநஅலைவரிசைஇவுறவைவநசமற்றும் குடீ பக்கம் இற்றைப்படுத்தப்பட்டன. சிறுவா் துா்நடத்தை மற்றும் துஷ்பிரயோகங்களை அறிக்கையிடுவது தொடா்பாக நாளாந்தம் பத்திரிகைகளை ஒழுங்குறுத்தல்ஜநுஊ அச்சு அம்சங்கள் 25 மாவட்டங்களுக்கும் விநியோகித்து முடிக்கப்பட்டன. “சித்துவிலி சித்தம்” 2022 அகில இலங்கை சித்திரம், சுவரொட்டீ மற்றும் காா்டூன் போட்டியின் இறுதித் தோ்வு நடாத்தப்பட்டு வெற்றியீட்டியவா்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளாா்கள். | ஆட்கள் 64 பேருக்கு தகவல் வழங்கியமை. அகில இலங்கை வெற்றியாளா்கள் - 55 போ் (தங்கம் 19, வெள்ளி 18, வெண்கலம் 18) மாவட்ட வெற்றியாளா்கள் 737 (தங்கம் 285, வெள்ளி 234, வெண்கலம் 218) |
| 12 | விசேட விசாரணைகள், விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்குறுத்தல், சிறுவா் துஷ்பிரயோகம் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் தொடா்பான சைபா் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 2.500 | 2.780 | சம்பவம் 1000 | விசேட பொலிஸ் விசாணை பிரிவு நீதிமன்றங்களில் 1947 தடவைகள் ஆஜராகியுள்ளது. (மேல் நீதிமன்றம் 877, நீதவான் நீதிமன்றம் 1137) சட்ட பிரிவு நீதிமன்றங்களில் 34 தடவை ஆஜராகியுள்ளது. 968 பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டள்ளது. சைபா் கண்காணிப்பு முறைப்பாடுகள் 123 கிடைத்துள்ளன. | |
| 13 | சிறுவா்களுக்கு நட்புறவான முறையில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவா்களுக்கு உதவுதல் | 1.000 | 0.505 | சம்பவம் 100<br>பிரிவுகள் 3 | வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்தல் 132, நீதிமன்ற உத்தரவின் பேரில் சாட்சியங்களை வழங்குதல் 102, தட்டெழுத்துப் பிரதிகளை விநியோகித்தல் 170 மேற்கொள்ளப்பட்டன. வீடியோ சாட்சியங்களை வழங்குவதற்கு மேல் நீதிமன்றங்களில் 40 தடவை ஆஜராயியுள்ளதுடன், புதிய வீடியோ சாட்சியங்களை பதிவு செய்யும் பிரிவு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் “லமா பியச” எனும் சிறுவா் பிரிவில் திறந்துவைக்கப்பட்டது. | |
| உப மொத்தம் | | **4.500** | **4.059** | | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 14 | 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் 1929 இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலி நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ளல் | 0.500 | 0.174 | சம்பவங்கள் 10,000 | 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு 6976முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு தொலைபேசி அழைப்புக்கள் 86இ756 கிடைத்துள்ளன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்துள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை7553 ஆகும். | |
| 15 | தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை) ஊஊஊீஞஞ) | 0.600 | 0.255 | காலி மற்றும் அம்பாறை முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் சம்பவங்கள் 175 இற்கு | காலி மாவட்டத்தில் ஒரு சிறுவனுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்கு மற்றும் தேவையான உளவியல் சமூக உதவிகளை வழங்குவதற்கு ரூபா 4000/- ஆன முற்பணத் தொகை வழங்கப்பட்டது. வீடியோ சாட்சியமளிக்க வருகைதந்த 9 பேருக்கு உளவியல் சமூக உதவிகள் வழங்கப்பட்டன. | உளவியல் சமூக தலையீடு செய்யப்பட்ட சிறுவர்கள் - 584<br>உளவியல் சமூக உதவி வழங்கப்பட்ட சிறுவர்கள்34 (பெண்- 22 ஆண்12 )<br>சிறுவர்கள் தொடர்பில் பின்னாய்வு- 432<br><br>வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு சிறுவர்களை ஆயத்தப்படுத்தல் - 36 |
| 16 | தொழில்வல்லுனர்களுக்கு உளவியல் சமூக பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஐநுஊ கருவிகள் போன்றவற்றை தயார் செய்தல் | 1.450 | 0.094 | சிறுவர் துஷ்பிரயோக மீளமைத்தல் பாடவிதானத்தின் 500 புத்தகங்களை அச்சிடல் | சிறுவர் துஷ்பிரயோக மீளமைத்தல் பாடவிதானம்(ஊாடைன யுடிரளந சுநஉழஎநசல ஊரசசஉைரடரஅ) தொடர்பாக தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது. | - |
| | உப மொத்தம் | **2.550** | **0.523** | | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 17 | சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அச்சுறுத்தலுக்கு ஆளாகும் சமுதாயத்தினர் மற்றும் சிறுவர் குழுக்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டம். | 2.500 | 0.408 | நிகழ்ச்சித்திட்டம்100 | புலம்பெயர் ஊழியர்களின் பிள்ளைகளின் பாதுகாப்புக்காகஜேளுனு இனால் குடும்பக் கூட்டம் நிகழ்ச்சித்திட்டம் - 01 சிறுவர் வியாபாரம் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழச்சித்திட்டம் - 091 சுகாதார மருத்துவ அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் - 01, வதிவிட வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 03 மற்றும் தோட்டத்துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 04 | ꩸൦ |
| 18 | சிறுவர் பாதுகாப்பு பற்றிய வளங்ளின் நூல் நிலையத்தை அபிவிருத்தி செய்தல். | 0.200 | 0.000 | நூல் நிலையத்தை பராமரிப்புச் செய்தல் | பல்கலைக் கழக மாணவர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்களுக்கு சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஏனைய சிறுவர் அபிவிருத்தி பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ள நூல்களை வாசிப்பதற்கு நூல் நிலையத்தை பயன்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. | 136 |
| 19 | சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக:கு கெப்பகரு உபசரணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல். | 1.000 | 0.584 | 30 சிறுவர்கள்<br><br>05 சுனாமி சபை | சிறுவர்கள் 2 பேருக்கு ரூபா. 3500/= இ சிறுவர்கள் 17 பேருக்கு ரூபா 5000/= வீதம் ஒரு (1 ) பிள்ளைக்கு ரூபா 8000/= கல்வி உதவியாக மாதாந்தம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சுனாமி நம்பிக்கைப் பொறுப்பாளர் மதிப்பீட்டு சபைகள் 02 நடாத்தப்பட்டன. | சிறுவர்கள் 20 |
| 20 | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்)ஊீனு) | 1.000 | 0.196 | கோரிக்கைகளின் அடிப்படையில் வெபினார் | ராகம மற்றும் கராப்பிட்டிய வீடியோ ஒளிப்பதிவு பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல். மாவட்ட மற்றும் பிரதேச அசலுவலர்கள் இருவருக்கு திறன் அபிவிருத்திக்காக நிதி ஏற்பாடுகள் வழங்கியமை | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் 18 பேர் |
| உப மொத்தம் | | **4.700** | **1.188** | | | |
| முழு மொத்தம் | | **26.075** | **9.160** | | | |

## 7.2.7 இலங்கை மகளிர் பணியகம்

**நோக்கு**

இலங்கை சனசமூகத்திற்கு வலுவூட்டப்பட்ட, விளைதிறன்மிக்க, வெற்றிகரமான பெண்கள் சமுதாயத்தை உருவாக்கும் தேசிய நிறுவனமாதல்.

**செயற்பணி**

தமது அறிவையும், சக்தியையும் உச்சளவிலும், நல்ல முறையிலும் பயன்படுத்தி சுய சக்தியினூடாக சவால்களுக்கு முகம் கொடுக்கின்ற இலங்கைப் பெண்கள் பரம்பரைக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கு முறையான நிறுவனச் சட்டகமொன்றின் ஊடாக திட்டமிடப்பட்ட அறிவார்ந்த சட்டகத்தைப் பெற்றுக் கொடுத்து மேற்கொள்ளும் சமூக மற்றும் பொருளாதார வலுவூட்டல் மூலம் அரசாங்க கொள்கைகளுக்கு இசைவாக பெண்களின் அபிவிருத்திக்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**1. பிரதான செயற்பணிகள்**

1. இலங்கைப் பெண்களை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்கு உகந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. சகல வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பெண்களின் விசேட அம்சங்களை இனங்கண்டு அவர்களுக்கு உகந்தவாறு நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பங்காளர்களாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
3. பெண்களாக இருப்பதனால் அவர்கள் எதிர்நோக்குகின்ற சமூக அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
4. சமூகத்தில் விசேட காரணங்களினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்ற பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
5. ஒட்டுமொத்த பெண்கள் சமுதாயத்தின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை உயர் மட்டத்திற்கு கொண்டுவருவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
6. பெண்களுக்கு ஒரே வலையமைப்பினுள் செயற்படுவதற்கு சமுதாய அடிப்படையிலான மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பெண்களை ஒரே வலையமைப்பினுள் ஒழுங்குபடுத்தல்.

## நிறுவன ஒழுங்கமைப்பு

### நிறுவனப் பதவியணி




அபிவிருத்தி அலுவலர் (24)
மகளிர் அபிவிருத்தி அலுவலர் (1 )
மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் (1 )
ஆலோசனை அலுவலர் (1)
ஆலோசனை உதவியாளர் (2)
முகாமைத்துவ சேவை அலுவலர் (1)
நூலக உதவியாளர் (01)
அலுவலக சிற்றூழியர் (3)

### மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான அலுவலர்கள்

மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள்(361) ஆலோசனை உதவியாளர்கள் ஆலொசனை(278) அலுவலர்கள்(11) மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்கள(119)

### நிலைய பதவியணியினர்

அரவணைப்பு நிலைய பொறுப்பாளர் (01)
அரவணைப்பு உதவி நிலைய பொறுப்பாளர் (01)
அரவணைப்பு நிலைய சாரதி (01)
ஆலோசனை நிலையத்தில் அலுவலக சிற்றூழியர் (01)

### மகளிர் அமைப்பு வலையமைப்பை கட்டியெழுப்புதல்



## 2. பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

**செலவுத் தலைப்பு 1 - தொழில்முயற்சிசார் அபிவிருத்தி மூலம் பெண்களை வலுவூட்டல்**

**1.பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்களை விஸ்தரித்தல்.**

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் தலைமைப் பெண்களை கருத்திட்டங்களில் ஈடுபடுத்தல் மற்றும் அவர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்தல், பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்கள் மற்றும் அக்குடும்ப அங்கத்தவர்களை பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் நேரடியாகப் பங்கேற்கச் செய்தல், அவற்றின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை வளர்ப்பது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**2.கிளிநொச்சி மாவட்டத்தில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களை வலுவூட்டும் தேசிய நிலையத்தை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.**

இந்த நிலையத்தின் மூலம் வட மாகாணம் முழுவதிலும் பரந்து வாழும் விதவையான மற்றும் குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்கள் பற்றிய தரவுகளை சேகரித்தல் மற்றும் தகவல்களை பகிர்ந்தளிப்பதை விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ளல். வட மாகாணத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் செயற்படுத்தும் கருத்திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்பு, ஆலோசனை சேவைகளுக்கு வழிநடாத்துவதும் மேற்கொள்ளப்படும்.

**3."திறிய மன்பெத்த" நிகழ்ச்சித்திட்டம் (திறிய மன்பெத்த கருத்திட்டம் மற்றும் விவசாயம்சார்ந்த வீட்டுக் கைத்தொழில்)**

இலங்கை முழுவதிலும் பரந்துள்ள தொழில்முயற்சியாளர்களான பெண்களை தமது பிரதேசத்திற்கு தனித்துவமிக்க உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தும் உற்பத்திகளில் ஈடுபடுத்தல் மற்றும் பொருளாதார ரீதியாக வலுவூட்டும் சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்களை வலுவூட்டுவதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படும். நடுத்தர அளவிலான கருத்திட்டங்கள் மற்றும் சிறியளவிலான கருத்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**4. கடற்றொழில்சார்ந்த வீட்டுக் கைத்தொழிலுக்கு பெண்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம்**

கடற்றொழில் பரவலாக மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் தொழில் இன்றி இருக்கும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் கடற்றொழில் சார்ந்த உற்பத்திகளை சந்தைக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் புதிய வருமான வழ்முறைகளை அறிமுகம் செய்வதும், அவர்களின் தேவைகளின் அடிப்படையில் சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதும், உரிய மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**5. சம்பந்தப்பட்ட தரப்பினர்களை தொடர்புபடுத்திக் கொண்டு அனர்த்த சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு இடம்பெறுகின்ற அழுத்தங்களை குறைத்துக் கொள்ள விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

அனர்த்தங்களுக்கு இலகுவில் ஆளாகும் அபாயத்தைக் கொண்டுள்ள பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்படுகின்றது. அனர்த்த சந்தர்ப்பங்களை

முன்னதாகவே இனங்காணல், பாதிப்பை குறைத்துக் கொள்ளல், அமுல்படுத்த வேண்டிய திட்டங்களை முன்னதாகவே தயார் செய்வது பற்றி இதன் போது விழிப்புணர்வூட்டப்படுகின்றது.

**6. வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் பெண்களுக்கு மாற்று வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டம்.**

பெண்கள் வெளிநாடு செல்வதன் காரணமாக இடம்பெறுகின்ற குடும்ப பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பற்ற தன்மையைக் குறைத்தல் மற்றும் வெளிநாடு செல்லும் போது அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு துன்புறுத்தல்களை தடுப்பதற்காக மேற்படி பெண்களை தமது குடும்பத்துக்குள்ளேயே தங்கியிருந்து வருடாநம் உருவாக்க தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதற்கு வலுவூட்டுவது இடம்பெறும்.

**7. விசேட காரணங்களின் அடிப்படையில் சமூக உணர்வுப்பூர்வமானதன்மையை இழந்துள்ள பெண்களை பொருளாதார, சமூக ரீதியாக வலுவூட்டும் 'திவியட்ட அருதக்' நிகழ்ச்சித்திட்டம்.**

விசேட காரணங்களினால் சமூக உணர்வுப்பூர்வமானதன்மையை இழந்துள்ள பெண்களை பொருளாதார, சமூக ரீதியில் வலுவூட்டுவதற்காக 'திவியட்ட அருதக்' நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சுக்கு வருகைதந்து அல்லது கஷ்டங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கின்றவர்களின் கோரிக்கைகளுக்கு உதவி வழங்குவதும் இதன் போது இடம்பெறுகின்றது.

**8.சிறைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அக்குடும்பங்களை விழிப்புணர்வூட்டல்**

சிறைப்படுத்தப்படும் பெண்கள் விடுதலை பெற்ற பின்னர் மீண்டும் சிறைக்குச் செல்வதை தடுப்பதற்காக சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல், நீண்டகாலம் சிறைப்படுத்தப்படும் கணவன்மாரின் மனைவியருக்கு குடும்ப பொருளாதாரத்தை கட்டியெழுப்பிக் கொள்ள சுயதொழில்வாய்ப்புக்களை ஆரம்பிக்க வழிநடாத்துவது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

**9.தோட்டத்துறை பெண்களை வலுவூட்டல்**

தோட்டத்துறை சார்ந்த சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் இந்நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்ட தோள்கொடுக்கும் பெண்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக மேலதிக வருமான வழிமுறையொன்றாக சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**10.தேசிய பெண்கள் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்.**

பிரமுகர்கள் 600 பேரின் பங்கேட்புடன் 2022 மார்ச் மாதம் 08 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மகளிர் தின வைபவம் நடைபெற்றது.

தேசிய வைபவத்தை முன்னிட்டு 'அம்மாவருனே' நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டன. நாட்டின் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பெண்கள் பணி அமைப்புக்களின் தொழில்முயற்சியாளர்களான பெண்களின் அபிவிருத்திக்காக அவர்களின் உற்பத்திகள் மற்றும் அமைச்சுக்கள், தனியார்துறையினர், அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அனுசரணையாளர்களான நிறுவனங்களின் விற்பனைக் கூடங்களும் காட்.சிக்கூடங்களுமாக 75 ஐக் கொண்ட வர்த்தகக் கண்காட்சி, சந்தை, அழங்காரக்கலை, சமையல், புகைப்படம் பிடித்தல் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டது.

மேலும் பிரதான நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மகளிர் தினத்தை முன்னிட்டு 2022.03.18.∴19 ஆம்

திகதிகளில் நுவரெலியா மாவட்ட சுற்றுலா மற்றும் தோட்டத்துறையைச் சேர்ந்த பெண்களுக்கான சுகாதார முகாம் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டது..

**11.சந்தை மேம்படுத்தல் மற்றும் பெண்களின் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தை**

பெண்களை ஊக்குவித்தல், ஆக்கபூர்வமானதன்மை மற்றும் உற்பத்திக்களுக்கு கண்காட்சிசார் சந்தையை ஏற்படுத்தல் மற்றும் தொழில்முயற்சிசார் அனுபவப் பகிர்வை நோக்காகக் கொண்டு தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சந்தை மேம்பாட்டுக்காக பெண்களின் சந்தைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

**12. ஒழுங்குறுத்தப்படாத நுண்நிதிக் கடன் திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமிய பெண்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மற்றும் கடன் மூலங்கள் பற்றியும், அவர்களின் கடன் செலுத்தும் ஆற்றல்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டு தரவு முறைமை தயார் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி தரவு முறைமையில் இனங்காணப்பட்ட மாவட்டங்களிலிருந்து பெண்கள் 13 பேருக்கு சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்களுக்கான உதவிகள் தற்பொழுது வழங்கப்பட்டுள்ளன. தரவு முறைமையில் காணப்படுகின்ற தகவல்களுக்கு அமைய எதிர்கால ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் கருத்திட்டமயப்படுத்துவதன் மூலம் அவர்களின் கடன் செலுத்தும் ஆற்றலை வளர்த்தல் மற்றும் வருமானம் ஈட்டுவதை வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கடனின் கீழ் ஆரம்பிக்கப்படும் கருத்திட்டங்களின் வெற்றிகரமான தன்மையை மேம்படுத்தல், அபாயத்தைக் குறைத்தல் மற்றும் பெண்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவது பிரதானமாக மேற்கொள்ளப்படும்.

**13. சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேறும் 18 வயதை தாண்டிய பெண் பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக வாழ்வாதார மற்றும் நலன்புரி வசதிகளைச் செய்துகொடுத்தல்**

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில், 18 வயதை தாண்டிய பெண் பிள்ளைகள் 10 பேருக்கு தையல் பயிற்சியளித்தல் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பது இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

**14. மாற்றுத்திறனாளிகளான பெண்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தியை வலுவூட்டல்**

மாற்றுத்திறனாளிகளாக இருப்பதனால் சமூகத்தின் தயவை மாத்திரம் பெற்றுள்ள பெண்களை சமூக, பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதன் ஊடாக மாற்றுத்திறனாளிகளை சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபடும் பெண்களாக சமூகத்திற்குப் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

**15. கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பெண்கள் அமைப்புக்களின் வலையமைப்பில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்**

பெண்கள் பணி அமைப்புக்களை பெண்களின் நலன்புரி மற்றும் அவர்களை சமூக, பொருளாதார ரீதியாக வலுவூட்டத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.

**16. மாதிரிக் கிராமங்களை பெண்கள்கான ஆலோசனை வழங்குதல்**

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், ஒரு பிரதேச செயலாள் பிரிவை தெரிவு செய்து அதில் கூடுதல் சமூக சிக்கல்களைக் கொண்டுள்ள கிராம அலுவலா் பிரிவுஉரித்தான கிராமத்தில், பொருளாதார ரீதியாக வலுவூட்டக்கூடிய பெண்களை இனங்கண்டு அவா்களின் திறமைகளை மெருகூட்டக்கூடியவாறு தனியான மற்றும் குழு ரீதியான கருத்திட்டங்களை அமுல்படுத்துவது இதன் நோக்கமாகும்.

**17. ஊடகம் மற்றும் பிரச்சாரம் மற்றும் நூல் நிலையத்தை பேணிவருதல்**

இலங்கை மகளிா் பணியகம் மற்றும் அமைச்சினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடா்பில் சமூகத்தை அறிவுறுத்தல், பல்வேறு துறைகளின் ஊடாக பெண்களின் அறிவு, மனப்பாங்கை வளா்த்தல் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவா்களுக்கு சாதகமான ஊடக கலாசாரத்தை வழிப்படுத்துவது நோக்கமாகும். அதன் கீழ் நூல் நிலையத்தை பேணிவருதல், காந்தா சவிய எனும் சஞ்சிகையை தயாா் செய்தல், துண்டுப்பிரசுரங்கள், சான்றிதழ்களை அச்சிடல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் மகளிா் அபிவிருத்தி அலுவலா்களின் கடமை கையேட்டை அச்சிடுவது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**18. முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்னாய்வு**

இலங்கை மகளிா் பணியகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சகல நிகழ்ச்சித்திட்டங்களையும் பதவிநிலை அலுவலா்களின் கண்காணிப்பின் பேரில் மாவட்ட மட்டத்தில் பின்னாய்வு, முன்னேற்ற மீளாய்வு மற்றும் பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மாவட்ட முன்னேற்ற கூட்டங்களை நடாத்தல்.

## செலவுத் தலைப்பு 02 – சிறுவா் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுத்தல்

1. **பெண்கள் அரவணைப்பு நிலையங்களைப் பேணிவருதல்**

துன்புறுத்தல் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு ஆளான பெண்கள் மற்றும் 18 வயதுக்குக் குறைவான பாதிக்கப்பட்ட சிறுவா்களுக்கு தற்காலிக அரவணைப்பு பெற்றுக் கொடுப்பது இதன் மூலும் மேற்கொள்ளப்படுகின்றது. அரவணைப்பு நிலையங்கள் 07 கொழும், மாத்தறை, கம்பஹா, இரத்தினபுரி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றம், பொலிஸ் மற்றும் வைத்தியசாலைகளின் ஊடாக இந்த நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்ற சேவைபெறுவோருக்கு ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்து தேவையான தற்காலி அரவணைப்பை பெற்றுக் கொடுத்து பாதுகாப்பாக சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

2. **ஆலோசனை நிலையங்களைப் பேணிவருதல்.**

தற்போது காணப்படுகின்ற சமூக சிக்கலான நிலைமை மற்றும் பல்வேறு காரணங்களினால் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள, மனஅழுத்தம் அல்லது மனநோய்களுக்கு ஆளாகியுள்ள சேவைபெறுநா்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக களுத்துறை,அநுராதபுரம், மொனராகலை, நுகதலாவ, குருநாகல், இரத்தினபுரி, கட்டுநாயக்க, கேகாலை, மாத்தறை, காலி,கம்பஹா, கண்டி ஆகிய பிரதேசங்களில் 12 இடங்களில் தாபிக்கப்பட்டுள்ள ஆலோசனை நிலையங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்து பேணிவருவது இதன் போது மேற்கொள்ளப்படுகின்றது.




தொழில்முயற்சியாளர்களான பெண்களை சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல் மற்றும் கருத்திட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்

**2022 பயனாளிகள் மற்றும் சேவை பெறுநர்களின் எண்ணிக்கை (மேலே செலவுத் தலைப்புக்கள் இரண்டும் தொடர்பாக)**

## 3. 2023 ஆம் ஆண்டுக்கு இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்.
- அடிக்கடி அனர்த்த அச்சுறுத்தலுக்கு ஆளாகின்ற ஆட்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு அரவணைப்பு மற்றும் வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும், அசௌகரியங்களைக் குறைப்பதற்குமான நிரந்தர வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல்.
- ஆரோக்கியமான பிள்ளையொன்றை உருவாக்குதல், தாய்ப் பாசத்தின் கீழ் பிள்ளையை அரவணைப்புச் செய்தல், மற்றும் பிள்ளைக்கு வழிகாட்டுவதற்காக பெண்களுக்குத் தேவையான அறிவு, திறமைகள் மற்றும் நேரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான முறையியல்களை தாபித்தல்.
- தனியார் தொழில்முயற்சிகளில் பெண்களின் பங்களிப்பை வளர்த்தல்.
- அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான மனிதவளத்தை அபிவிருத்தி செய்தல்.
- தொழிலுக்குச் செல்லாத பெண்கள் பல்வேறு தொழில்முயற்சிகளில் ஈடுபடுவதற்கான தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக குறைந்த வட்டியிலான கடன், தொழில் பயிற்சி மற்றும் சந்தை ஒருங்கிணைப்புக்கு உரிய முறையியல்களை அரச தலையீட்டுடன் தயார் செய்தல்.
- ஒழுங்குறுத்தப்படாத நுண் நிதித் திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமிய பெண்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல்.
- இனங்காணப்படாத சந்தையை இனங்காணல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் போது கிராமிய பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தல்.

1. அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தின் பொழிப்பு -2022.09.30

2. செலவுத் தலைப்பு 1 – தொழில்முயற்சிசார் அபிவிருத்தி மூலம் பெண்களை வலுவூட்டல் - 403-02-03-007-2509

| தொ. இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு 2021 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை / பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்களை விஸ்தரித்தல் | 4.000 | 1.534 | கருத்திட்டம் 70 பயனாளிகள் ‘70 | கருத்திட்டம் 33(கருத்திட்டம் 07 ஏற்பாடுகள் ரூ.மி. 0.809 அனுப்பல்) | 33 |
| 2. | கிளிநொச்சி மாவட்டத்தில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் தலைமைப் பெண்களை வலுவூட்டுவதற்கான தேசயி நிலையத்தை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 1.000 | 0.000 | கருத்திட்டம் 3 பயனாளிகள் 8 | பயனாளிகளை இனங்கண்டு ஆரம்ப அறிவுறுத்தலை மேற்கொண்டு தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன. | - |
| 3. | திறிய மன்பெத்த நிகழ்ச்சித்திட்டம் | 20.000 | 8.070 | கருத்திட்டம் 79 பயனாளிகள் 634 | கருத்திட்டம் 38 (கருத்திட்டம் 16 ஏற்பாடுகள் ரூ.மி. 4.799 அனுப்பல்) | 259 |
| 4. | கடற்றொழில்சார்ந்த வீட்டுக் கைத்தொழிலுக்கு பெண்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல் | 0.500 | 0.000 | கருத்திட்டம் 16 பயனாளிகள் 16 | கருத்திட்டம் 2 ஏற்பாடுகள் ரூ.மி. 0.1 அனுப்பல்) | - |
| 5. | அனர்த்த சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு இடம்பெறுகின்ற அழுத்தங்களை குறைத்துக் கொள்ள விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் (மகளிர் பணி அமைப்புக்களுக்கு) | 0.300 | 0.088 | விழிப்புணர்வூட்டல் 37 பயனாளிகள் 1850 | விழிப்புணர்வூட்டல்கள் 11 நடாத்தல் | 547 |
| 6. | வீட்டுப் பணியாாள்களாக வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் பெண்களின் பொருளாதாரம், குடும்ப பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாற்று வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 1.500 | 0.400 | கருத்திட்டம் 38 பயனாளிகள் 38 | கருத்திட்டம் 8 (கருத்திட்டம் 03 ஏற்பாடுகள் ரூ.மி. 0.120 அனுப்பல்)மூ | 10 |
| 7. | விசேட காரணங்களின் அடிப்படையில் சமூக உணர்வுப்பூர்வமானதன்மையை இழந்துள்ள பெண்களை பொருளாதார, சமூக ரீதியாக வலுவூட்டும் ‘திவியட்ட அருதக’ நிகழ்ச்சித்திட்டம். | 1.500 | 0.454 | கருத்திட்டம் 30 பயனாளிகள் 30 | கருத்திட்டம் 8 (கருத்திட்டம் 1 ஏற்பாடுகள் ரூ.மி. 0.04 அனுப்பல்)மூ | 8 |
| | உப மொத்தம் | 28.800 | 10.546 | | | |

| தொ. இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு 2021 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை / பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 8. | சிறைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அக்குடும்பங்களை விழிப்புணர்வூட்டல் | 0.500 | 0.135 | சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்கள் 10, பயனாளிகள் 10 | சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டம் 3 (கருத்திட்டம் 1 ஏற்பாடுகள் ரூ.மி. 0.055 அனுப்பல்)ழூ | 3 |
| 9. | தோட்டத்துறை பெண்களை வலுவூட்டல் | 1.000 | 0.240 | கருத்திட்டம் 25 பயனாளிகள் 25 | கருத்திட்டம் 6 (கருத்திட்டம் 3 ஏற்பாடுகள் ரூ.மி. 0.120 அனுப்பல்)ழூ | 6 |
| 10. | பெண்கள் தினத்தை முன்னிட்டு தொழில்முயற்சியாளர்களான பெண்கள் அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டம் | 1.649 | 1.605 | களுத்துறை, நுவரெலியா, அநுராதபுரம் மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தேசிய வைபவம் | மகளிர் தினத்தை முன்னிட்டு தொழில்முயற்சியாளர்களான பெண்களை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பிரதான வைபவம் | 600 |
| 11. | ஒழுங்குறுத்தப்படாத நுண்நிதிக் கடன் திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமிய பெண்களை இனங்காணல் மற்றும் தரவு முறைமையை தயார் செய்தல் மற்றும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் | 2.000 | 0.500 | 8 மாவட்டங்களில் சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்கள் 40 | 1 மாவட்டங்களில் சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்கள் 13 | 15 |
| 12. | சந்தை மேம்படுத்தல் மற்றும் பெண்களின் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தைகளை நடாத்தல் | 0.200 | 0.040 | சந்தை 10, பயனாளிகள் 500 | , சந்தைகள் 02 | 125 |
| 13. | வருமான உருவாக்கப் பயிற்சி | 0.700 | 0.363 | பயிற்சிகள் 42 பயனாளிகள் 1050 | பயிற்சிகள் 22 ஐ நடாத்தல் (பயிற்சி ஏற்பாடுகள் - ரூ.மி. 0.66 அனுப்பல்)ழூ | 555 |
| 14. | சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேறும் 18 வயதை தாண்டிய பெண் பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக வாழ்வாதார மற்றும் நலன்புரி வசதிகளைச் செய்துகொடுத்தல் | 1.000 | 0.000 | பயிற்சிகள் 2, உபகரணம் வழங்கல், பயனாளிகள் 20 | , ஜுக்கி மெசின் கொள்வனவு ஏற்பாடுகள் - ரூ.மி. 0.325 அனுப்பல். ழூ | - |
| 15. | மாற்றுத்திறனாளிகளான பெண்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தியை வலுவூட்டல் | 1.000 | 0.197 | சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்கள் 20 பயனாளிகள் 20 | சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்கள் 5 | 5 |
| 16. | கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பெண்கள் அமைப்புக்களின் வலையமைப்பில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் | 0.420 | 0.309 | நிகழ்ச்சித்திட்டங்கள் 21 பயனாளிகள் 608 | நிகழ்ச்சித்திட்டங்கள் 9 கருத்திட்டங்கள் 2 | 303 |
| **உப மொத்தம்** | | **8.469** | **3.389** | | | |

| தொ. இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு 2021 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை / பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 17. | மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல் | 1.000 | 0.400 | கருத்திட்டம் 6 பயனாளிகள் 27 | கருத்திட்டம் 1 | 5 |
| 18. | மகளிர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.166 | 0.130 | நிகழ்ச்சித்திட்டம் 12 | சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் 5, ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் 4 ஐ நடாத்தல். மகளிர் தினத்தை முன்னிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (நுவரெலியா, களுத்துறை) | 400 |
| 19. | 2021 மற்றும் 2022 அம் ஆண்டின் நிகழ்ச்சித்திடட்ங்களின் செலவினம் (கட்டுநிதி இல்லாத 2021 மற்றும் 2022 இன் கையிலுள்ள பட்டியல்களுக்கு) | 4.564 | 3.568 | கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயிற்சி | கருத்திட்டங்கள் 10 ஐ நடாத்தல், நடமாடும் விற்பனைக் கூடங்கள் 7 வழங்குதல், மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 1 ஐ நடாத்தல் மற்றும் எழுதுகருவி செலவினம் | 57 |
| 20. | ஊடகம் மற்றும் பிரச்சாரம் | 2.500 | 0.661 | நூல் நிலையத்தை பேணிவருதல், ஊடக நடவடிக்கைகள் | பத்திரிகை, சஞ்சிகை, புத்தகம், மகளிர் தின காந்தா சவிய சஞ்சிகைகள் 1000 | - |
| 21. | கண்காணிப்பு பின்னாய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வு | 0.500 | 0.029 | மாவட்ட முன்னேற்ற கூட்டங்கள் 51 மற்றும் கண்காணிப்பு மற்றும் பின்னாய்வுக் கூட்டம் 1 | மாவட்ட முன்னேற்ற கூட்டங்கள் 11, கொழும்பு, களுத்துறை, கம்பஹா கண்காணிப்பு மற்றும் பின்னாய்வுக் கூட்டம் 3 (மாவட்டங்கள் 5 இற்கு ஏற்பாடுகள் ரூ.மி. 0.041 அனுப்பல்)* | 119 |
| **உப மொத்தம்** | | **8.730** | **4.788** | | | |
| **மொத்தம்** | | **46.000** | **18.723** | | | |

**செலவுத் தலைப்பு 2 – சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுத்தல்(403-02-03-004-2509)**

| தொ. இல. | கருத்திட்டம் / பணி | நிதிசார் இலக்கு 2021 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை / பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பெண் | ஆண் |
| 1 | தற்போது காணப்படுகின்ற மகளிர் அரவணைப்பு நிலையங்களை பராமரிப்புச் செய்தல் (07) கம்பஹா, இரத்தினபுரி, கொழும், மாத்தறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு | 14.660 | 1.195 | 7 நிலையங்களின் சிறு செலவினங்கள் மற்றும் பாதுகாப்புக் கொடுப்பனவு | நிலையங்களை பராமரிப்புச் செய்யும் செலவினம் | 14 | - |
| 2 | ஆலோசனை நிலையங்களை பராமரிப்புச் செய்தல் (12) | 1.302 | 0.725 | 12 நிலையங்களை பராமரிப்புச் செய்யும் செலவினம் (சிறு செலவினம் மற்றும் குத்தகை வாடகை) | 12 நிலையங்களை பராமரிப்புச் செய்யும் செலவினம் | 550 | - |
| 3 | 2021 ஆம் ஆண்டுக்கு கையிலுள்ள பட்டியல்கள் | 1.981 | 1.981 | | | | |
| **மொத்தம்** | | **17.943** | **3.901** | | | 564 | |

*

1.கருத்திட்டத்தை குறித்த காலாண்டில் மேற்கொள்ள முடியவில்லை. மாவட்டத்திலிருந்து ஏற்பாடுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

2. மாவட்டத்தில் கட்டுநிதி இல்லாமை காரணமாக கருத்திட்டத்தை குறித்த காலாண்டில் நிறைவேற்ற முடியவில்லை.

3. 2022 ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய அத்தியாவசியமல்லாத மற்றும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## 7.2.8 தேசிய மகளிர் குழு

1993 இல் இலங்கை அரசாங்க அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மகளிர் சமவாயத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தல் மற்றும் வழிப்படுத்துவதற்காக 1993 மார்ச் மாதம் 08 ஆம் திகதி தேசிய மகளிர் குழு தாபிக்கப்பட்டது.

### நோக்கு

சமஅந்தஸ்து உறுதி செய்யப்பட்டதும், வன்முறையற்றதுமான பெண்களுக்கு சாதகமான இலங்கைச் சமூகம்

### செயற்பணி

இலங்கை பெண்களின் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தல், சமஅந்தஸ்தை உறுதிசெய்தல் மற்றும் பூரண அபிவிருத்திக்கு வழிவகுக்கின்ற கொள்கைகள், சட்டக் கட்டமைப்புக்களை தயார் செய்வதற்கான சிபாரிசுகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் முறையாக அமுல்படுத்த ஊக்குவித்தல், கண்காணிப்புச் செய்து மதிப்பீடு செய்தல்.

### 1. பிரதான செயற்பணி

- பால்நிலையின் அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வித்தியாசங்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல், அவதானித்தல் மற்றும் அது சம்பந்தமாக நிருவாகிகள், அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது சபைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றை சமர்ப்பித்தல்.
- பெண்களின் சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறுவது தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகள், நிவாரணங்கள், சட்ட உதவிகள் அல்லது மத்தியஸ்தம் செய்கின்ற சேவைகளுக்கு அரசாங்க அல்லது அரசசார்பற்ற அமைப்புகளிடம் சமர்ப்பித்தல்
- இந்த செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், குறித்த நிருவாக அதிகாரிகளிடமிருந்து வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அறிக்கைகளை நாட்டுக்குள் பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் விடயத்தில் சட்ட ரீதியான மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளினால் ஏற்படுகின்ற தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் சமவாயத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள உதவுவதும் அந்த ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மீள திருத்தியமைப்பதற்கான சிபாரிசுகளை சமர்ப்பித்தலும்.
- பெண்களின் அந்தஸ்து தொடர்பாக விடயப்பொறுப்பு அமைச்சரினால் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக அல்லது பொருத்தமானதென குழு சிந்திக்கின்றவாறு செயற்படுவதற்கு அறிவுரை வழங்குதல்.

- மகளிர் அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயற்றிட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தல்.

**1.1 முறைப்பாட்டு நிலையம்**

1999 ஆம் ஆண்டு இந்த நிலையம் தாபிக்கப்பட்டதுடன், பால்நிலைசார் அடிப்படையிலான வித்தியாசங்கள், அநீதிகள் ஆகிய உரிமை மீறல்கள் தொடர்பில் ஆண், பெண் ஆகிய இரு தரப்பினரிடமிருந்தும் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், மேற்படி முறைப்பாடுகளை விசாரணை செய்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் உதவி, ஆலோசனை சேவைகள் உட்பட நிவாரணம் வழங்குவதும் இதன் செயற்பணியாகும்.

முறைப்பாட்டு நிலையத்திற்கு வருகைதந்து, கடிதம் மூலம், மின்னஞ்சல் மூலம் மற்றும் தொலைபேசி மூலம் அலுவலக நேரத்தில் முறைப்பாடுகளை கையளிக்க முடியும்.

**1.2 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை**

1938 தொலைபேசி உதவிச் சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையமானது, கூட்டாக பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல், அநீதிகள், பாரபட்சம் காட்டல், உரிமை மீறல், பாலியல் தொந்தரவு மற்றும் சைபர் குற்றச் செயல்கள் உட்பட பல்வேறு முறைப்பாடுகளுக்கும் நிவாரண சேவைகளை வழங்குகின்றது.

ஆரம்பத்தில் அலுவலக நேரத்தினுள் மாத்திரம் இயங்கிவந்த 1938 தொலைபேசி உதவிச் சேவையானது வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற இலவச தொலைபேசிச் சேவையாக 2020 மார்ச் மாதம் 23 ஆம் திகதி முதல் இயங்கிவருகின்றது.

இந்த தொலைபேசிச் சேவையானது சட்ட அலுவலர் ஒருவர், ஆலோசனை அலுவலர்கள் மூவர் மற்றும் முறைப்பாடுகளை நேரடியாக கையேற்கும் அலுவலர்கள் 11 பேரைக் கொண்ட குழுவினால் இயக்கப்பட்டு வருகின்றது. இதன் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், வழிநடாத்தல் என்பன வழிப்படுத்தல் குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன், பின்னாய்வு செய்யும் பணிகளும் மேற்படி அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், சார்க் அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்புடன் இந்த சேவையானது புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வினைத்திறன் மற்றும் நவீன மென்பொருள்களைக் கொண்ட கணினிச் சேவையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 2. 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 2.1 கொள்கைசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

#### 2.1.1 கொள்கைசார் கலந்துரையாடல்கள்

- **தேசிய மகளிர் குழுவை அரசின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக மாற்றியமைத்தல்.**

தேசிய மகளிர் குழுவை, மகளிர் ஆணைக்குழுவாக மாற்றியமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அப்பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **தேசிய மகளிர் குழுவின் மாதாந்தக் கூட்டங்கள்**

தேசிய மகளிர் குழுவின் கல்விமான்கள் குழு மாதம் ஒரு தடவை நடாத்தும் குழுக் கூட்டத்தின் போது உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளுக்கு அமைய மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு அமைய கொள்கைகளை வகுப்பதுடன், 2022 ஆகஸ்ட் மாதம் வரை 05 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்காக ரூபா மில்லியன் 0.253 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

- **இளம் தாய்மாருக்கான நெகிழ்வுத்தன்மைமிக்க வேலைச் சூழலை ஏற்படுத்துவதற்கான கொள்கைசார் கலந்துரையாடல்**

இன்றைய குறுகிய குடும்பங்களில் தொழில்வாய்ப்புக்காக செல்லும் தாய்மாரின் பிள்ளைகளை அரவணைப்புச் செய்யத் தேவையான ஏற்பாடுகளை செய்துகொடுப்பதை அரசாங்கம் கட்டாயமாக மேற்கொள்ளல் வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தாயின் மனஅழுத்தத்தை குறைத்தல், தொழிலின் விளைதிறனை மேம்படுத்தல், பிள்ளைக்குப் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பைச் செய்துகொடுப்பது நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.
கல்விமான்கள் குழுவின் பங்கேட்புடன் கலந்துரையாடல்களை நடாத்தி அவர்களின் கருத்துக்கள், பிரேரணைகளின் மூலம் கொள்கைகளை வகுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய, தற்போது இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், தேவையனா தரவுகள் மற்றும் தகவல்களுக்கு அமய அடுத்த சுற்றுக் கலந்துரையாடலின் போது கொள்கையை வரைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 2.2 பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை ஒழிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

#### 2.2.1 சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சித் திட்டங்கள்

- **"முதல் பாடசாலை தாயின் கர்ப்பமாகும" நிகழ்ச்சித்திட்டங்களின் தொடர்**

2022 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "முதல் பாடசாலை தாயின் கர்ப்பமாகும்" நிகழ்ச்சித்திட்டம் களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட பிரதேச செயலகத்துக்கு உரித்தான இத்தேபான விஹாரையில் 2022.03.21 ஆம் திகதி நடைபெற்றதுடன், அதில் கர்ப்பிணித்தாய்மார் 120 பேர் பங்கேற்றார்கள்.
கர்ப்பிணித் தாய்மாருக்கான சமய நிகழ்ச்சிகள் மற்றும் அவர்களின் உடல்சார், உளவியல் சுகாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான இசை நிகழ்ச்சித்திட்டம் கர்ப்பிணித் தாய்மாருக்கு உபகரணங்களின் தொகுதிகளை வழங்கிவைப்பதும் இதன் போது மேற்கொள்ளப்பட்டது.

இதன் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் புத்தளம் மாவட்டத்தின் ஆரச்சிகட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் பீகொக் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு பகுதிகளாக நடாத்தப்பட்டதுடன், இதன் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் அனுசரணையுடன் கர்ப்பிணித் தாய்மார் 100 பேரின் பங்கேட்புடன் இசை உளவியல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உபகரணங்களை வழங்கிவைக்கும் நிகழ்வு என்ற வகையில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் பகுதியாக விவாவம் செய்ய எதிர்பார்த்துள்ள இளைஞர், யுவதிகளை விழிப்புணர்வூட்டும் வகையில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது,

## 2.3 ஆலோசனை ∴ விழிப்புணர்வூட்டல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

### 2.3.1 பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகளை விழிப்புணர்வூட்டல்

-  **பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக செயற்படும் போது பொலிஸ் அலுவலர்களை உணர்வுப்பூர்வமானவர்களாக்கல்.**

பொலிஸ் அலுவலர்களை உணர்வுப்பூர்வமானவர்களாக்குவதன் மூலம் துன்புறுத்தலுக்கு ஆளான பெண்கள் தொடர்பில் சாதகமான மனப்பாங்குசார் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு குடும்ப வன்முறை சட்டம் மற்றும் பால்நிலைசார் எண்ணக்கரு தொடர்பில் பொலிஸ் அலுவலர்களை உணர்வுப்பூர்வமாக்குவது மேற்கொள்ளப்படுகின்றது.

பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று, 1938 உதவித் தொலைபேசி சேவைக்கு கூடுதலாக குடும்ப வன்முறை முறைப்பாடுகள் பதிவாகியுள்ள மாவட்டமொன்றான களுத்துறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு 2022.03.22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக ஒழிப்பு பணியகத்தின் நிலையப்பொறுப்பதிகாரிகள், அமைச்சின் விடயப்பரப்புடன் சம்பந்தப்பட்ட மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள், 1938 அலுவலர்கள் உட்பட 100 பேர் இதில் கலந்துகொண்டார்கள்.

குடும்ப வன்முறை சட்டம் தொடர்பாக மற்றும் அதன் நடைமுறைசார்ந்த தோற்றப்பாடுகள் பற்றி,“பெண், சட்டம் மற்றும் பொலிஸ் சேவையின் வகிபாகம்”, பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் பொலிஸ் அலுவலர்களின் செயற்பணி போன்ற முக்கியமான பல விடயங்கள் தொடர்பில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் போது விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.3.2 பொதுப் போக்குவரத்தில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்

-  **யாவருக்கும் அழகிய பயணம் எனும் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடர்**

2022 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பூரண நிதி அனுசரணையின் கீழ் முதலாவது காலாண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பஸ் வண்டி உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தலை தடுப்பது பற்றி விழிப்புணர்வூட்டுவது இதன் போது இடம்பெற்றது.

யாவருக்கும் அழகிய பயணம் எனும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் 2022 மார்ச் மாதம் 24 ஆம் திகதி யாழ்ப்பாணம் பஸ் பிரதான பஸ் தரிப்பு நிலையத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது.

இதன் போது யாழ்ப்பாணம் பிரதான பஸ் தரிப்பு நிலையம் மற்றும் அதனைச் சூழவுள்ள பயணிகள், பொது மக்களைவிழிப்புணர்வூட்டுவதற்காக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், பஸ் வண்டிகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் போது பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை எதிர்ப்பதற்குத் தேவையான வலுவூட்டல் மேற்கொள்ளப்பட்டது.

-  **உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளை விழிப்புணர்வூட்டல்**

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நடாத்தப்பட்டது. இதன் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் 2022.01.15 ஆம் திகதி கிரிதலே பொலன்னறுவை டியர் பார்க் ஹோட்டல் வளவில் நடைபெற்றது. இதன் போது பெண்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமாதல் மற்றும் 1938 பெண்கள் உதவித் தொலைபேசிச் சேவை தொடர்பாக உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

## 2.4 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவையை வலுவூட்டும் விசேட நிகழ்ச்சித்திட்டம் (சார்க் அபிவிருத்தி நிதியம்)

### 2.4.1. மகளிர் உதவித் தொலைபேசிச் சேவையில் கடமையாற்றுகின்ற அலுவலர்களுக்கு பயிற்சிப் பாடநெறிகள், டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் ஆலோசனை பாடநெறிகளை கற்பதற்கான பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

துன்புறுத்தலுக்கு ஆளாகின்ற பெண்களுக்கு நிவாரணங்களை செய்துகொடுப்பதை மென்மேலும் விளைதிறன்மிக்கதாக்குவதை நோக்காகக் கொண்டு 1938 பெண்கள் உதவித் தொலைபேசிச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி இதன் போது மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக ஆலோசனை பணிகளின் திறன்களை மேம்படுத்துவதற்கு ஆலோசனை பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறியை கற்பதற்கு வழிநடாத்தப்பட்டதுடன், இதுவரை அலுவலர்கள் 10 பேர் இந்தப் பாடநெறியை கற்று முடித்துள்ளார்கள்.

### 2.4.2 துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண்களுக்கான பெண்கள் தடுத்வைக்கும் நிலையத்தை நிர்மாணித்தல்

பெண்களுக்கான தடுத்துவைக்கும் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ள காணியின் மண் தொடர்பிலான பரிசோதனை, அளவை நடவடிக்கைகள், காணி அமைச்சுக்கு சுவீகரிக்கும் பணி போன்ற நடவடிக்கைகள் மற்றும் கட்டிடத்திட்டத்தை தயார் செய்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த உத்தேச பெண்களை தடுத்துவைக்கும் நிலையத்தின் கட்டிட வரைபடம் கல்வி அமைச்சின் பொறியியல் பிரிவின் ஊடாக தயார் செய்துகொள்ளப்பட்டுள்ளது. கட்டிட வரைபடம் தொடர்பான மதிப்பீடு களுத்துறை பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இது அமைச்சின் செயலாளர் மற்றும் மேல் மாகாண பிரதம செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டிடத்தை நிர்மாணிக்க சார்க் கருத்திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், மேற்படி ஏற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை.

# 4. அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் பொழிப்பு - 2022.09.30

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம்(ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | தேசிய மகளிர் குழுவை அரசின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக மாற்றியமைத்தல் - மகளிர் ஆணைக்குழுவை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 0.050 | ` | அமைச்சரவை பத்திரத்தை தயார் செய்தல் | தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| 2 | **கொள்கைகளை வகுத்தல்** | | | | | |
| | i.இளம் தாய்மாருக்கான நெகிழ்வுத்தன்மைமிக்க வேலைச் சூழலை ஏற்படுத்துவதற்கான கொள்கைகளை வகுப்பதற்கு கலந்துரையாடல்களை நடாத்தல் | 0.015 | 0.005 | கலந்துரையாடல் | இரண்டு சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு சிபாரிசுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. | இளம் தாய்மார் |
| | ii. வெளிநாடு செல்லும் பெண்களின் பொருளாதாரம் மற்றும் குடும்பப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசிய கொள்கையை தயார் செய்தல் | | | கொள்கையை தயார் செய்தல் | ஆய்வின் பெறுபேறுக்கு அமைய அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகின்றது | வெளிநாடு செல்லும் பெண்கள் |
| 3 | தேசிய மகளிர் குழுவின் மாதாந்தக் கூட்டங்களை நடாத்தல் | 0.530 | 0.253 | கலந்துரையாடல்08 | 05 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. | |
| 4 | i. மகிழ்ச்சியான குடும்பம் கருத்திட்டம் - ஆய்வை மேற்கொள்ளல் | 2.000 | - | அபிவிருத்தி திட்டத்தை அமுல்படுத்தல் | ஆய்வின் ஆரம்பகட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | |
| | ii.தரவு முறைமையை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பாதுகாப்பான முன்னோடிக் குழுக்களை தாபித்து அமுல்படுத்தல் | | | பாதுகாப்பற்ற குடும்பங்களை கண்காணிப்புச் செய்தல் | இனங்காணப்பட்ட குடும்பங்களை மையமாகக் கொண்டு குருநாகல் மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன | |
| | iii. இசை, நாடகம், விளையாட்டு உள்ளிட்ட சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதை கிராமிய ரீதியாக அமுல்படுத்துவதன் மூலம் துன்புறுத்தலை ஒழிப்பதற்கு சமுதாயத்தை ஊக்குவித்தல் | | | நிகழ்ச்சித்திட்டம்-01 | | |
| | iv. கமத்தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்த செயற்படுதல் | | | புதிய கருத்திட்டங்களை அறிமுகம் செய்தல் | | |
| | v. பாதிக்கப்பட்ட பெண்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளில் ஈடுபடுத்தல் | | | புதிய தொழில்முயற்சிகளில் பெண்களை ஈடுபடுத்தல் | | |
| | vi. முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளான பெண்களுக்கு நலன்புரி வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் பொருளாதார பாதுகாப்புக்காக செயற்படுதல் | | | நலன்புரி வசதிகளை செய்து கொடுத்தல் | | |
| | **உப மொத்தம்** | 2.595 | 0.258 | | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவா்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | **பெண்களுக்கு எதிராகஇடம்பெறும் சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் ஒழிப்பதற்கான சா்வதேச 16 நாட்கள், சா்வதேச மகளிா் தினம் உட்பட சா்வதேச தினங்களை முன்னிட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்** | | | | | |
| 5 | சா்வதேச மகளிா் தின நிகழ்ச்சித்திட்டங்ளை நடாத்தல் | 0.500 | 0.470 | "முதல் பாடசாலை தாயின் கா்ப்பமாகும்" நிகழ்ச்சித்திட்டத்தை களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தல் | நிகழ்ச்சித்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. | பயனாளிகளின் எண்ணிக்கை=220 |
| 6 | சா்வதேச 16 நாட்கள் நிகழ்ச்சித்திட்டம் | 0.600 | ” | பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை குறைத்தல் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல். | 11/ 25 முதல்12/10 வரையான காலப்பகுதிக்குள் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படவுள்ளன. | |
| 7 | **ஊடக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்** | | | | | |
| | i."காந்தா பிரபோதய" வானொலி நிகழ்ச்சி | 0.200 | ” | நிகழ்ச்சிகள் - 05 | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், ஒளிப்பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஒட்டுமொத்த பெண்கள் |
| 8 | **விழிப்புணா்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்** | | | | | |
| | i.பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் சம்பவங்கள் தொடா்பாக செயற்படும் போது பொலிஸ் அலுவலா்களை உணா்வுப்பூா்வமாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.800 | 0.319 | நிகழ்ச்சித்திட்டம்- 02 | களுத்துறை மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டதுடன், இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்தை இரத்தினபுரி மாவட்டத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | பயனாளிகளின் எண்ணிக்கை = 100 |
| | ii.தேசிய இளைஞா் சேவைகள் மன்றத்துடன் இணைந்து பாலியல் கல்வி (இனப்பெருக்க சுகாதாரம்) பற்றி இளைஞா் சமுதாயத்தை அறிவுறுத்தல் | 0.100 | ” | இனப்பெருக்க சுகாதாரம் பற்றி இளைஞா் சமுதாயத்தை அறிவுறுத்தல்களை நடாத்தல் | நிகழ்ச்சித்திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | இளம் சமுதாயத்தினா் |
| | iii.மேலதிக நேர வகுப்பு உட்பட உயா் கல்வி நிறுவனங்களின் சிறுவா்களை விழிப்புணா்வூட்டல். | 0.150 | ” | நிகழ்ச்சித்திட்டம்-01 | மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிர.செயலகங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சகல சிறுவா்களும் |
| | iv..விவாகத்துக்கு முன்னரான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 0.200 | ” | குடும்ப வாழ்க்கை பற்றிய அறிவை மேம்படுத்தல் | செலவின மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நாச்சாதூவ பி.செ. அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | திருமணம் செய்ய எதிா்பாா்த்துள்ளவா்கள் |
| | v. பாதிக்கப்பட்ட பெண்களின் திறன் அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 0.100 | ” | பெண்கை பொருளாதார ரீதியாக மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டல் | கருத்திட்ட அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக திருகோணமலை பி.செ. அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பாதிக்கப்பட்ட பெண்கள் |
| | vi.சேவை நிலையத்தில் இடம்பெறுகின்ற வன்முறைக்கு எதிராக எழுந்திருப்பது பற்றிய அறிவை மேம்படுத்தல் | 0.250 | ” | நிகழ்ச்சித்திட்டம்-01 | மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிர.செயலகங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| | **உப மொத்தம்** | 2.900 | 0.789 | | | |

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | எவை. புலம்பெயர் பெண்களின் குடும்பங்களின் பிள்ளைகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் (பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் பற்றி) | 0.100 | ̶ | நிகழ்ச்சித்திட்டம் 01 | குருநாகல் மாவடத்தின் ரிதீகம பி.செ. அலுவலகத்தில் 2022.10.22 ஆம் திகதி மற்றும் 24 ஆம் திகதிகளில் இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | |
| | எவை. தோட்டத்துறையில் பெண்களின் விழிப்புணர்வை மேம்படுத்தல் | 0.350 | ̶ | நிகழ்ச்சித்திட்டம் 03 | நிகழ்ச்சித்திட்டத்தை அக்டோபர் மாதம் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |
| | ஓை. 1938 அலுவலர்களின் திறன் பயிற்சி மற்றும் மனஅழுத்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 0.150 | – | 1938 அலுவலர்களின் சேவையை விளைதிறன்மிக்கதாக மாற்றுதல் மற்றும் வினைத்திறன்மிக்கதாக்குதல் | நிகழ்ச்சிதிதட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. | |
| **9** | **பெண்களின் அரசியல் பங்கேட்பை மேம்படுத்தல்** | | | | | |
| | ை. பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகள் தேர்தல்களின் போது பெண்களுக்கான பங்கீட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல் | ̶ | ̶ | சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தல் | தேர்தல்களின் போது பெண்களுக்கு கூடுதல் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதற்கு அரசியல் கட்சிகள் விழிப்புணர்வூட்டப்பட்டன. | சகல பெண்களும் |
| | ைை. உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளை விழிப்புணர்வூட்டல் | 0.010 | 0.009 | நிகழ்ச்சித்திட்டம் 01 | முதலாவது நிகழ்ச்சித்திட்டம் பொலன்னறுவை மாவட்டத்தில் நடாத்தப்பட்டது. | பயனாளிகளின் எண்ணிக்கை = 150 |
| | வேறு செலவினங்கள் | 0.395 | ̶ | | | |
| | **உப மொத்தம்** | 1.005 | 0.009 | | | |
| | **முழு மொத்தம்** | **6.500** | **1.056** | | | |

## UNFPA ஏற்பாடுகளின் கீழ் தேசிய மகளிர் குழுவினால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொ. இல. | கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் 2022.09.30 ஆம் திகதிக்கு | பயனாளிகளின் எண்ணிக்கை /பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | குறைந்த வயதில் கர்ப்பமடைதல் மற்றும் விவாகமாகாத தாய்மாரின் பாதுகாப்பானதன்மை பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்தல் | 0.022 | - | கொள்கையை தயார் செய்தல் | நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது | |
| 2 | பொதுப் போக்குவரத்தில் இடம்பெறுகின்ற பாலியல் துன்புறுத்தல்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் யாவருக்கும் அழகிய பயணம் எனும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 0.509 | 0.156 | ஆலோசனை மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | முதலாவது நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடாத்தப்பட்டது. இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்தை பதுளை மாவட்டத்தில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |
| 3 | பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக செயற்படும் போது பொலிஸ் அலுவலர்களை உணர்வுப்பூர்வமானவர்களாக்கல். | 0.600 | - | நிகழ்ச்சித்திட்டம்-02 | அக்டோபர் 14 இரத்தினபுரி மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்த ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது | |
| 4 | சர்வதேச 16 நாட்கள் நிகழ்ச்சித்திட்டம் | 0.384 | - | | நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரையான காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |
| | **மொத்தம்** | **1.515** | **0.156** | | | |